# இயேசுவே வாரும்

காலேப் யோசுவா
செல்: 9444701953, 9444709980
மின்னஞ்சல் : brocalebjoshua@gmail.com
வலைத்தளம்: www.yesuvaevaarum.com
முகநூல்: www.facebook.com/yesuvaevaarum

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்.வெளி.22.20

32,ஜெமிளத்திராஜ் நகர்,
எரையமங்கலம் ரோடு,
மப்பேடு, பேரம்பாக்கம் (வழி)
திருவள்ளூர் மாவட்டம் - 631402

## தேவத்துவத்தில் பரிசுத்த ஆவி (Holy Spirit / திவ்விய இஸ்பிரீத்து சாந்து) மூன்றாவது நபர் அல்ல.

## ஒரே ஆவி உண்டு (One Spirit) தேவன் ஆவியாயிருக்கிறார். (God is a Spirit) ஆக பரிசுத்த ஆவியே தேவன்.

1. தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிற வேதவாக்கியங்களில், அதாவது நம்முடைய கரத்தில் உள்ள பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் அடங்கிய பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையில் ஒரே ஆவி உண்டு. There is One Spirit என எபே.4:4ல் காண்கிறோம். இந்த ஆவிதான் தேவன் என்று பார்க்கிறோம். அதாவது தேவன் ஒரு ஆவி. God is a Spirit. (யோ.4:24) இந்த ஆவியாகிய தேவனை குறித்து சங்கீதக்காரன் தாவீது : உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? நான் வானத்துக்கு ஏறினாலும் நீர் அங்கே இருக்கிறீர், நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும். நீர் அங்கேயும் இருக்கிறீர் என்கிறான். சங்.139:7,8. யாவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளக்கூடுமோ? நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்கிறார். ஏரே.23:24. அவர்கள் பாதாளபரியந்தம் தோண்டிப் பதுங்கிகொண்டாலும் என் கை அவ்விடத்திலிருந்து அவர்களை பிடித்துக்கொண்டு வரும். அவர்கள் வான பரியந்தம் ஏறினாலும் அவ்விடத்திலிருந்து அவர்களை இறங்கப் பண்ணுவேன். ஆமோஸ்.9:2 (இயேசு: இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்கிறார். மத்.18:20 அதாவது யாரும் அவருடைய ஆவிக்கு மறைவாக எங்கும் ஒளித்திருக்க முடியாது என கூறி, தன்னை அந்த ஆவியாகிய தேவனுக்கு ஒப்பிட்டு, நானே அவர் என்கிறார். கர்த்தரே ஆவியானவர். (Lord is that Spirit) ஆக ஒரு ஆவி உண்டு. அந்த ஆவிதான் தேவன். அவர் கர்த்தர். அதாவது ஒரே ஆவி, ஒரே தேவன், ஒரே கர்த்தர். அந்த ஒரே ஆவி தேவனாக இருப்பதால் ஆவியானவர் என்று உயர்தினையில் அழைக்கப்படுகிறார். ஆனால் ஆவியாகிய தேவனுக்கு ரூபம் ஒன்றும் இல்லை. இதை நாம் மறந்து விடக்கூடாது. கர்த்தர் ஒரேபிலே அக்கினியில் நடுவிலிருந்து பேசின நாளில் அவர்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை. (உபா.4:15) ஆக தேவத்துவத்தில் இருவருக்கோ மூவருக்கோ அதற்கு மேற்பட்டவர்களுக்கோ இடமில்லை. ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லை.(There is no other God except One) (1கொரி.8:4).

2. தேவத்துவம்

அ. நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க மனுஷருடைய சித்திர வேலையினாலும், யுத்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்கும் என்று நாம் நினைக்கலாகாது. (அப்.17:29)

ஆ. எப்படியெனில் காணப்படாதவைகளினால் அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகம் உண்டானது முதற்கொண்டு, தெளிவாய் காணப்படும். ஆதலால் அவர்கள் சாக்கு போக்கு சொல்ல இடமில்லை. அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவன் என்று மகிமைபடுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவருடைய இருதயம் இருளடைந்தது. (ரோ.1:20,25) திரித்துவ விசுவாசிகளின் இருதயம் இருளடைந்துள்ளது.

இ. தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் (Fullness) சரீரபிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே தேவன். ஆனால் நீங்களோ தேவனுடைய வேதத்தை மறந்து அதை மறுதலித்து அதனாசியஸ் உபதேசத்தை பற்றிக்கொண்டீர்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். அவரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும், முழுபலத்தோடும் அன்பு கூற வேண்டும். நீ இந்த பிரதான கற்பனையை விட்டுவிட்டு பிதாவும் கர்த்தர், குமாரனும் கர்த்தர், பரிசுத்த ஆவியும் கர்த்தர் என கூறி தேவத்துத்தை / கர்த்தத்துவத்தை மூன்று கூறு போட்டு, அதனாசியஸ் விசுவாச பிரமாணத்தை பற்றிக்கொண்டு உங்கள் விசுவாச கப்பலை சேதப்படுத்திவிட்டீர்கள். பிசாசு உங்களை சிறைப்படுத்திக்கொண்டான்.

3. இயேசு : தேவன் ஒருவர் என்கிறார் (மத்.19:17) கர்த்தர் : என்னைத்தவிர தேவனுன்டோ என்கிறார். (ஏசா.44:8) நானே தேவன், வேறொருவருமில்லை; நானே தேவன், எனக்கு சமானமில்லை. யாருக்கு என்னை சாயலும் சமமுமாக்கி, யாருக்கு நான் ஒப்பாகுமபடிக்கு என்னை ஒப்பிடுவீர்கள் என்கிறார். (ஏசா.46:9,5) இந்த கர்த்தர் யார்? நாங்கள் (அப்போஸ்தலர்கள்) கிறிஸ்து இயேசுவை கர்த்தர் என்று பிரசங்கிக்கிறோம். (2கொரி.4:5) ஆக வேதவாக்கியங்களில் எங்கெங்கு கர்த்தர் என்று காணப்படுகிறதோ, அது கிறிஸ்து இயேசுவையே குறிக்கும். இப்பொழுது கவனியுங்கள். பிரதான கற்பனையும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் என்று கூறுகிறது. (மாற்.12:29) மேலும் யாக்கோபுக்கு கர்த்தர் : நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர் என்கிறார். (ஆதி.28:13) சற்று ஆழமாக கவனியுங்கள். இயேசு : ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்கு சொல்கிறேன் என்கிறார். (யோ.8:58) இப்பொழுது கவனியுங்கள் யாக்கோபுக்கு கர்த்தர், எனக்கு பொருத்தனை பண்ணின பெத்தேலிலே உனக்கு தரிசனமான தேவன் நானே என்கிறார். (ஆதி.31:13) தேவனாகிய கர்த்தாவே பரலோகத்திலிருக்கிற நீர் அல்லவா தேவன். (2நாளா.20:6) பரலோகத்திலிருக்கிறவர் யார்? அவர் கிறிஸ்து இயேசுவே. (யோ.3:13) உயர வானத்திலும், தாழ பூமியிலும் கர்த்தரே தேவன். அவரைத்தவிர ஒருவரும் இல்லை. (உபா.4:39) ஆக கர்த்தராகிய இயேசுவே தேவன். உயர வானத்திலும், தாழ பூமியிலும் கர்த்தரே தேவன், தேவனே கர்த்தர், அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்பதை நீங்கள் நன்கு அறியலாம். ஒரே தேவன், ஒரே கர்த்தர், அவரே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. (1ராஜா.18:21,39) கிறிஸ்துவுக்குள் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீர பிரகாரமாக வாசமாயிருக்கிறது. (கொலோ.2:9) கவனியுங்கள் இங்கு Fullness of God Head என்று கூறப்பட்டுள்ளது. மூன்றில் ஒரு பங்கு அல்ல.

4. தேவத்துவத்துக்கடுத்த காரியம் இப்படி இருக்கும்பொழுது : நீங்கள் பிதா : தேவன், கர்த்தர். குமாரன் : தேவன், கர்த்தர். பரிசுத்த ஆவி தேவன், கர்த்தர் எனக்கூறி மூன்று தேவர்கள், மூன்று கர்த்தர்களை கொண்டு உங்கள் திரித்துவ உபதேசமாக கொண்டு மக்கள் விசுவாசத்தை சீர்குலைக்கிறதென்ன? மேலும் அப்.பவுல் கூட ஒருவரேயன்றி, வேறொரு தேவனில்லை என்கிறான். (1கொரி.8:4) அதோடுமட்டுமல்ல பரிசேயர் கூட ஒரே பிதா எங்களுக்கு உண்டு, அவர் தேவன் என்கிறார்கள். (யோ.8:41) அப்.யாக்கோபு கூட தேவன் ஒருவர் உண்டு என்று விசுவாசிக்கிறான். (யாக்.2:19) தாவீது கூட நீர் ஒருவரே தேவன் என்கிறான். (சங்.86:10) சாத்தான்கூட தேவன் ஒருவர் உண்டு என்று விசுவாசிக்கிறான்.(யாக்.2:19) நீங்களும் கூட தேவன் ஒருவர் உண்டு என்றுதான் விசுவாசிக்கிறீர்கள். அது நல்லது. ஆனால் வேதவாக்கியங்களில் காணப்படாத, அந்த மகா வேசியாகிய கத்தோலிக்க அதனாசியஸ் திரித்துவக் கோட்பாட்டை மிக்க சாதூரியமாக, வஞ்சகமாக, அந்த ஒரே தேவன் உண்டு என்ற விசுவாசத்திற்குள் நுழைத்து, அதை விசுவாசித்து, அந்த ஒரே தேவனை, ஆவியாகிய தேவனை நீங்கள் மூன்று கூறு போடுகிறதென்ன? பிதா குமாரன் பரிசுத்த ஆவி அந்த ஒரே தேவனுடைய மனுக்குலரட்சிப்பின் திட்டத்தில் உள்ள பாத்திரங்களே தவிர மூன்று தனிதனி நபர்கள் இல்லை. ஒரே தேவனை மூன்று கூறுகள் போட்டு திரியேக தேவன் என்பது வேதவாக்கியங்களில் எங்கும் காணப்படாத போதனை, உபதேசம், வேறொரு சுவிசேஷம் ஆகும்.

5. மேலும் கவனியுங்கள் : தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். அவனை தேவசாயலாகவே சிருஷ்டித்தார். (ஆதி.1:27) இந்த தேவனிடத்தில் பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்ற மூன்று ஆள்தத்துவங்கள் காணப்படுமானால், அவருடைய சாயலாகவும், ரூபத்தின்படியேயும் உண்டாக்கப்பட்ட மனிதனிடமும் மூன்று ஆள்தத்துவமாக மூவர் காணப்படவேண்டும். ஆனால் மனிதனிடத்தில் அப்படியல்லவே? மனிதனிடத்தில் ஆவி ஆத்துமா சரீரம் உண்டு. இந்த மூன்று கூறுகளை கொண்டு அவன் உருவாக்கப்பட்டுள்ளானேயன்றி, மூன்று நபர்களை கொண்டு அல்ல. ஒரே தேவனில் மூன்று ஆள்தத்துவங்கள் என்று கூறுவது பரத்திலிருந்து வராத லௌகிக சம்பந்தமான ஞானம். அது பேய்தனத்துக்கடுத்தது. வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளில் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு. எவ்வாறு மனிதனனுக்குள் ஆவி ஆத்துமா சரீரமோ அதேபோன்று தேவனுக்குள் பிதா குமாரன் பரிசுத்த ஆவி. இவைகள் யாவும் தனித்தனி ஆள்தத்துவங்களைக் கொண்டதல்ல. மாறாக இது தேவனுக்குள் அடங்கிய பண்புகள்(Attributes). எவ்வாறு மனிதனில் ஆவி ஆத்துமா சரீரத்தை மூன்று ஆள்தத்துவமாக்க முடியாதோ, அதேபோன்று, பிதா குமாரன் பரிசுத்த ஆவியை தேவனுக்கு வெளியே மூன்று ஆள்தத்துவமாக கொண்டுவரமுடியாது. அது தேவனுடைய பண்புகள். தேவனுடைய பண்புகளை தேவனுக்கு வெளியே ஆள்தத்துவங்களாக கொண்டுவர முடியாது. அது தேவனை விக்கிரகமாக்கிவிடும். கவனியுங்கள் தேவன் ஒருவரேயன்றி மூவரல்ல. எவ்வாறு ஆவி ஆத்துமா சரீரம் ஒரு மனிதனை பண்மையாக்காதோ, அதேபோன்று பிதா குமாரன் பரிசுத்த என்ற தேவனுடைய பண்புகள் / தன்மைகள் அவரை மூவராக்காது, திரித்துவ தேவனாக்காது.

6. மீண்டும் கவனியுங்கள் : வானத்திலும், பூமியிலும் தேவர்களும் கர்த்தாக்களும் உண்டு.(1கொரி.8:5, யாத்.12:12, 1இரா.19:2, 20:10) சகல ஜனங்களுக்கும் நமக்கும் வித்தியாசம் உண்டல்லவா? அவர்கள் தங்கள் தங்கள் தேவர்களுடைய நாமத்தை பற்றிக் கொண்டார்கள். அவர்களுக்கு மூன்று முக்கோடி தேவர்கள், வித்தியாசமான நாமங்களில் உண்டு. ஆனால் நமக்கோ தேவனாகிய கர்த்தர் ஒருவரே.(மீகா.4:5) அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. ஆக ஏவாளை தன்னுடைய தந்திரத்தினாலே வஞ்சித்த சாத்தான் உங்களையும் தன்னுடைய தந்திரத்தினாலே, ஸ்தாபன சபைகளைக்கொண்டு வஞ்சித்து விட்டான். நீங்களோ அவனுடைய உபதேசத்தில் நிலைத்திருந்து, உங்கள் விசுவாச கப்பலை சேதப்படுத்தி விட்டீர்கள். தேவன் திரித்துவ உபதேசத்தினால் தம்மை பரியாசம் பண்ணவொட்டார். மோசம் போகாதீர்கள். உங்கள் பந்தைய பொருளை இழந்து போகாதீர்கள்.

திரும்புங்கள் நம்முடைய தேவனிடத்தில், அவரிடத்தில் இரக்கங்கள் உண்டு. ஆதலால் வார்த்தையை கொண்டு அவரிடத்தில் திரும்புங்கள்.

7. நீங்கள் இங்கு கவனமாக தியானிக்க வேண்டிய பொருள் என்னவெனில் : இயேசுவுக்கு பிதா ஒருவர் என்றுக்கூறி அவரை தேவத்துவத்தில் முதல் நபராக்கிவிட்டீர்கள். நல்லது. மரியாள் பரிசுத்த ஆவியினால் கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெற்றாள். அவருடைய நாமம் இயேசு. இவரை தேவத்துவத்தில் குமாரனாக இரண்டாவது நபராக்கி வீட்டீர்கள். இப்பொழுது கவனியுங்கள் மரியாள் பரிசுத்த ஆவியினால் கர்ப்பவதியாகி இயேசுவை பெற்றதினால், இயேசுவுக்கு தந்தை பரிசுத்த ஆவியே. இந்த பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை நீங்கள் தேவத்துவத்தில் மூன்றாவது நபராக்கி விட்டீர்கள். இப்பொழுது இயேசு : என்னை அனுப்பின பிதா என்று குறிப்பிடுவது யாரை? இந்த பிதா யார்? அடுத்து என் நாமத்தினாலே (அதாவது இயேசு) பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் (யோ.4:26) என்று குறிப்பிடுவதை யாரை? மேலும் இயேசு : நான் போவேனாகில் அவரை (பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை) உங்களிடத்தில் அனுப்புவேன் என்கிறார். (யோ.16:7) ஒன்றான தேவனுக்குள் பிதா குமாரன் பரிசுத்த ஆவி ஸ்தானங்கள் மாறுகிறதை கவனியுங்கள். ஆனால் தேவன் ஒருவரே. அவருடைய தன்மைகள் / பண்புகள் வேறு வேறு. அதாவது பிதா ஒரு தன்மை, குமாரன் ஒரு தன்மை, பரிசுத்த ஆவி ஒரு தன்மை. ஆக இந்த மூன்று ஸ்தானங்களுக்கும் உரியவர் ஒருவரே. ஒரே தேவன் நமக்கு உண்டு. காலேப் யோசுவா என்பவரிடத்தில் கணவன், தகப்பன், சுவிசேஷகன் போன்ற பற்பல தன்மைகள் காணப்படுகின்றன. ஆனால் அவர் ஒருவரே. அதுபோன்றுதான் தேவனிடத்திலும், ஆனாலும் அவர் ஒருவரே. வேதாகமத்தில் மூவர் எனக்கூறி, தேவத்துவத்தில் மூன்று கூறுப்போட்டு, தேவத்துவத்தை பிசாசானவன் இந்த ஸ்தாபன சபைகளைக்கொண்டு கேலி கூத்தாக்கி விட்டான். உங்கள் சபை தலைவர்களால் நீங்கள் மோசம் போகாதீர்கள். தேவனுடைய மகத்துவத்தை இந்த நிருபத்தில் எழுதியுள்ளேன். இதை வாசிக்கிறவனும், கேட்கிறவனும், எழுதியுள்ளவைகளை விசுவாசிக்கிறவனும் பரிசுத்தாவான்களாயிருப்பார்கள்.

8. **பரிசுத்த ஆவி அஃறினையா, உயர்திணையா? அதாவது பரிசுத்த ஆவியா, பரிசுத்த ஆவியானவரா?** என்றதொரு குழப்பம் நம் மத்தியில் உண்டு. **வேதமே வெளிச்சம்** ஆசிரியரும், அருமையான சகோதரனுமாகிய D.வில்லியம் துரைராஜ் M.A., M.Ed., அவர்களின் பரிசுத்த ஆவியா? பரிசுத்த ஆவியானவரா? என்ற தலைப்பைக் கொண்ட ஒரு சிறு புத்தகத்தை பல ஆண்டுகளுக்கு முன்பே தியானித்தேன். அது இப்பொழுது என் ஞாபகத்திற்கு வந்தது. இவருடைய அநேக புத்தகத்தை நான் வாசித்திருக்கிறேன். ஆனால் பெரும்பான்மையாக அவருடைய உபதேசத்தில் எனக்கு உடன்பாடுகள் இல்லை. உடன்பாடுகள் இல்லை என்பதால் அவருடைய புத்தகங்களை வாசியாமல் ஒதுக்குவதும் கிடையாது. நூறு பக்கங்களை கொண்ட ஒரு புத்தகத்தில் நான் அறியாதது ஏதோ ஓரிரு காரியங்கள் ஏதாவது ஒரு பக்கத்தில் இருக்கலாமே! இப்பொழுது நம்முடைய சகோதரர் பரிசுத்த ஆவியை ஒரு நபர் என்றோ தேவன் என்றோ கூறுவதும் தொழுது கொள்ளுவதும் தவறானது. பரிசுத்த ஆவிக்கு துதி கனம் மகிமை எதுவும் கிடையாது. பரிசுத்த ஆவியை தேவன் என்பதும், அதற்கு மகிமை செலுத்துவதும் தவறு என்கிறார். பரிசுத்த ஆவி தேவனுடைய வல்லமை மாத்திரமே, ஆதலால் ஒரு ஆள் என்று கூறுவது தவறு என்கிறார். பிதா தமது வல்லமையாகிய பரிசுத்த ஆவியை அனுப்பினார். ஆதலால் அஃறினை பொருளாகிய பரிசுத்த ஆவியை ஒரு தேவன் என்று எண்ணி வணங்குவதும், போற்றுவதும், துதிப்பதும், அந்நிய தேவவணக்கமே என்கிறார். உண்மையாக ஆவியானவராகிய பிதா, ஆவியானவராகிய இயேசு, பரிசுத்த ஆவியானது பிதாவின் வல்லமை என உபதேசிக்கிறார். பரிசுத்த ஆவியை ஒரு தேவன் என்றோ ஒரு ஆள் என்றோ வேதம் எடுத்துக்கொள்ளவே இல்லை என்கிறார். ஆக பரிசுத்த ஆவியை பரிசுத்த ஆவியானவர் என்று மொழிப்பெயர்ப்பது தவறு என்கிறார். இவரது இந்த உபதேசத்தில் எனக்கு முற்றிலுமாக ஒருமனப்பாடு கிடையாது. என்னை பொறுத்த அளவில் இவரது உபதேசம் பரத்திலிருந்து இறங்கி வந்த ஞானம் அல்ல. மாறாக லௌகிக சம்பந்தமானது, ஜென்ம சுபாவத்திற்குரியது, பேய்தனத்திற்கடுத்தது, சத்தியத்திற்கு விரோதமானது. பொதுவாக இவரைப்போன்றவர்களையும், யேகோவா சாட்சிக்காரர்களையும், திரித்துவகாரர்களையும் வேசித்தன ஆவி திசைத்தவறி வழிதப்பச்செய்து விட்டது. தகாத சிந்தனைகளை / கற்பனைகளை மனதார பின்பற்றி போனார்கள். தேவனைப்பற்றிய அறிவு முற்றிலுமாக இவர்களிடத்தில் இல்லை. என் தேவனுடைய வேதத்தை மறந்தார்கள், மறுதலிக்கிறார்கள். உணர்வில்லாத ஜனங்கள் இவர்களுடைய உபதேசங்களில் சிக்குண்டு. பிசாசின் வலையில் விழுந்தார்கள். என் தேவனுடைய மகத்துவத்தை அந்நிய காரியமாக எண்ணினார்கள். என் தேவன் நீ என்னையன்றி வேரே தேவனை அறிய வேண்டாம். என்னையன்றி இரட்சகர் ஒருவரும் இல்லை என்கிறார். (ஓசி.10:4) ஆனால் இவர்களோ தங்களுக்கு கேடு உண்டாக அதனாசியஸ் திரித்துவத்தை, தங்கள் தேவனை விட்டு விலகுகிற மாறுபாட்டை பற்றிக்கொண்டார்கள். தேவனுடைய வார்த்தையைக் கொண்டு இவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பினால் நலமாயிருக்கும்.

9. **தேவன் ஒரு ஆவி**. God is a Spirit. யோ.4:24. இந்த ஆவி நித்திய ஆவி. (எபி.9:14) This Spirit is eternal. தேவன் ஒரு மனிதன் அல்ல. God is not a man. (எண்.22:19) நான் மனுஷனல்ல, தேவனாயிருக்கிறேன். I am God, and I am not man. (ஓசி.11:9) தேவன் ஆவியாயிருப்பதினால் சர்வ வியாபி. (சங்.139:7-10) God is Omnipresent. தேவன் சர்வ வியாபியாதலால் அதரிசனமானவர். (கொலோ.1:15, யோபு.23:8-10) God is invisible. அவர் அதரிசனமானவரால் அவருக்கென்று ரூபம் கிடையாது. (உபா.4:12) God has no similitude. ஆதலால் தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை. (யோ.1:18, 1யோ.4:12) No man hath seen God at anytime. இந்த ஆவி அழிவில்லாதது (Immortal),

அதரிசனமானது (Invisible) (1தீமோ.1:17) அதாவது இது இயற்கைக்கு அப்பாற்பட்ட, தெய்வீகமான ஒரு வஸ்து. (Supernatural Being) ஆதலால் இது ஒரு தனிப்பட்ட மனிதனாகவோ, (an individual person) அல்லது ஒரு மனுஷனின் தனித்தன்மை (Personality) கொண்டதாகவும் இருக்கலாம். ஒரே ஆவிதான் உண்டு. (எபே.4:4) ஆக இந்த நித்திய ஆவியும் பரிசுத்த ஆவியும் ஒன்றுதான். ஒன்றுக்கொன்று வேறுப்பட்டது, மாறுப்பட்டது அல்ல. இந்த ஆவி தேவனாகயிருப்பதால் இதற்கு ஆள்தத்துவம் உண்டு. இந்த ஆவியை அஃறினை வஸ்து என்பது அறிவீனம். மனுஷருடைய வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமும் ஆகும். இப்படிப்பட்ட உபதேசத்தினாலே காற்றினாலே அலைகளை போல அடிப்பட்டு அலைகிறவர்களாயிராதிருங்கள். பரிசுத்த வேதாகமத்தில் நான் அறிய பொதுவாக ஆவிகளை கூறும் போது உதா: எவர்களை அவர்கள் இருதயம் எழுப்பி, எவர்களை அவர்கள் **ஆவி,** உற்சாகப்படுத்தினதோ (யோ.35:21) இங்கு ஆவி என்பது spirit என சின்ன s ல் போடப்பட்டிருக்கும். நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் இங்கு ஆவிக்கு spirit என சின்ன sல் போடப்பட்டிருக்கும்.(1யோ.4:1) ஆனால் தேவனுக்கடுத்த காரியத்தில் என் ஆவியை அவர்கள் மேல் அமரப்பண்ணினேன். இங்கு ஆவி என்ற இடத்தில் Spirit என்று எழுதப்பட்டு S பெரிய எழுத்தில் இருக்கும். (ஏசா.42:1) அடுத்து ஆவியை அவித்து போடாதிருங்கள். இங்கு ஆவி என்ற இடத்தில் Spirit என பெரிய S போடப்பட்டிருக்கும். ஆக ஆவி என்று தேவனுக்கடுத்த இடத்தில் பெரிய S போடப்பட்டிருக்கும். இது தமிழில் (1தெச.5:17), ஆங்கிலத்தில் (1The.5:19) இவ்வாறாக பரிசுத்த வேதாகமம் முழுவதும் s மற்றும் S போடப்பட்டு தேவனுக்கும் இதர ஆவிகளுக்கும் வித்தியாசம் காணப்படுகிறது. அதாவது தேவனைக்குறித்து குறிப்பாக கூறப்படும் இடங்களில் பெரிய S காணப்படுகிறது. பொதுவாக ஆவி அஃறினையில் கூறப்பட்டு சின்ன s உள்ளது. அதேவேளையில் ஆவி உயர்தினையில் உண்டு. அதற்கு எடுத்துக்காட்டு : மனுஷனில் உள்ள ஆவியேயன்றி மனுஷனில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான். இங்கு ஆவி என்ற இடத்தில் சின்ன s யை காணலாம். அப்படிப்போல தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான். இங்கு ஆவி என்ற இடத்தில் பெரிய S போடப்பட்டிருக்கிறது. சுருக்கமாக தேவனுடைய ஆவி என்பது பரிசுத்த ஆவி. தேவன் ஒரு ஆவி என்பதால் பரிசுத்த ஆவிக்கு ஆள்தத்துவம் உண்டு. பரிசுத்த ஆவிக்கு ஆள்தத்துவத்தை மறுதலித்து நீங்கள் தேவனுக்குரிய ஆள்தத்துவத்தை மறுத்து, மறுதலித்து அவரை ஒரு விக்கிரகமாக்கி விட்டீர்கள்.

10. நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாக பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதீர்கள். (எபே.4:30) ஆவியை அவித்துப் போடாதிருங்கள். (1தெச.5:19) Grieve and quench. இதற்கு சில எடுத்துக்காட்டுகள். அனனியாவும், அவன் மனைவி சப்பீராளும் தங்கள் காணியாட்சிகளை விற்றார்கள். அதில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, பரிசுத்த ஆவியானவரிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் அவர்கள் இருதயத்தை நிரப்பினான். கர்த்தருடைய ஆவியை சோதிக்கிறதற்கு இருவரும் ஒருமனப்பட்டார்கள். அவர்கள் மனுஷரிடத்தில் அல்ல, மாறாக தேவனிடத்தில் பொய் சொன்னார்கள். (அப்.5:1-10) இதுதான் பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துதல் ஆகும். அடுத்து பாருங்கள், சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு, நாம் மனப்பூர்வமாக பாவம் செய்கிறோம். இதினிமித்தம் இனி செலுத்தத்தக்க வேறொரு பலி இல்லை. தேவனுடைய குமாரனை நாம் நமது காலின்கீழ் மிதித்து, நம்மை பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறோம். ஏனென்றால் நாம் கிருபையினால் இரட்சிக்கப்பட்டோம். (எபி.10:26-29, எபே.2:5) இதுதான் ஆவியை அவித்துப்போடுதல் ஆகும். இதில் ஸ்தாபன சபை ஊழியர்கள், விசுவாசிகள், சகோ.பிரன்காம் பெயரை சொல்லி ஊழியம் செய்யும் கள்ள கபடமுள்ள வேலையாட்கள், அவிசுவாசிகள், பாவனை விசுவாசிகள் யாவரும் தவறுகிறார்கள். கொடிதான ஆக்கினைக்கு பாத்திரவான்கள் ஆகாதபடிக்கு உங்களை காத்துக்கொள்ளுங்கள்.

11. இப்பொழுது கவனியுங்கள். எதுவும் சிருஷ்டிக்கப்படும்முன் எங்கும் வியாபித்திருக்கும் இந்த நித்திய ஆவி, சர்வவியாபி தேவன் என்று அறியப்படவில்லை. இவரை ஆராதனை செய்ய இவருக்கென்று ரூபம் எதுவும் இல்லை. இவரை தொழுதுக்கொள்ள எந்தவிதமான சிருஷ்டிப்பும் இல்லை. எங்கும் வியாபித்திருக்கும் இந்த நித்திய ஆவியும், சர்வ வியாபியுமாகிய தேவன் தான் தேவன் என்று அறியப்படும் பொருட்டு எதுவும் சிருஷ்டிக்கப்படும் முன் தான் சிருஷ்டிக்கப்போகும் தன் சிருஷ்டிப்புகள் தன்னை தொழுதுக்கொள்ள தனக்கென்று ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை உடையவரானார். The Omnipresent Spirit formed itself into one glorious Supreme Being. இது மாம்சமும் இரத்தமும் இல்லாத மானிட சாயலையுடைய ஆவிக்குரிய மகிமையின் சரீரம். This Glorious Supreme Being in person is called Logos. இந்த மகிமையின் ஆவிக்குரிய சரீரம்தான் லோகாஸ், லோகாஸ் தான் **வார்த்தை** என்று அழைக்கப்படலானார். ஆதியிலே வார்த்தையிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. (யோ.1:1) இந்த மானிட சாயலையுடைய ஆவிக்குரிய சரீரம் தான் வார்த்தை என அழைக்கப்பட்டு, வார்த்தையினால் உலகமும், அதிலுள்ளவைகளும் சிருஷ்டிக்கப்பட்டது. ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார். In the beginning God created the heaven and the earth. (ஆதி.1:1) ஆக நித்திய ஆவிக்கு ஆள் தத்துவம் உண்டு. தேவன் வெளிச்சம் உண்டாக கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று. (ஆதி.1:3) பூர்வ காலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், பூமியும் உண்டாயிற்று. (2பேது.3:5, ஏசா.55:11).

**12. மேலும் பரிசுத்த ஆவிக்கு ஆள்தத்துவம் உண்டு என்பதற்கு சில எடுத்துக்காட்டுகள் :**
அ. பரிசுத்த ஆவி வல்லமை என்று மட்டும் கூறுவது தவறு. அவர் பேசுகிறார். அந்நாழிகையிலே உங்களுக்கு எது அருள் செய்யப்படுமா அதையே பேசுங்கள். ஏனென்றால் பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல. பரிசுத்த ஆவியே பேசுகிறவர். For it is not ye that speak, but the Holy Spirit. (மாற்.13:11) நீங்கள் பேச வேண்டியவைகளை பரிசுத்த

ஆவியானவர் உங்களுக்கு போதிப்பார். (லூக்.12:12) பாருங்கள் நான் எழுத வேண்டியவைகளை பரிசுத்த ஆவியானவர் என் சிந்தனைக்கு கொண்டுவருகிறார். நான் எழுதுகிறேன்.

ஆ. அகபு என்னும் பேர் கொண்ட தீர்க்கதரிசி : யூதர் இவ்விதமாய் கட்டி புறஜாதியார் கைகளில் பவுலை ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான். (அப்.21:10,11) இது ஒருவர் மற்றொருவரிடம் பேசுவதாகும். தேவன் ஆதாமோடு பேசினார், மோசேயுடன் பேசினார், யோசுவாவுடன் பேசினார், ஈசாக்கு, யாக்கோபுவுடன் பேசினார். இவர்கள் அனைவரும் அவருடைய சத்தத்தை கேட்டார்கள். ஆனால் அவருடைய ரூபத்தை காணவில்லை. ஏனென்றால் தேவன் ஆவியாயிருக்கிறார். அவருக்கென்று ரூபம் எதுவுமில்லை. பரிசுத்த ஆவி அஃறினை என்றால் எப்படி பேசமுடியும்?

இ. சிமியோனுக்கு கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணும் முன்னே மரணமடைய மாட்டாய் என்று பரிசுத்த ஆவியினால் அவனுக்கு அறிவிக்கப்பட்டது. (லூக்.2:25,26)

ஈ. பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்கு போதிப்பார், நினைப்பூட்டுவார். (யோ.16:26) ஒரு அஃறினை வஸ்து உயர்தினை வஸ்துக்கு போதிக்க, நினைப்பூட்ட முடியுமா?

உ. சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார். வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். (யோ.16:13) இது என்ன? ஆவியின் ஆள்தன்மை.

ஊ. அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள் மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கு நலமாக கண்டது. (அப்.15:29) ஒரு அஃறினை வஸ்துக்கு ஒன்று நலமானதாக தோன்றுமோ? வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளில் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு.

எ. பரிசுத்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார். (1கொரி.2:10) For the Spirit searcheth all things, the deep things of God. தேவனுடைய ஆழங்களை ஆராயக்கூடிய தகுதி யாருக்கு? ஒரு அஃறினை வஸ்துக்கா? பரிசுத்த ஆவியை ஒரு அஃறினை வஸ்து என்று கூற உங்களது M.A., M.Ed., படிப்பினால் உலக, மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளிலாலே பேசுகிறீர்கள். ஆவிக்குரியவன் பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளிலாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளாடே சம்பந்தப்படுத்தி காண்பிக்கிறான். ஆனால் அது உங்களால் கூடாது.

ஏ. பரிசுத்த ஆவியானவர் தமது சித்தத்தின்படியே அவனவனுக்கு ஆவிக்குரிய வரங்களை பகிர்ந்து கொடுக்கிறார். (1கொரி.12:11) As he Will. Will – உயர்தினைக்குரிய தேவனுக்குரிய மனுஷனுக்குரிய ஒன்றாகும். முடிவாக ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். (1கொரி.2:14)

பரிசுத்த ஆவி ஒரு நபர் என்றோ, தேவன் என்றோ கூறுவதும் தொழுதுகொள்ளுவதும் தவறானது, பரிசுத்த ஆவி ஒரு வல்லமை மாத்திரமே என வேற்றுமையான உபதேசங்களை தந்திரமாக கூறி மக்களை வஞ்சிக்கும் கூட்டத்தை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். இந்த Dr, M.A.,M.Ed., M.Th, போன்ற ஞானங்களை குப்பையும் தூசியுமானது என்று இவர்கள் எண்ணுகிறார்களோ அன்றுதான் தேவன் தமக்குரியவைகளை இவர்களுக்கு வெளிப்படுத்துவார். ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் தேவன் தமக்கடுத்த காரியங்களை வெளிப்படுத்துவதில்லை.(மத்.11:25)

**13. பரிசுத்த ஆவியே நித்திய ஆவி.** இப்பொழுது இந்த ஒரே ஆவி தான், நித்திய ஆவி என எபி.9:14 ல் காண்கிறாம். இது ஆங்கிலத்தில் Eternal Spirit என உள்ளது. ஆக தேவனை, நித்திய தேவன் / அநாதி தேவன் என உபா.33:27 ல் தியானிக்கிறாம். அதாவது Eternal God. நிந்திய தேவன் என்றால் நித்திய ஜீவனை உடையவர் என்று பொருள். நித்தியம் என்றால் அதற்கு தொடக்கமும் இல்லை, முடிவும் இல்லை. ஆக தேவனுக்கு தொடக்கமும் கிடையாது. முடிவும் கிடையாது. ஆதலால் தேவனுக்குள் இருக்கும் ஜீவனுக்கு தொடக்கமும் முடிவும் கிடையாது. நாட்களின் துவக்கமும், ஜீவனின் முடிவற்றவர். தேவனை ஒருவனும் ஒரு போதும் கண்டதில்லை. (1யோ.4:12, யோ.1:18) அப்.யோவான் தனது முதலாம் நிருபம் ஐந்தாம் அதி 20வது வசனத்தில் இயேசு கிறிஸ்துவே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார் என்கிறான். Jesus Christ is the true God and eternal life. கவனியுங்கள். தேவபக்திக்குரிய ரகசியமானது மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார். (1தீமோ.3:16) The mystery of Godliness, God was manifest in the flesh. Manifest என்றால் பண்புகளை புறம்பே தெரிய வெளிப்படுத்திக்காட்டு என பொருள்படும். ஆக தேவன் தம்முடைய பண்புகளை புறம்பே வெளிப்படுத்திக்காட்ட மாம்சத்தில் வெளிப்பட்டார். ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெற்றாள். தீர்க்கதரிசியோ அவருக்கு இம்மானுவேல் என பெயரிடுவார்கள் என்றான். (ஏசா.7:14) இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தம். (மத்.1:23) ஆனால் கர்த்தருடைய தூதனின் சொல்படி யோசேப்பு அவருக்கு இயேசு என்று பெயரிட்டான். ஏனென்றால் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். (மத்.1:21) ஆக ஒரே ஆவி, தேவன் ஆவியாயிருக்கிறார், அந்த தேவன் இப்பொழுது மாம்சத்தில் வெளிப்பட்டு இயேசு என அழைக்கப்பட்டார். அதே ஆவி, அதே தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். இதுகுறித்து எரேமியா தீர்க்கதரிசி “இஸ்ரவேலின் இரட்சிப்பு எங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் இருப்பது மெய்யே” என்கிறான். (எரே.3:23) Truly in the LORD, our God, is the salvation of Israel. இங்கு இயேசு தேவனாகிய கர்த்தர் என அழைக்கப்படுகிறார். இங்கு கவனியுங்கள் LORD என்று எழுதப்பட்டுள்ளது. பொதுவாக பரிசுத்த வேதாகமத்தில் LORD என்று எழுதப்பட்டிருப்பது YHWH யை குறிக்கும். (ஆதி.2:4) தேவனாகிய கர்த்தர், மேலும் யாத்.34:6 ல் கர்த்தர், கர்த்தர் என்ற இடத்திலும் YHWH யை காண்கிறோம். இங்கு இயேசு கிறிஸ்துவை குறித்த இடத்திலும் LORD YHWH என்று கூறப்பட்டிருப்பதால் அவரே தேவனாகிய கர்த்தர் என்பது உறுதிப்படுகிறது. திரித்துவ சந்ததியே நீங்கள் பிரசங்கித்து, விசுவாசித்து வருவது பவுல் கூறும் வேறொரு சுவிசேஷம். ஆதலால் நீங்கள் சபிக்கப்பட்டவர்கள் என அவனே கலா.1:7-9 ல்

உங்களை குறித்து எழுதுகிறான். ஆதலால் அருமையானவர்களே உங்கள் திரித்துவ பக்தி காலையில் காணும் மேகத்தை போலவும், விடியற்காலையில் தோன்றும் பனியை போலவும் ஒழிந்து போகிறதாயிருக்கிறது. நீங்கள் கிறிஸ்துவுக்கு வெளியே முத்திரையிடப்பட்டுள்ளீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

14. ஒரே ஆவி One Spirit (எபே.4:4) அது நித்திய ஆவி Eternal Spirit (எபி.9:14). தேவன் ஒரு ஆவி God is a Spirit (யோ.4:24) கர்த்தரே ஆவியானவர். Lord is that Spirit (2கொரி.3:17) அவர் அநாதி தேவன் Eternal God (உபா.34:27) கவனியுங்கள். எல்லோருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு. One God and Father of all. (எபே.4:6) அவர் எல்லோர் மேலும் Above all பிதாவாக, அவர் எல்லோரோடும் Through all, குமாரனாக அவர் எல்லோருக்குள்ளும் in you all. பரிசுத்த ஆவியாக. ஆக ஒரே தேவன் அவர் பிதாவாக எல்லோர் மேலும், குமாரனாக எல்லோரோடும், பரிசுத்த ஆவியாக எல்லோருக்குள்ளும். பிதா யார்? அவர் தேவன். அவர் கர்த்தர். (ஏசா.63:16, 64:8) குமாரன் யார்? இவர் இயேசு. இவர் கர்த்தர். (2கொரி.4:5, 1கொரி.15:47) இவர் தேவன் (1யோ.5:20, தீத்.2:13) பரிசுத்த ஆவி யார்? கிறிஸ்து (ரோ.8:26,34) கர்த்தராகிய கிறிஸ்து யார்? இயேசு (லூக்.2:11) ஆக தேவன் ஒருவரே. இதுவே தேவத்துவத்தின் இரகசியம். இதற்கு மிஞ்சியது சபை ஸ்தாபனங்களின் அதனாசியஸ் திரித்துவ விசுவாச பிரமாணம். இந்த ஞானம் பரத்திலிருந்து இறங்கி வந்த ஞானம் இல்லை. இது லௌகிக சம்பந்தமான ஞானம். இது ஜென்ம சுபாவத்திற்குரிய ஞானம். இது பேய்தனத்திற்கடுத்ததுமாயிருக்கிறது. (யாக்.3:15) ஸ்தாபன சபை ஊழியர்களும், மக்களும் உலகத்திற்குரியவர்கள். ஆகையால் உலகத்திற்குரிய ஞானத்தினால் பேசுகிறார்கள். உலகமும் அவர்களுக்கு செவிக்கொடுக்கிறது. ஏனென்றால் உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. (1யோ.4:5,5:19) பரிசுத்த ஆவி தேவத்துவத்தில் மூன்றாவது நபர் அல்ல. அவரே தேவன்.

15. கர்த்தரே ஆவியானவர் Lord is that Spirit (2கொரி. 3:17) அதாவது ஒரே ஆவி. அந்த ஆவி கர்த்தர் என அழைக்கப்பட்டார். இந்த கர்த்தர் யார்? மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன். (1தீமோ.3:16) இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாள் என்று ஏசாயா தீர்க்கத்தரிசியினால் முன்னுரைக்கப்பட்டவர். ஏசா.7:4 இவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவார்கள். இம்மானுவேல் என்ற பெயருக்கு தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தம். (மத்.1:23) தேவதூதன் மரியாளை நோக்கி : இதோ நீ ஒரு குமாரனை பெறுவாய், அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. (லூக்.1:31) ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி, அவர்களை இரட்சிப்பார். (மத்.1:21) இஸ்ரவேலின் இரட்சிப்பு தேவனாகிய கர்த்தருக்குள் இருப்பது என்பது மெய்யே. (எரே.3:23) கர்த்தாவே நாங்கள் எங்கள் காதுகளினால் கேட்ட எல்லாவற்றின்படியும் தேவரீருக்கு நிகரானவர் இல்லை ; உம்மைத் தவிர வேறு தேவனும் இல்லை. உமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கு நிகரான ஜனமும் உண்டோ? பூலோகத்தில் இந்த ஒரே ஜாதியை தேவனாகிய கர்த்தர் உமக்கு ஜனமாக மீட்கும்படி பயங்கரமான பெரிய காரியங்களினால் உமக்கு கீர்த்தியை உண்டாக்கி, நீர் எகிப்திற்கு நீங்கலாக்கி மீட்ட உமது ஜனத்துக்கு முன்பாக ஜாதிகளை துரத்தி உமது ஜனமாகிய இஸ்ரவேல் என்னென்றைக்கும் உமது ஜனமாயிருப்பதற்கு அவர்களை நிலைப்படுத்தி கர்த்தராகிய நீர் தாமே அவர்களுக்கு தேவனானீர். (1நாளா.17:20-22) இது யாரை குறிக்கிறது? கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அல்லவா.

16. கர்த்தர், தேவனாகிய கர்த்தர் யார்? இயேசு கிறிஸ்து ஆகும். இப்பொழுது கவனியுங்கள் இவர் யூதருக்கு மாத்திரமா தேவன்? புறஜாதிகளுக்கும் தேவன் அல்லவா? ஆம், புறஜாதிகளுக்கும் அவர் தேவன் தான். (ரோ.3:29) ஆம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து யூதர், புறஜாதி அனைவருக்கும் தேவன். ஆம், இவர் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர். (எரே.32:27) இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார். The True God and Eternal Life. (1யோ.5:20) கர்த்தரோ மெய்யான தெய்வம். அவர் ஜீவனுள்ள தேவன், நித்திய ராஜா. (எரே.10:10) இவருக்கு மேலே, கீழே, இவருக்கு இடதுபுறம் அல்லது வலதுபுறம் வேறொரு தேவன் இல்லை. ஆக திரித்துவம் ஒரு வஞ்சனையுள்ள பிசாசின் மற்றொரு சுவிசேஷம். அதை பிரசங்கிப்பவன், அதை விசுவாசிப்பவன் யாவரும் சபிக்கப்பட்டவர்கள் என அப்.பவுல் கூறுகிறான். (கலா.1:8,9)

17. கர்த்தரே ஆவியானவர். Lord is that Spirit. (2கொரி.3:17) இப்பொழுது கர்த்தர் என் ஆவி என்றென்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை ; அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப்போகிற நாட்கள் 120 வருஷம் என்றார். (ஆதி.6:3) உம்முடைய ஆவிக்கு, இது யாரை குறிக்கிறது? கர்த்தரை தானே. கர்த்தருக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? (சங்.139:7) நான் வானத்திற்கு ஏறினாலும் நீர் அங்கே இருக்கிறீர். நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். (சங்.138:8) தேவன் மெய்யாகவே பூமியிலே வாசம் பண்ணுவாரோ? இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மை கொள்ளாதே (1ராஜா.8:27) இயேசு : இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்கிறார்(மத்.18:20). ஆக அந்த ஆவியானவர் யார்? அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவேயன்றி வேறுயாரும் இல்லை.

18. கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் The Spirit of the Lord God. (ஏசா.61:1) இது யார்? பரிசுத்த ஆவி. கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணும் முன்னே மரணமடைய மாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே (தேவனுடைய ஆவி) அவனுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவன் ஆவியின் ஏவுதலினால் (பரிசுத்த ஆவி) தேவாலயத்திலே

வந்திருந்தான். (லூக்.2:26,27) பரிசுத்த ஆவி பெந்தெகொஸ்தே நாளில் ஊற்றப்படும் முன்னே பரிசுத்த ஆவியைக்குறித்து இங்கு காண்கிறோம். ஆக பரிசுத்த ஆவி - தேவனுடைய ஆவி. பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டபோது, தேவன் மனுஷனுக்குள். அதற்கு முன் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டார்கள். இப்பொழுது பரிசுத்த ஆவி நமக்குள் / உங்களுக்குள் / எனக்குள்.

19. தேவன் அவருக்கு தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். (யோ.3:24) தேவனுடைய ஆவி இயேசு மேல் அளவில்லாமல். ஆனால் தேவனுடைய ஆவி (பரிசுத்த ஆவி) நம்மேல் அளவோடு. சகோ.பிரன்காம் மீது தேவனுடைய ஆவி அளவில்லாமல் உண்டு என்று கூறும் ஒரு கூட்டத்தினர் உண்டு. அது பிசாசின் கூட்டமே, விசுவாசிகளை திசைதிருப்பும் கூட்டமே. தேவன் ஒரு ஆவி. (யோ.4:24) தேவன் ஆவியாயிருப்பதால் அவனர தொழுதுக்கொள்கிறவர்களும் ஆவியினால் தொழுதுக்கொள்ள வேண்டும். மாம்சத்திலிருந்து தொழுதுக்கொள்ள முடியாது. எனக்கு ஒருவர் கனத்தைக்கொடுத்தால் அவரும் என்னைப்போல் ஒரு மனிதராகவே இருக்கவேண்டும். மனிதன் தான் மனிதனுக்கு கனத்தை கொடுக்க முடியும். அதேபோன்று தேவன் ஆவியாயிருப்பதால் அவரை தொழுதுக்கொள்கிறவனும் ஆவியினாலே தொழுதுக்கொண்டு அவருக்கு கனத்தையும், மகிமையையும் செலுத்த வேண்டும்.

20. ஆவியானவர் ஒருவர். கர்த்தர் ஒருவர். தேவன் ஒருவர். (1கொரி.12:4,5,6) ஆக மொத்தம் 3 பேர் அல்ல. ஒருவரே. கர்த்தரே ஆவியானவர், கர்த்தரே தேவன். ஆவியாயிருக்கிற கர்த்தர் (2கொரி.3:18) தேவரீர் எங்கள் பிதாவாயிருக்கிறீர், கர்த்தாவே நீர் எங்கள் பிதாவும், எங்கள் மீட்பருமாயிருக்கிறீர். (ஏசா.63:16 64:8) பாருங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாக பெற்ற தேவனுடைய ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள். (எபே.4:30) Holy Spirit of God. இது என்ன? பரிசுத்த ஆவிதான் தேவன். தேவன் தான் பரிசுத்த ஆவி. பாருங்கள் தேவன் ஒரு ஆவி. ஆவியாகிய தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்று அழைக்கப்பட்டார். அப்படியானால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே தேவன் என்று அறிக்கையிடாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல. மாறாக அது அந்திக்கிறிஸ்துவின் ஆவி. ஆக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே. மெய்யான தேவனும், நித்திய ஜீவனுமாயிருக்கிறார் என்று அறிக்கையிடாத ஆவி அந்திக்கிறிஸ்துவின் ஆவி, திரித்துவ ஆவி அந்திக்கிறிஸ்துவின் ஆவியேயன்றி வேறல்ல. வெளி.11:11 ல் தேவனிடத்திலிருந்து ஜீவ ஆவி என காண்கிறோம். தேவனுடை ஆவி, பரிசுத்த ஆவி, ஜீவஆவி அனைத்தும் ஒரே ஆவியின் பற்பல தன்மைகளேயன்றி, பற்பல ஆவிகள் அல்ல.

21. **பரிசுத்த ஆவியே ஜீவ ஆவி.** இப்பொழுது அந்த ஒரே ஆவி, தேவனுடைய ஜீவ ஆவி என அழைக்கப்படுகிறது Spirit of Life. (வெளி.11:11) மோசே மற்றும் எலியா தீர்க்கதரிசிகள் பூலோகத்தில் ஆண்டவருக்கு முன்பாக நிற்கிற இரண்டு ஒளிவ மரங்களும் இரண்டு விளக்கு தண்டுகளுமாகிய, தேவனுடைய இரண்டு சாட்சிகளுமாகிய இந்த இருவரும் தங்கள் சாட்சியை சொல்லி முடித்திருக்கும்போது, பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம் அவர்களாடே யுத்தம் பண்ணி, அவர்களை ஜெயித்து அவர்களை கொன்று போடும். அவர்களுடைய உடல்களை கல்லறைகளில் வைக்க வொட்டார்கள். மூன்றரை நாளுக்கு பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவ ஆவி (ஜீவனை கொடுக்கும் ஆவி – அந்த ஒரே ஆவி, தேவன்) அவர்களுக்குள் பிரவேசிக்கும், அப்பொழுது அவர்கள் காலூன்றி நிற்பார்கள். இங்கே ஏறி வாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்குண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு மேகத்தில் ஏறி வானத்திற்கு போனார்கள். (வெளி.11:3,4,7,9,11,12) இந்த ஜீவன் யார்? அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. இயேசு கிறிஸ்து : நான் ஜீவனாயிருக்கிறேன் என்கிறார். (யோ.14:6) நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்த கிருபை இப்பொழுது வெளிப்பட்டது. அவர் மரணத்தை பரிகரித்து ஜீவனையும், அறியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார். (2தீமோ.1:9,10) Our saviour Jesus Christ, who hath abolished that and hath brought life and immortality to light through the Gospel.

22. **பரிசுத்த ஆவியே சத்திய ஆவி.** இப்பொழுது இந்த ஒரே ஆவி. சத்திய ஆவி என அழைக்கப்படுகிறது Spirit of Truth. (யோ.16:13) இந்த சத்திய ஆவி யார்? சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். (யோ.16:13) Spirit of Truth. இயேசு நானே வழியும் சத்தியமுமாயிருக்கிறேன் என்கிறார். (யோ.14:6) சத்திய ஆவி – பரிசுத்த ஆவி – தேற்றரவாளன். (யோ.14:16,15:26, 16:13) இயேசுவே சத்தியம் (யோ.14:16) சத்திய ஆவி இயேசு சொன்ன எல்லாவற்றையும் நினைப்பூட்டுகிறார். (யோ.14:26) சத்திய ஆவி – புதுப்புது வெளிப்பாட்டை கொண்டு வராமல் கிறிஸ்துவிலுள்ள வெளிப்பாட்டையே நினைப்பூட்டுகிறார். இது கர்த்தர் எனக்கு கொடுத்த வெளிப்பாடு, வெளிப்பாடு என கூறுகிறவர்கள் மாய்மாலக்காரர்கள், ஏமாற்றுக்காரர்கள். ஆவியானவர் போதிக்கிறார் (யோ.14:26) சாட்சி பகருகிறார். (யோ.15:26) இனி வரப்போகிறவைகளையும், கிறிஸ்துவுக்கடுத்தவைகளையும் அறிவிக்கிறார். (யோ.16:13) சத்தியத்துக்குள் வழிநடத்துகிறார். (யோ.16:13) பாவம், நீதி, நியாயத்தீர்ப்பை குறித்து உலகத்தை கண்டித்து உணர்த்துகிறார். (யோ.16:8) சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கம் பண்ணுகிறார். போதிக்கிறார், எல்லா நீதிய சாந்தத்தாடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு புத்தி சொல்கிறார். (2தீமோ.4:2) தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரன் இந்த பணிகளையே அவனும் செய்வான். சத்திய ஆவியானவர் உங்களுடனே வாசம் பண்ணி, உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள். (யோ.14:17) தேவன் மெய்யாய்

உங்களுக்குள்ளே இருக்கிறார். (1கொரி.14:25) இதிலிருந்து சத்திய ஆவி / பரிசுத்த ஆவி தேவன் என்பதை அறிந்துக்கொள்ளலாம். கவனியுங்கள். இயேசு தம்முடை வாயை உவமைகளைக் கொண்டு திறந்தார். (மத்.13:25) இதுகுறித்து சங்கீதம் 28:2 ல் எழுதியது நிறைவேறும்படி நடந்தது. என்னுடைய வாயை உவமைகளால் திறப்பேன். பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள். (மத்.28:19) பாருங்கள். வானத்திற்கு ஏறி, இறங்கினவர் யார்? காற்றை தமது கைப்பிடிகளில் அடக்கினவர் யார்? தண்ணீர்களை வஸ்திரங்களினாலே கட்டினவர் யார்? பூமியில் எல்கைகளையெல்லாம் ஸ்தாபித்தவர் யார்? அவருடைய நாமம் என்ன? அவர் குமாரனுடைய நாமம் என்ன? (நீதி.30:4) அங்கு அவருடைய நாமம் – பிதாவினுடைய நாமம் என்பதாகும். அப்படியானால் பிதா, குமாரனுடைய நாமம் என்ன? ஆதலால் பிதாவுக்கு ஒரு நாமம் உண்டு, குமாரனுக்கு ஒரு நாமம் உண்டு என்பதல்ல. பிதா, குமாரனுடைய நாமம் கர்த்தராகிய இயேசு என்பதாகும். யோவானுக்கு அவனுடைய தகப்பனின் நாமத்தின்படியே சகரியா என்று பெயரிட போனார்கள். அந்நாட்களில் தகப்பன் பெயரில் தலைப்பையனுக்கு ஈடுவது வழக்கம். இப்பொழுது கவனியுங்கள். சத்திய ஆவி எப்படி சீஷர்களை வழிநடத்தியது என்று? பெந்தெகொஸ்தே நாள் கர்த்தராகிய இயேசு கூறியபடி (மத்.28:19) சீஷர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். (அப்.2:38) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அதை அங்கிகரித்தார். சத்திய ஆவியானவர் சீஷர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தினார்.

**23. பரிசுத்த ஆவியே தேவனுடைய ஆவி.** அந்த ஒரே ஆவி இப்பொழுது தேவனுடைய ஆவி என அழைக்கப்படுகிறார் என்றால் அந்த ஒரே ஆவி தான் தேவன். Spirit of God. இந்த தேவனுடைய ஆவி கிறிஸ்துவினுடைய ஆவி என்றும் அழைக்கப்படுகிறது. Spirit of Christ. கவனியுங்கள். தேவனுடைய ஆவியும், கிறிஸ்துவினுடைய ஆவியும் ஒன்றே. (ரோ.8:9) தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்வர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவி உங்களில் இருந்தால், சரீரமானது பாவத்தின் நிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியின் நிமித்தம் ஜீவனுள்ளதாயுமிருக்கும். இதிலிருந்து அந்த ஒரே ஆவிதான் தேவனுடைய ஆவி, கிறிஸ்துவினுடைய ஆவி என காண்கிறாம். மேலும் கவனியுங்கள். தேவனுடைய ராஜ்யம் (Kingdom of God), கிறிஸ்துவினுடைய ராஜ்யம் (Kingdom of Christ) ஒன்றே. (எபே.5:5) அடுத்து பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்கள் பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். (அப்.13:2) ஆரோனை போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்த கடினமான ஊழியத்துக்கு தானாய் ஏற்படுகிறதில்லை. (எபி.5:4) ஆம் பரிசுத்த ஆவியே தேவன்.

**24. பரிசுத்த ஆவியே கர்த்தருடைய ஆவி.** (Spirit of the LORD) (ஏசா.40:13) கர்த்தராகிய தேவனுடைய ஆவி Spirit of Lord God. (ஏசா.61:1) இவை இரு ஆவிகள் அல்ல. மாறாக அந்த ஒரே ஆவிதான் கர்த்தருடைய ஆவி, கர்த்தராகிய தேவனுடைய ஆவி என்று அழைக்கப்படுகிறார். ஏனென்றால் கர்த்தருடைய ஆவி, தேவனுடைய ஆவி ஒன்றே. 1சாமு.10:6,10 தியானிக்கும்பாது, சாமுவேல் சவுலிடம் கர்த்தருடைய ஆவி உன்மேல் இறங்குவார் என்றான். அதன்படி தேவனுடைய ஆவி அவன்மேல் இறங்கினதினால் என காண்கிறோம். மேலும் கர்த்தர் யார்? தேவன் யார்? கர்த்தரே தேவன். (சங்.100:3) LORD, He is God. கர்த்தர் ஒருவர். தேவன் மற்றொருவர் கிடையாது. அடுத்து முக்கியமானது கர்த்தர் யார்? அந்த ஆவியே கர்த்தர். கர்த்தரே அந்த ஆவி. (2கொரி. 3:17) Lord is that Spirit. ஆவியாயிருக்கிற கர்த்தர் Spirit of the Lord (2கொரி.3:18) இப்பொழுது இந்த கர்த்தர் யார்? அவர் கிறிஸ்து இயேசு. (2கொரி.4:5) Christ Jesus the Lord. நாங்கள் எங்களையே பிரசங்கியாமல் கிறிஸ்து இயேசுவே கர்த்தர் என்று பிரசங்கிக்கிறாம்.

**25. பரிசுத்த ஆவி.** அந்த நித்திய ஆவிதான் பரிசுத்த ஆவி. தேவனுடைய ஆவி தான் பரிசுத்த ஆவி. கர்த்தருடைய ஆவி தான் பரிசுத்த ஆவி. கவனியுங்கள் பரிசுத்த ஆவி ஏசாயா தீர்க்கதரிசியைக் கொண்டு சொல்லுகிறார் (அப்.28:27) இந்த ஜனங்கள் தங்கள் கண்களினால் காணாமலும், தங்கள் காதுகளினால் கேளாமலும், தங்கள் இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்க நீ அவர்கள் இருதயத்தை கொளுத்தாக்கி அவர்கள் காதுகளை மந்தப்படுத்தி, அவர்கள் கண்களை மூடி போடு என்றார். (ஏசா.6:10) இவ்வாறாக ஏசாயா தீர்க்கதரிசியிடம் சொன்னது யார்? அவர் சேனைகளின் கர்த்தர். (ஏசா.6:5) இந்த சேனைகளின் கர்த்தரை ஆண்டவர் (Lord) எனக்கூறப்பட்டுள்ளது. (ஏசா.6:8) அப்படியானால் ஏசாயாவினால் கூறப்பட்ட ஆண்டவரும், கூறப்பட்ட பரிசுத்த ஆவியும் ஒருவர் தானே. (அப்.28:27) அடுத்து பரிசுத்த ஆவி தேவன் என்று அழைக்கப்படுகிறார். பரிசுத்த ஆவிதான் அந்த ஒரே ஆவி மற்றும் தேவனாகவும் இருப்பதினால் நாம் பரிசுத்த ஆவியானவர் என உயர்திணையில் அழைக்கிறாம். பேதுரு அனனியாவை நோக்கி நீ பரிசுத்த ஆவியினிடத்தில் போய் சொன்னாய் என்றான். அடுத்து தொடர்ந்து நீ மனுஷனிடத்தில் அல்ல, தேவனிடத்தில் போய் சொன்னாய் என்றான். இதிலிருந்து பரிசுத்த ஆவியே தேவன் என காணலாம். (அப்.5:1-4) கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணும் முன்னே மரணமடைய மாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே சிமியோனுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவன் ஆவியின் ஏவுதலினால் தேவலாயத்திலே வந்திருந்தான். (லூக்.26:27) சிமியோன் அவரை (இயேசு எனும் பிள்ளையை) தன் கைகளில் ஏற்றுக்கொண்டு தேவனை ஸ்தோத்தரித்தான். இங்கும் பரிசுத்த ஆவி தேவன் என்று காண்கிறோம். நீ பரிசுத்த ஆவியை பெறாவிட்டால் உனக்கு கிறிஸ்துவினிடத்தில் பங்கு இல்லை. கிறிஸ்துவின் ஆவி (பரிசுத்த ஆவி) இல்லாதவன் அவருடையவன் அல்ல. (ரோ.8:9) ஆதலால் ஆவியை அவித்து போடாதிருங்கள். (1தெச.5:19)

தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதீர்கள். (எபே.4:30) அப்படியானால் இந்த ஆண்டவர் யார்? தேவன் யார்? தோமா இயேசுவை நோக்கி : என் ஆண்டவரே என் தேவனே என்றான். Lord and God (யோ.20:28)

26. **பரிசுத்த ஆவியே தேற்றரவாளன்.** என் நாமத்தினாலே (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் (யோ.14:26) இங்கு கூறப்பட்டுள்ள அந்த பிதா யார்? நான் (இயேசு) போகிறது உங்களுக்கு பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் (பரிசுத்த ஆவி) உங்களிடத்தில் வரார். நான் (இயேசு) போவேனாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். (யோ.16:7) அப்படியானால் பிதா அனுப்பப்போகிற இந்த வார்த்தை யாரை குறிக்கிறது. அது கர்த்தராகிய இயேசுவே. யோ.14:26 வுடன் யோ.16:7 யை தியானியுங்கள். ஆக பரிசுத்த ஆவிதான் ஆண்டவர், பரிசுத்த ஆவிதான் தேவன், பரிசுத்த ஆவிதான் தேற்றரவாளன், பரிசுத்த ஆவிதான் இயேசு கிறிஸ்து என காண்கிறோம். மேலும் எல்லோருக்கும் ஒரே தேவனும், அந்த ஒரே ஆவி (One God ), பிதாவும் (Father) உண்டு. அவர் எல்லோர் மேலும் (Above all) பிதாவாக, அவர் எல்லோரோடும் (Through All) குமாரனாக உங்கள் எல்லோருக்குள்ளும் (In you all) பரிசுத்த ஆவியாகயிருக்கிறார். (எபே.4:6) ஆக அந்த ஒரே தேவன், அந்த ஒரே ஆவி பிதாவாக நமக்குமேல், குமாரனாக நம்மோடு பரிசுத்த ஆவி தேற்றரவாளனாக நமக்குள் இருக்கிறார். ஆக தேவன் ஒரு ஆவி. அவர் பிதாவாக, குமாரனாக, பரிசுத்த ஆவியாக, நம்மில் நம்மோடு நமக்குள் இருக்கிறார். ஆக தேவன் ஒரு ஆவி. அந்த ஆவிதான் பரிசுத்த ஆவி, நித்திய ஆவி. ஒரு முக்கியமான காரியத்தை இங்கு கவனியுங்கள். நீங்கள் பிதா ஒருவர், குமாரன் ஒருவர், பரிசுத்த ஆவி மற்றொருவர் ஆக தேவத்துவத்தில் மூவர் உண்டு என்றீர்கள். நானோ ஒரு ஆவி உண்டு, அது நித்திய ஆவி, அதற்கு தொடக்கமும் முடிவும் கிடையாது. இந்த ஆவிதான் தேவன். இந்த ஆவிதான் கர்த்தர். தேவன் பிதா குமாரன் என்ற தன்மைகளில் தம்மை வெளிப்படுத்தினார். பரிசுத்த ஆவி என்பது அந்த ஒரே ஆவியாகிய தேவனே. பிதாவின் ஆவி (Spirit of Father) (மத்.10:20) தேவனுடைய ஆவி (ரோ.8:9) கிறிஸ்துவின் ஆவி, இயேசு கிறிஸ்துவின் ஆவி (பிலி.1:19) குமாரனின் ஆவி (கலா.4:6) தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருப்பது கிறிஸ்துவின் ஆவி உங்களில் இருப்பதாகும். இந்த ஆவி அனைத்தும் ஒருவரையே குறிக்கிறது. இங்கு பரிசுத்த ஆவியே தேவன் என்பதை குறித்து சற்று கவனியுங்கள். ஒருவன் செய்யும் எந்த பாவமும் எந்த தூஷனமும் மனுஷனுக்கு மன்னிக்கப்படும். ஆனால் ஆவியானவருக்கு (பரிசுத்த ஆவிக்கு) விரோதமான தூஷனமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. இப்பொழுது ஒன்றை கவனியுங்கள். எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு (இயேசு கிறிஸ்துவுக்கு) விரோதமான வார்த்தை சொன்னால் அது கூட அவனுக்கு மன்னிக்கப்படும். ஆனால் எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு (ஏனென்றால் பரிசுத்த ஆவியே தேவன்) விரோதமாய் பேசுவானானால், கவனியுங்கள் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை. தியானியுங்கள் (மத்.12:31,32)

27. பரிசுத்த ஆவி ஒரு மனிதன் மேல் விழுந்தது அவன் பரிசுத்தவான். அந்த பரிசுத்த ஆவி இன்னொரு மனிதன் மேல் விழுந்தது. அவன் மாய்மாலக்காரன். கோதுமையின் மேல் விழுகிற அந்த மழை களையின் மேலும் விழுந்தது. கோதுமை எவ்விதமாக எழுந்து, நிமிர்ந்து நிற்கச் செய்கிறதோ, அதேபோல் இந்த களையும் கோதுமையை போன்றே நேராக நிமிர்ந்து நின்று சந்தோஷப்பட்டு களிக்கூரச் செய்கிறது. கவனியுங்கள் முள் செடிகளும், முள் பூண்டுகளிலும், முளைப்பிக்கிற நிலமோ, தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயும் இருக்கிறது. சுட்டெரிக்கப்படுவதே அதன் முடிவு. அதுபோலவே தேவத்துவத்தில் திரித்துவமும் ஒரு நாளில் சுட்டெரிக்கப்படப்போகிற களையாக இருந்து வளர்ந்து வருகிறது. ஆதலால் இது கூடுமானால் அது தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களையும் முட்டாள்களாக்கும் விதத்தில் இந்த களையை போன்று மிகவும் பக்தியுள்ளதாக இருக்கிறது.

28. **இயேசு :** எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே என்றார். (யோ.6:45) நாங்கள் பரிசுத்த ஆவி பேசுகிற வார்த்தையினாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்தி காண்பிக்கிறோம். (1கொரி.2:13) தேவன் பேசுகிறார், பரிசுத்த ஆவி போதிக்கிறார். பரிசுத்த ஆவியே தேவன். வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. (2தீமோ.3:16) தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள். (2பேது.1:21) தேவனுடைய ஆவி – பரிசுத்த ஆவி. தேவன் – பரிசுத்த ஆவி ஒன்றே. இயேசு தமது சீஷர்களை நோக்கி அறுப்புக்கு எஜமான் (தேவன்) தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை (தேவனை) வேண்டிக்கொள்ளுங்கள் என்றார். (மத்.9:38) அவர்கள் பரிசுத்த ஆவியினாலே அனுப்பப்பட்டு, சாலமி பட்டிணத்தில் வந்தபோது, யூதர்களின் ஜெப ஆலயங்களில் தேவனுடைய வசனத்தை பிரசங்கித்தார்கள். (அப்.13:4) தேவனும் பரிசுத்த ஆவியும் ஒருவரே, இருவரல்ல. பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்த ஊழியத்திற்காக அவர்களை பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். (அப்.13:2) ஆரோனைப்போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இக்கடினமான ஊழியத்திற்கு தானாய் ஏற்படுவதில்லை. (எபி.5:4) தேவனும் பரிசுத்த ஆவியும் ஒருவரே. ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்( யோ.3:6) தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். (1யோ.5:6) இங்கும் ஆவி – தேவன் ஒருவரே என காணலாம். தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளின் வாக்கினால் சொல்லியிருக்கிறார். (லூக்.1:73) பரிசுத்த ஆவி ஏசாயா தீர்க்கதரிசியை கொண்டு சொல்லியிருக்கிறார். (அப்.28:27) இதிலிருந்து பரிசுத்த ஆவியே தேவன் என்பதை உறுதி செய்யலாம்.

29. இப்பொழுது கவனியுங்கள். ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்து. (மத்.1:1) இவர் தாவீதுக்கு எப்படி குமாரனானார்? குமாரன் என்ற ஸ்தானத்தில் தேவகுமாரனாக, மனுஷகுமாரனாக (தீர்க்கதரிசி) சிங்காசனத்தில் இருந்து ஆளுகை நேரத்தில் தாவீதின் குமாரனாக இருப்பார். இப்பொழுது இயேசு கிறிஸ்துவினுடைய ஜநநத்தின் விவரமாவது : அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில் அவர்கள் கூடி வரும் முன்னே, அவள் (மரியாள்) பரிசுத்த ஆவியினாலே (உங்கள் உபதேசத்தன்படி தேவதுவத்தின் மூன்றாவது நபர்) கர்ப்பவதியானாள். (மத்.1:18) Now the birth of Jesus Christ was in this way : When as his mother, Mary, was espoused to Joseph, before they came together, she was found with child of the Holy Spirit. யோசேப்பும் மரியாளும் இன்னும் சேரவில்லை. இந்த நிலையில் அவள் தன் வயிற்றில் ஒரு குழந்தையை உடையவளாகயிருந்தாள். அது பரிசுத்த ஆவியினால் உண்டாயிற்று. வெறுமையான பாத்திரமாகிய அந்த மரியாள் மீது தேவனுடைய ஆவி / பரிசுத்த ஆவி அசைவாடி கொண்டிருந்தது. அதன் பலனால் அவள் கர்ப்பவதியானாள். யோசேப்பு தன் மனைவியிடம் சேரும் முன்னே அவள் ஒரு குழந்தையை தன் வயிற்றில் சுமப்பவளாகயிருந்தபடியினால் அவளை தள்ளிவிட நினைத்தான். கர்த்தருடைய தூதன் அவனுக் காணப்பட்டு, அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது, பரிசுத்த ஆவியினால் உண்டானது. ஆதலால் அவளை சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே என்று கூறினான். (மத்1:20) angel of the Lord to Joseph : Fear not to take unto thee, Mary, thy wife ; for that which is conceived in her of the Holy Spirit. கவனியுங்கள். பரிசுத்த ஆவியினால் மரியாள் கர்ப்பவதியாகி (Conceived) ஒரு குமாரனை பெற்றாள். அவருக்கு இயேசு என்று பெயரிட்டார்கள். அப்படியானால் இயேசுவினுடைய பிதா (Father) யார்? அது பரிசுத்த ஆவிதானே. தேவத்துவத்தில் பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்று மூவர் உண்டு. அதில் பிதாவின் குமாரன் இயேசு, பரிசுத்த ஆவியின் குமாரன் இயேசு, அப்படியானால் இயேசுவின் ஜநநத்தில் இவருக்கு இரு பிதா / தகப்பன்களா? சற்று சிந்தியுங்கள். நீங்கள் தேவனால் தெரிந்துக் கொள்ளப்படாவிட்டால் தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும், விசுவாசமும் உங்களிடத்தில் காணப்படாது. (தீத்.1:3) நீங்கள் சத்தியத்தை உங்கள் காதார கேட்டும் உணராதிருக்கிறீர்கள். கண்ணாரக்கண்டும் பாராதிருக்கிறீர்கள். உங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தில் உணர்ந்து குணப்படாமலும், நீங்கள் ஆரோக்கியமாகாமலும் இருக்கும்படி உங்கள் இருதயம் கொளுத்திருக்கிறது. காதுகளினால் மந்தமாக கேட்டு கண்களை மூடிக்கொண்டீர்கள் என பரிசுத்த ஆவி உங்கள் கூற்றுப்படி தேவத்துவத்தின் மூன்றாவது நபர், வேதவாக்கியங்களின் படி இயேசுவை ஜெநிப்பித்தவர் ஏசாயா தீர்க்கதரிசியைக் கொண்டு சொல்லியிருக்கிறார். எனது திரித்துவக்கோட்பாடு நண்பர்களே நீங்கள் உங்கள் இருதயத்தில் உணர்ந்து குணப்படமாட்டீர்கள். ஏனென்றால் உங்கள் இருதயமானது கொளுத்திருக்கிறது. தேவன் உங்களை கேடான சிந்தனைக்கு, திரித்துவ விசுவாசத்திற்கு, வேறொரு சுவிசேஷத்திற்கு ஒப்புக்கொடுத்துள்ளார். இப்பொழுது பரிசுத்த ஆவியினால் மரியாள் கர்ப்பவதியாகி (Conceived) ஒரு குமாரனை பெற்றாள். அவர் இயேசு என்று அழைக்கப்பட்டார். ஒரே ஆவி உண்டு. அந்த ஆவி பரிசுத்த ஆவி, நித்திய ஆவி, அந்த ஆவியே தேவன். தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக இயேசுவுக்குள் இருக்கிறது. அப்படியானால் அவர் யார்? அவர் அந்த ஆவியாகிய தேவன். மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன். மரியாள் தேவனால் கர்ப்பவதியானாள். தேவத்துவத்தில் உள்ள மூன்றாவது நபரால் அல்ல. மாறாக தேவனால் கர்ப்பவதியானாள். எவ்வாறு? தேவன் உலகத்தில் பிரவேசிக்கும்பாது தனக்கொரு சரீரத்தை மரியாள் வயிற்றில் ஆயத்தம் பண்ணினார். (எபி.10:5) A body hast thou prepared me.

30. மீண்டும் கவனியுங்கள் மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானது அல்ல. அதுவே அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி. அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது. (1யோ.4:2,3) பாருங்கள் பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும் (தேவன்) அவர்களை போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார். (தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்) மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை தனது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் : ஜீவ காலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்களை விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார். (எபி.2:14,15) இயேசு கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், உயிர்தெழுந்தார். இவ்வாறாக மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை / மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனை அறிக்கை செய்யாத எந்த ஆவியும் அந்திக்கிறிஸ்துவின் ஆவியே. (1யோ.4:2,3) கவனியுங்கள். மாம்சத்தில் வந்தது / வெளிப்பட்டது யார்? அவர் தேவன். மூவரில் ஒருவர் அல்ல. தேவன் ஒருவரே. (1தீமோ.3:16) God was manifest in flesh. அவர் கர்த்தராகிய கிறிஸ்து. (லூக்.2:11) கர்த்தராகிய கிறிஸ்து யார்? அவர் இயேசு (மத்.1:21) இந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து யார்? இவர் மகா தேவன். (Great God) (தீத்.2:13) என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன். (Who is over all God blessed for ever) சர்வத்திற்கும் மேலான தேவன் (ரோ.9:5) அப்படியானால் அவருக்கு மேல், கீழ் அல்லது அவருக்கு பக்கவாட்டில் யாரும் இருக்க முடியாது. தேவனும் இரட்சகரும் (God and saviour) (2பேது.1:1) இதோடுமட்டுமல்ல கர்த்தரும் இரட்சகரும் (Lord and Saviour) (2பேது.1:11) இன்னும் கவனியுங்கள். இவர் வல்லமையுள்ள தேவன் (The Mighty God) (ஏசா.9:6) மேலும் நித்திய பிதா (Ever lasting Father) (ஏசா.9:6) இப்பொழுது கவனியுங்கள். இப்படிப்பட்டவர் காலம் நிறைவேறின போது ஸ்திரீயினிடத்தில் பிறந்து மாம்சமானார். (கலா.4:5) ஏன்? பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கு. தேவன், தேவனுடைய குமாரன் என்ற ஸ்தானத்தில் மாம்சத்தில் பிறந்தார், மாம்சத்தில் வெளிப்பட்டார். ஏன் மாம்சமானார்? மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்தினால் அழிக்கும்படிக்கு (எபே.2:14,15, 1யோ.3:8) ஆம். ஒரு பாலகன் பிறந்தார். ஒரு பாலகன் கொடுக்கப்பட்டார். ஆனால் கர்த்தத்துவம் / தேவத்துவம் அவர் தோல் மேல்

தான். இன்னொருவர் மேல் அல்ல. கர்த்தத்துவத்தை / தேவத்துவத்தை மூன்றாக பங்கிட்டுக்கொள்ளவில்லை. தேவத்துவத்தின் ஒரே தன்மையும், வல்லமையும், நித்தியத்தையும் உடைய பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய மூவர் உண்டு என்ற ஞானம் பேய்தனத்திற்கடுத்ததுமாயிருக்கிறது. வேதவாக்கியங்களில் திரியேகத்துவம் என்னும் கொள்கை பற்றி ஒரு வாக்கியத்தில் கூட விவரமாக சொல்லப்படவில்லை. நான் வேத அகராதிகளின் வாயிலாக அறிந்தது என்னவென்றால் கி.பி.325 ல் பிரதானமான நீசியின் விசுவாச பிரமாணத்தில் (Nicene creed) பிதாவுக்கும், குமாரனுக்கும் இருக்கிற சம்பந்தத்தை விவரித்து, கி.பி.381 ல் கான்ஸ்தின்டிரியல் (Constantinople) கூடின சங்கத்தார் பரிசுத்த ஆவி பிதாவிலும், குமாரனிலும் இருந்து புறப்படுகிறவர் என்பதை விளக்கி காட்டினார்கள். ஏறக்குறைய கி.பி. 500 ல் அதனாசியஸ் விசுவாச பிரமாணம் உதயமானது. இது அதனாசியா என்பவர் இயற்றிய விசுவாச பிரமாணம் இல்லை. மேலும் இதை இயக்கியவர் யார் என்ற விவரம் தெரியவில்லை. ஆனால் இந்த விசுவாச பிரமாணத்தை ஆறாம் நூற்றாண்டில் சபைகள் அங்கீகரித்ததாக கூறப்பட்டுள்ளது.

31. கவனியுங்கள். அவர் உலகத்தில் இருந்தார். (யார்? தேவனாயிருந்த வார்த்தை – கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) உலகம் அவரால் உண்டாயிற்று. யாரால்? கர்த்தாவே நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது. (எபி.1:10) அவர் உலகத்தில் இருந்தார். உலகமோ அவரை அறியவில்லை. (யோ.1:10) He was in the World and the World was made by him and the World knew him not. அன்று உலகம் அறியவில்லை. அறிந்திருந்தால் சிலுவையில் ஆணி அடித்து கொலை செய்திருக்க மாட்டார்களே? இன்றும் அறிந்திருந்தார்களானால் தேவத்துவத்தில் அவருக்கு இரண்டாவது இடத்தை கொடுத்து அவரை யூதாசைப்போன்று மறுதலித்திருக்க மாட்டார்களே? கவனியுங்கள் ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார். (ஆதி.1:1) In the beginning God created the heaven and earth. ஆம் ஒரே தேவன் நம்மை சிருஷ்டித்தார். (மல்.2:10) அவர் யார்? தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். (1தீமோ.3:16) ஆம் அவர் உலகத்தில் இருந்தார். உலகமோ அவரை அறியவில்லை. நீங்களும் அவரை அறியவில்லை.

32. **யோவான் இயேசுவைக்குறித்து** : ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்து (யோ.1:1) In the beginning was the word and the word was God. வார்த்தை (Word) தான் தேவன்(God). தேவன் (God) தான் வார்த்தை. தேவன் தான் கர்த்தர் (Lord), கர்த்தர் தான் தேவன். ஆதலால் தான் அவர் தேவனாகிய கர்த்தர் என்று அழைக்கப்படுகிறார். தேவன் ஒரு ஆவி. கர்த்தரும் ஒரு ஆவி. ஆக அந்த ஆவியே தேவன். தேவன் / கர்த்தர் தான் அந்த ஆவி. ஆகவே தேவன் ஒருவர், அவரே வார்த்தை என்ற ஒறுமைபாட்டை மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து. உங்களையும் உங்கள் வார்த்தையையும் பிரிக்க முடியாது. என்னையையும் என் வார்த்தையையும் பிரிக்க முடியாது. நானே என் வார்த்தை. என் வார்த்தையே நான். இதை பிரிக்க முடியாது. அதன்படி தேவனையும், வார்த்தையையும் பிரிக்கிறவன் அந்திக்கிறிஸ்து. பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவன் அந்திக்கிறிஸ்து (1யோ.2:22). பிதாவும் குமாரனும் இருவரல்ல, கர்த்தரும் கிறிஸ்துவும் இருவரல்ல. தேவனும் வார்த்தையும் இருவரல்ல. அப்படியானால் பிதாவும் குமாரனும் ஒரே நபரே. ஆவியாகிய தேவனுடைய இரு தன்மைகள். குமாரனை நீங்கள் ஒரு தனிப்பட்ட நபராக்க முடியாது. (யோ.10:30, யோ.16:32). குமாரனை கண்டவன்தான் பிதாவை கண்டான். (யோ.14:9) நம்முடைய ஐக்கியம் பிதாவோடும் குமாரனோடும் இருக்க வேண்டும்.(1யோ.1:3) நம்முடைய ஐக்கியம் பிதாவோடு மாத்திரம் அல்லாது குமாரனோடு மாத்திரம் இருக்க முடியாது. கர்த்தரும் கிறிஸ்துவும் ஒருவரே. (லூக்.2:11) தேவனும் வார்த்தையும் ஒருவரே. (யோ.1:1) Word was with God கர்த்தராகிய கிறிஸ்து. நான் கர்த்தர் இது என்னுடைய நாமம். (ஏசா.42:8) நான் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை. (யா.5:43) என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது. (யாத்.23:21) ஆக பிதா ஒருவர் குமாரன் ஒருவர், பரிசுத்த ஆவி ஒருவர் என்பவர்கள் தேவனுடைய ஆவியினால் உண்டானவர்கள் அல்ல. **இயேசு தம்மை குறித்து** : காலம் வரும், அப்பொழுது நான் உவமைகளாய் உங்களுடனே பேசாமல், பிதாவைக்குறித்து வெளிப்படையாக உங்களுக்கு அறிவிப்பேன். அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) வேண்டிக்கொள்வீர்கள். உங்களுக்காக பிதாவை நான் கேட்டுக்கொள்வேன் என்று உங்களுக்கு சொல்ல வேண்டியதில்லை. அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள். ஸ்தாபனத்தாரைப் போன்று இந்த விண்ணப்பத்தை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே கேட்டுக்கொள்ளுகிறோம் எங்கள் பரமபிதாவே என்று ஜெபிக்க வேண்டிய தேவையில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் வேண்டிக்கொள்ளுகிறோம் என்று ஜெபித்தாலே போதும். தியானியுங்கள் யோ.16:25,26.

33. தேவன் ஒருவரே. (ரோ.3:30) அந்த தேவன் ஒரு ஆவி. அந்த ஆவியாகிய தேவன் ஒரு காலக்கட்டத்தில் நமக்கு மேல் பிதாவாக. நமக்கு மேல் இருந்து தீர்க்கதரிசிகளோடும் மனுமக்களோடும் இடைப்பட்டார். பின் ஒரு காலக்கட்டத்தில் அவர் மாம்சசரீரத்தில் வந்து மனுஷகுமாரனாக மனுமக்களோடு சஞ்சரித்து வந்தார். மனுமக்களுடைய பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், உயிர்தெழுந்தார். பின் ஒரு காலக்கட்டத்தில் மனுமக்களுக்குள் இருந்து, பரிசுத்த ஆவியாக நமக்குள் இருந்து, நம்மில் வாசம் செய்து, தம்மை நம்மில் வெளிப்படுத்துகிறார். இந்த கடைசி கட்டம் சபைக்காலத்துக்கு வாக்குதத்தம் பண்ணப்பட்ட ஒன்றாகும். பொதுவாக எல்லா வாக்குதத்தங்களும் நமக்கு ஆபிரகாம் மூலம் அளிக்கப்பட்டுள்ளது. ஆபிரகாம் வாக்குத்தத்தின் தகப்பன். தேவன் வாக்குதத்தத்தை ஆபிரகாமுக்கும், அவன் பின் வரும் சந்ததிக்கும் கொடுத்துள்ளார். நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். ஊழியக்காரர்(Servants) மேலும் ஊழியக்காரிகள்

மேலும்(Handmaids). கிறிஸ்துவின் சுவிசேஷத்தை தங்கள் சுயவிருப்பத்தின்படி பிரசங்கிக்கும் வெண்ணிற ஆடை பெண் பிரசங்கிகள் மேல் அல்ல. அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன். (யோவேல்.2:29) எருசலேமின் மேல் வீட்டில் ஏறியிருந்த ஏறக்குறைய 120 பேர்களும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். இது தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே நடந்தேறியது. (அப்.2:4, 16) ஏனென்றால் இந்த வாக்கு தத்தமானது நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்தில் உள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது. (அப்.2:39)

34. அந்த ஆவி, தேவனுடைய ஆவி, நித்திய ஆவி, **பரிசுத்த ஆவி உன்னதத்திலிருந்து வரும் பலன் ஆகும்.** (அப்.1:8) அதாவது பெந்தெகொஸ்தே நாளன்று ஆரம்பமான சபையானது, தேவனுடைய குமாரனை பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்கு தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் பூரணப்படும் பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், கர்த்தருடைய காரியங்களை செய்ய கர்த்தருடைய ஆவி, தேவனுடைய ஆவி, பரிசுத்த ஆவி, உன்னதத்தின் பலன் உங்களுக்குள். (அப்.1:8) இது ஏசா.32:15 ல் நாம் தியானிக்கும் உன்னதத்திலிருந்து நம்மேல் ஊற்றப்பட்ட ஆவி. சீஷர்கள் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருக்க கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.(லூக்.24:49) மேலும் இது கர்த்தருடைய காரியங்களை, அவருக்கடுத்த பணிகளை நீங்கள் செய்ய கர்த்தருடைய ஆவி உங்களுக்குள். (அ) பாருங்கள் கர்த்தர் மோசேயிடம் நீ போ ; நான் உன் வாயோடேயிருந்து, நீ பேச வேண்டியதை உனக்கு போதிப்பேன். நீ அவனுக்கு (லேவியனாகிய ஆரோன், உன் சகோதரன்) தேவனாகயிருப்பாய். (யாத்.4:15,16) கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா, ஆகாபை (யூதாவின் ராஜா) நோக்கி : என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நான் அவருடைய ஜீவனை கொண்டு சொல்லுகிறேன் என்றான். (1ராஜா17:1) கவனியுங்கள். ஆகாப் ரதத்திற்கு முன்பாக எலியா ஓடினான். (1ராஜா.18:46) எதனால்? தேவ பலத்தினால். நீயும் ஒரு பாவிக்கு முன்மாதிரியாக அவனுக்கு முன்பாக ஓடு. (ஆ) ஸ்தேவான் பேசிய ஞானத்தையும், ஆவியையும் எதிர்த்து நிற்க லிபர்த்தீனர் என்னப்பட்டவர்களின் ஆலயத்தை சேர்ந்தவர்களிலும், சிரேனே பட்டணத்தாரிலும், அலெக்சந்திரியா பட்டிணத்தாரிலும், சிலிசியா நாட்டாரிலும், ஆசியா தேசத்தாரிலும் கூடாமற் போயிற்று. அவர்கள் அனைவரும் ஸ்தேவானுடைய முகம், தேவதூதனின் முகம்போலிருக்க கண்டார்கள். (அப்.6:10,15) (இ) தேவாலயத்தில் தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்த ஒரு மனுஷன், பேதுருவையும் யோவானையும் கண்டு பிச்சைக்கேட்டான். பேதுரு அவனை உற்றுப்பார்த்து : வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை, என்னிடத்தில் உள்ளதை உனக்கு தருகிறேன், நசரேனாகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி ; வலது கையினால் அவனை பிடித்து தூக்கி விட்டான். உடனே அவனது கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான். (அப்.3:2-8) இதுதான் கர்த்தருடைய காரியங்களை செய்ய கர்த்தருடைய ஆவி நமக்குள். அதாவது பரிசுத்த ஆவி நமக்குள். (ஈ) மேலும் கவனியுங்கள். அப்.பவுல் காலமே தொடங்கி சாயங்காலம் மட்டும் போதித்தான். சாட்சிக்கொடுத்தான். இது என்ன? இதுதான் தேவபெலன். (அப்.28:23) பவுல் நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான். அப்பொழுது மிகுந்த தூக்கமடைந்து, நித்திரை மயக்கத்தினால் ஐத்திகு என்னும் பெயர் கொண்ட வாலிபன் மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து மரித்தான். பவுல் இறங்கி போய் அவன் மேல் விழுந்து அவனை அணைத்துக்கொண்டு, கலங்காதிருங்கள் இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்றான். அந்த வாலிபனை உயிருள்ளவனாக கூட்டிக்கொண்டு வந்து மிகுந்த ஆறுதலடைந்தார்கள். இதுதான் உன்னதத்திலிருந்து வரும் பலன். (அப்.20:7-12) (உ) மேலும் கவனியுங்கள். பவுலைச் சார்ந்தவர்களில் ஒருவனும் அவனோடே கூட இருக்கவில்லை. எல்லாரும் அவனை கைவிட்டார்கள். ஆனால் கர்த்தரோ அவனுக்கு துணையாக நின்று, அவனுடைய பிரசங்கத்தை நிறைவேற்றினார். (2தீமோ.4:16) அதுபோலத்தான் கடைசிக்கால செய்தி, ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தி, மணவாட்டியினுடைய செய்தி என பலவாறு தங்கள் ஊழியங்களை வர்ணித்துக்கொண்டு, எபே.4:11-13 ல் கூறப்பட்டுள்ள சுவிசேஷகனுடைய ஊழியத்தை காலேப் யோசுவா செய்தாலும் அவனை அவர்கள் அனைவரும் வெறுத்தாலும், கைவிட்டாலும், கர்த்தரோ அவனுக்கு துணையாக நின்று அவனுடைய ஊழியத்தை தாங்கி வருகிறார். வழிநடத்தி வருகிறார். எல்லா தீமைகளிலிருந்தும் இரட்சித்து வருகிறார். அவருக்கே சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்.

**35. எனக்கடுத்த காரியங்களிலும், என் சுக நலன்களிலும் என் தேவன் என்னை பலப்படுத்தி வருகிறார்.**
கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக எனக்கு சுவிசேஷகனுடைய ஊழியத்தை கொடுத்து, 1978 முதல் இம்மட்டும் நடத்தி வருகிற என் தேவன் என்னை அழைத்தவர், ஏற்படுத்தினவர், எந்த நிலையில் என்னை வைத்து தாம் கொடுத்த ஊழியத்தை நான் நிறைவேற்ற என்னை வழிநடத்தி வருகிறார் என்ற எனக்கடுத்த காரியங்களை நீங்கள் அறிந்து எனக்காக உங்கள் ஜெபங்களில் மன்றாட இதை உங்களுக்கு எழுதுகிறேன். (1) முதலாவது எனது இரத்தகுழாய்களில் மூன்று அடைப்புகள் பல ஆண்டுகளாக உள்ளது. (2) மேலும் நான் ஒரு அதிக அளவு இரத்தக்கொதிப்புள்ள நபர். (3) உடம்பில் சர்க்கரையின் அளவு 350-450 அளவில் உள்ளது. (4) இந்நாட்களில் நவம்பர் 11 ம் தேி எனது ஸ்கூட்டியிலிருந்து கீழே விழுந்து இடது முழங்கால் மூட்டு சேதம், அன்று முதல் இன்று வரை வெளியே நடமாட்டம் கிடையாது. மருத்துவர்கள் 120 நாட்கள் கழித்து தான் வெளியே நடமாடலாம் என கூறிவிட்டார்கள். இந்நிலையில் எனக்கு வழக்கமாக DTP பணிசெய்யும் பெண் மணியை 35 + 35 =

70 கிலோ மீட்டர் பிரயாணம் செய்து DTP பணிகளை செய்து கொடுக்கிறார்கள். இதற்கு முன் நான்தான் அங்கு சென்று வந்தேன். தற்போது என் நிலையை பார்த்து அவர்கள் சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் DTP பணியை எனது இல்லத்திற்கு வந்து செய்து கொடுக்கிறார்கள். (5) அடுத்து எனது இரு பெண்கள் திருமணம் நடவாத காரியம். ஆனாலும் அவர்கள் தங்களது விசுவாசத்தை காத்துக்கொண்டுவருகிறார்கள். (6) சூழ்நிலையின் நிமித்தமாக நானும், எனது மனைவி, இரண்டு பிள்ளைகளும் இரயிலில் 2 டயர் AC கோச்சில் சென்னையிலிருந்து விஜயவாடா பிரயாணம் செய்தோம். இரவில் சுமார் 11 மணிக்கு படுக்கைக்கு சென்றோம். காலை 1 மணியளவில் முழித்துப்பார்த்தால் கைபேசி வைத்த இடத்தில் இல்லை. அயர்ந்த நித்திரையான அந்த வேளையில் மொபைல் களவு போய்விட்டது. புகார் கொடுத்தும் இதுவரை பலன் இல்லை. நானும் விடாது முயற்சி செய்து வருகிறேன். (7) அடுத்து நாசரேத் தபால்துறையுடன் போராட்டம். போஸ்ட் மாஸ்டர் காழ்ப்புணர்ச்சியுடன் நான் இயேசுவே வாரும் புத்தகத்திற்கு ரூ.4/- தபால்தலை ஒட்ட வேண்டுமென சட்டத்திற்கு புறம்பாக என்னை நிர்பந்தப்படுத்தி வருகிறார். நானோ நடைமுறை சட்டத்தின் படி ரூ.1/- ஒட்டினால் போதுமென போராடி வருகிறேன். இந்த பிரச்சனை இதுவரை ஓய்ந்த பாடில்லை. இரயில்வே மற்றும் தபால்துறை காரியங்கள் நீதிமன்றங்களில் வழக்கை எதிர்நோக்கி கொண்டிருக்கிறது. (8) எனக்கு வாயில் சுமார் 6 பற்கள் மட்டுமே உள்ளன. இதைக்கொண்டு 6-7 வருடங்களாக மகிழ்ச்சியாக அசைவ உணவுகளை அநுதினமும் புசித்து வாழ்ந்து வரும் நிலையில் இப்பொழுது ஒரு நேரத்தில் 6 பற்களும் அசைய ஆரம்பித்து விட்டது. இப்பொழுது அனைத்து பற்களையும் பிடுங்கி, பல் கட்டப்பட வேண்டிய காலத்திற்குள் இருக்கிறேன். (9) சொந்த வீட்டில் தண்ணீர் பிரச்சனை மிக்க மோசமான நிலையில், சுத்திகரிக்கப்பட கூடாத நிலையில் இருக்கிறது. கிணறு வெட்டினேன் பிரயோஜனமில்லை. போர் போட்டேன். தண்ணீர் கடல் தண்ணீரை விட மோசமான நிலையில் சுத்திகரிக்கபடக்கூடாத நிலையில் உள்ளது என்கிறார்கள். (10) மூத்த மருமகள் வீட்டாரோடும் பிரச்சனை. காலம் 10 ஆண்டுகள் கடந்து விட்டாலும் பிரச்சனை ஓய்ந்தபாடில்லை. (11) சொத்து அடமானமாக தூத்துக்குடி, நாசரேத் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்று அந்த காலத்தில் தொழில் செய்தேன். தொழிலை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. கடனை கட்டி முடித்தேன். அடமான மூலப்பத்திரங்கள் அனைத்தையும் பெற்றுக்கொண்டேன். ஆனாலும் சப் ரிஜிஸ்டர் அலுவலகத்திலிருந்து வில்லங்கங்களை நீக்க வங்கி ஒத்துழைக்க மறுக்கிறார்கள். வழக்கறிஞர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக இல்லை. இதனால் இந்த போராட்டம் பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. (12) அடுத்து சென்னை வாழ், நாசரேத் ஊரைச் சார்ந்த கிறிஸ்தவர் ஒருவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்தார். எனக்கு அறிமுகமானார். நாசரேத் எனது சொந்த ஊராகிய திருவைகுண்டம் அருகில் உள்ளது. ஆதலால் அவரிடம் கொஞ்சம் நெருக்கம் ஏற்பட்டது. நான் ஒரு கிறிஸ்தவன் மற்றும் ஊழியக்காரன் என்ற கருணை அடிப்படையில் 3 இடங்கள் வாங்கினால் 1 இடம் இலவசமாக தருகிறேன் என கூறினார். 3 இடங்களை வாங்கினேன் 4 வது இடத்தை பல ஆண்டுகளாக கொடுக்காமல் என்னை ஏமாற்றி விட்டார். பின்னொரு காலக்கட்டத்தில் தான் இவர் கிறிஸ்தவர் என்று கூறி கூறி மக்களை ஏமாற்றும் ஒரு பெரிய மோசடி பார்ட்டி என அறிய வந்தேன். ஆக எனது போராட்டங்களில் நாசரேத் முக்கிய பங்கு வகிக்கிறது. (13) உற்றார் உறவினர்களிடத்தில் அதிக நெருக்கமான உறவு இல்லை. (14) ஆவிக்குரிய சகோதரர் என்று கூற ஒரு கைவிரல் எண்ணிக்கை தேறுவார்களா என்பது சந்தேகம். சத்தியத்தை போதிப்பதால், எழுதுவதால் அனைவராலும் பகைக்கப்பட்ட நிலையில் உள்ளேன். இப்படிப்பட்ட போராட்டங்கள், பிரச்சனைகள் மத்தியிலும் என் தேவன் என்னை வைத்துள்ள நிலையில் மனரம்மியமாக இருந்து அவர் என்னிடம் ஒப்படைத்த ஊழியத்தை அவர் விரும்புகிற விதமாகவே செய்து வருகிறேன். கூடுமானால் எல்லா மனுஷர்களோடும் சமாதானமாயிருக்கவே விரும்புகிறேன். ஆனாலும் என் மனது என்னைக்குறித்து சொல்லும் சாட்சியில் என் புகழ்ச்சி இருக்கிறது. மேலும் அவருடைய கிருபை எனக்கு போதுமானதாகயிருக்கிறது. நான் எந்த நிலையில் இருந்தாலும் அந்த நிலையில் மனரம்மியமாக இருக்க கற்றுக்கொண்டேன். அதன் நிமித்தமாகவே இந்த நிருபம் என் பலவீனத்தின் மத்தியில் உங்கள் கரங்களில் வந்தடைந்துள்ளது.

**36. பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியின் கிரியைகள்.**

வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. (2தீமோ.3:16) நமது கரத்திலுள்ள பரிசுத்த வேதாகமம் தேவஆவியினால் ஏவப்பட பரிசுத்த மனிதர்கள் எழுதினார்கள். தேவனுடைய ஆவியினால் தூண்டப்பட்ட அவர்கள் எழுதும் எழுத்தாணிகளாக இருந்தார்கள். வேத எழுத்துக்கள் அனைத்தையும் ஆவியானவர் ஒரே நேரத்தில் பரிசுத்த மனிதர்களை ஊக்குவித்து எழுதிக்கொடுக்கவில்லை. எழுதியவர்களின் எழுதுகோலை பிடித்து பரிசுத்த மனிதர்களை எழுதவைக்கவும் இல்லை. பரிசுத்தவான்களுடைய அபிப்ராயமும் இதில் அடங்கியுள்ளது. (1கொரி.7:10, 29, 35) பழைய ஏற்பாடு யூதர்களால் கி.பி.90ல் ஏற்றுக்கொள்ளப்பட்டதாம். புதிய ஏற்பாடு கி.பி. நான்காம் நூற்றாண்டில் திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்டதாம். 40 முதல் 45 பேர்களால் எழுதப்பட்டதாம். 20 வது நூற்றாண்டில் தான் முழு பைபில் உருவானதாம். நாம் இதில் உள்ள சத்தியத்தை விற்க கூடாது, விலை பேச கூடாது, மாறாக இதை வாங்க வேண்டும். (நீதி.23:23) மேலும் இதிலுள்ள வேதவாக்கியங்களில் ஆராய்ச்சி செய்யக்கூடாது. வேதவாக்கியங்களை நாம் ஆராயந்து மாத்திரமே பார்க்கலாம். பரிசுத்த ஆவியே தேவன். அவர் பிதாவாக எல்லார் மேலும் அடுத்து குமாரன் என்ற ஸ்தானத்தில் அவருடைய பணியை நிறைவேற்ற நம் எல்லாரோடும் குமாரனாகயிருந்தார். இப்பொழுது பரிசுத்த ஆவியே நம் எல்லாருக்குள்ளும் நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவி வாசம் செய்யும் ஆலயம். அதாவது தேவனுடைய ஆவி நம்மில் வாசமாயிருக்கிறார். (எபே.4:5, 1கொரி. 3:16) (அ) தாவீது : உமது பரிசுத்த ஆவியை (Holy Spirit) என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும். (சங்.51:11) (ஆ) அவர்களோ கலகம் பண்ணி அவருடைய பரிசுத்த ஆவியை (Holy Spirit) விசனப்படுத்தினார்கள். (ஏசா.63:10)

(இ) அவர்கள் நடுவிலே தம்முடைய பரிசுத்த ஆவியை (Holy Spirit) இருக்க கட்டளையிட்டார். (ஏசா.63:12) ஆக பரிசுத்த ஆவியின் கிரியைகள் புதிய ஏற்பாட்டின் சபைக்காலத்தில் மாத்திரம் அல்ல. அது பூர்வ காலம் முதல் உள்ளதாகும்.

37. பரிசுத்த ஆவி குறித்து லவோதிக்கேயா சபைக்கால தூதன் தன் செய்திகளில் கூறியதில் சிலவற்றை இங்கே தருகிறேன். பரிசுத்த ஆவி என்னவென்று நீங்கள் அறியாமல் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது என்னவென்று அறிந்த பிறகு அது உங்களுக்கு கொடுக்கப்படுகிறது, அது உங்களுக்குள்ளே என்று விசுவாசியாமல் போனால் அதை பெற்றுக்கொள்ள முடியாது. அது என்ன பலன்களை அளிக்குமென்று உங்களுக்கு தெரியாமல் போனால் நீங்கள் அதை பெற்றுக்கொண்டீர்களா இல்லையா என்று அறிய முடியாது. எனவே அது என்ன என்றும், அது யாருக்கு அருளப்படும் என்றும், அது வரும்போது என்ன கிரியை நடப்பிக்கும் என்று நீங்கள் அறிந்தீர்களானால் அதை நீங்கள் பெறும்போது எதை பெற்றுக்கொண்டீர்கள் என்பதை அறிவீர்கள். அது அதை முடித்து விடுகிறது. (பரிசுத்த ஆவி என்பது என்ன? நாள்.16.12.1959 பத்தி.22.) பரிசுத்த ஆவியை நீ பெறும்போது அந்நிய பாஷையை நீ கட்டாயமாக பேச வேண்டும் என்கிறார்கள். அது முட்டாள்தனம். அந்த சரக்கை வெளியே கொட்டு. உங்களுடைய பழைய பாரம்பரியத்தை வெளியே கொட்டுங்கள். தேவனுடைய வார்த்தைக்கு வாருங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் மனந்திரும்பி உங்கள் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள். நீங்கள் பரிசுத்த ஆவியை பெற்றபின், ஆவியின் வரங்கள் உங்களில் / சபையில் கிரியை செய்யும். வரங்களில் வித்தியாசங்கள் உண்டு. பற்பல பாஷைகளில் பேசுவது, வியாக்கியானம் பண்ணுதல் அனைத்தும் ஆவியின் வரங்கள். ஆவியின் வரங்கள் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்படுகிறது. ஆவியானவர் தமது சித்தத்தின்படியே அவனவனுக்கு பகிர்ந்து கொடுக்கிறார். வரங்கள் ஜெபித்து பெற்றுக் கொள்வது அல்ல. தியானியுங்கள். (1கொரி.12:4,7,10,11) கிறிஸ்துவின் சரீரத்துக்குள் ஒன்பது ஆவிக்குரிய வரங்கள் இருந்து கிரியை நடப்பிக்கிறது. நீ கிறிஸ்துவின் சரீரத்துக்குள் (ஸ்தாபன சபைகளுக்குள் அல்ல), அது ஒரு Public Limited கம்பெனி, தனியார் சபைகளுக்குள் அல்ல அது ஒரு Private Limited கம்பெனி. மாறாக கிறிஸ்துவின் சரீரத்துக்குள் அவயவமாயிருப்பாயாகில் நிச்சயமாக ஆவிக்குரிய வரம் உன்னிலிருந்து நடப்பிக்கப்படும். பாருங்கள் மானிட சரீரத்தில் ஒவ்வொரு அவயவத்திற்கும் ஒவ்வொரு வேலை உண்டு. பணியில்லாமல் எந்தவொரு அவயவமும் கிடையாது. அதேபோன்று கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒருவன் ஏதாவது ஒரு வரத்தை உடையவனாகயிருந்து கிரியை நடப்பிக்கிறவனாகயிருக்க வேண்டும். சும்மா, தண்டதீவட்டியாக இருந்துக் கொண்டு, புசித்து குடித்து தூங்கி எழுந்திருக்க முடியாது. ஆம் நீ வெறுமையாக / சும்மா இருக்க முடியவே முடியாது. ஒருவனுக்கு ஒரு ஊழியம் உண்டு. இதுகுறித்து யார் என்ன கூறினாலும் சரி, நீ அதுகுறித்து கவலைபட தேவையில்லை. உன்னிடம் தேவனுடைய வார்த்தை என்னக்கூறுகிறதோ அதே சரி, மற்றவை அனைத்தும் பொய்.

38. **பரிசுத்த ஆவி சபைக்காலத்திற்கு வாக்களிக்கப்பட்ட ஒரு வாக்குதத்தமாயிருக்கிறது**. இது யோவேல் 2:28,29 ல் கூறப்பட்டுள்ள வாக்குதத்ததின் நிறைவேறுதலாகும். மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். ஊழியக்காரர் (Servants) ஊழியக்காரிகள் (Handmaids) மேல் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன் என்று யோவேல் தீர்க்கதரிசனமாக கூறியுள்ளான். அதன் நிறைவுதான் இது. இதுகுறித்து அப்.2:16-18 வசனங்களை தியானிக்கலாம். மேலும் ஏசா.44:4 வுடனும் யோ.7:37-39 வசனங்களிலும் தியானிக்கலாம். இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களை நோக்கி யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான் : நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆதலால் நீங்கள் எருசலேமை விட்டு போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். (அப்.1:4,5) அவர்கள் எருசலேமிற்கு வந்தபோது மேல் வீட்டில் ஏறினார்கள். அங்கே அவர்கள் எல்லாரும் ஸ்திரீகளோடும், இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடும் கூட ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். அவர்கள் ஏறக்குறைய 120 பேராயிருந்தார்கள். இதன்பின்பு பெந்தெகொஸ்தே எனும் நாள் வந்தது. அவர்கள் எல்லோரும் ஒருமனப்பட்டு மேல் வீட்டில் கூடியிருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கம் உண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினி மயமான நாவுகள் போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் அமர்ந்து, அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். (அப்.1:12-15, 2:1-4) வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டார்கள். இதோடு மட்டுமல்ல, இயேசு கிறிஸ்துவின் முன்னோடியாகிய யோவான் ஸ்நானன், என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும், உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்றான் (லூக்.3:16) ஆம், இயேசு கிறிஸ்து தாமே நம்மை பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணுகிறவர். இப்பொழுது பரிசுத்த ஆவியை பெறுவதற்கு அப்.2:38க்கு கீழ்படிந்து பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளுங்கள். அவர் உங்கள் வேண்டுதலைக்கேட்டு பரிசுத்த ஆவியை உங்களுக்கு தந்தருளுவார். (லூக்.11:13) அன்று சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. பேதுரு பிரசங்கியாக இருந்தார். மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்களில் ஒருவராவது அந்நிய பாஷையில் பேசியதாக அங்கு கூறப்படவில்லை. பெந்தெகொஸ்தே என்பது ஒரு ஸ்தாபனம் அல்ல. அது விரும்பும் யாவருக்கும் கிடைக்கும் ஒரு உன்னத அனுபவம். இவ்வனுபவம் ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் உரியது. ஆனால் அந்த தனிப்பட்ட நபர்

பரிசுத்த ஆவியை அது என்னவென்றும் அது அப்படி பெற்றுக்கொள்வது என்றும் அறிந்திருக்க வேண்டும். அதற்கு ஒரே வழி அப்.2:38 அன்றி வேறொரு வழியில்லை.

**39. பரிசுத்த ஆவி ஒரு அடையாளம்.** தேவன், தாம் ஆபிரகாமிற்கு அளித்த வாக்குதத்தத்திற்கு அவன் உண்மையாயிருந்தான் என்று கண்டபோது, அதாவது அவனுக்கு ஒரு பிள்ளை பிறப்பான் என்றும், அந்த பிள்ளையின் மூலம் உலகம் முழுவதும் ஆசீர்வதிக்கப்படும் என்ற வாக்குதத்தத்திற்கு அவன் உண்மையாயிருந்தான் என்று கண்டபோது, அவர் அவனது விசுவாசத்தை உறுதிப்படுத்த ஒரு அடையாளத்தை கொடுத்தார். அந்த அடையாளம் தான் விருத்தசேதனம். அது பரிசுத்த ஆவிக்கு உதாரணம், எடுத்துக்காட்டு. ஆபிரகாமுடைய பிள்ளைகளுக்கும், அவனுக்கு பின்வரும் சந்ததியும், தங்கள் மாம்சத்தில் இந்த அடையளத்தை பெற்றிருக்க வேண்டும். அது அவர்களை மற்ற ஜனங்களிடமிருந்து வேறுபிரிக்கும் ஒரு அடையாளம். பாருங்கள் ஒரு பேர் கிறிஸ்தவனுக்கும், பரிசுத்த ஆவியினால் நிறைந்த ஒரு கிறிஸ்தவனுக்குமிடையே நிறைய வித்தியாசம் உண்டு. இருதயம் விருத்தசேதனமானது என்பதற்கு அடையாளமாக பரிசுத்த ஆவி உண்டு. அது தேவனுடைய சபையை மற்ற எல்லாக்கோட்பாடுகளிலிருந்தும், ஸ்தாபனங்களிலிருந்தும் வேறுப்பிரிக்கிறது. பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் எல்லா ஸ்தாபனங்களிலும் உள்ளனர். இருப்பினும் அவர்கள் பிரித்தெடுக்கப்பட்ட மக்களே. அன்று விருத்தசேதனம் பெறாதவன், விருத்தசேதனம் பெற்ற சபையோரிடம் ஐக்கியம் கொள்ளக்கூடாது. அதுபோல இன்றும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றவர்கள், பரிசுத்த ஆவியை பெறாதவர்களிடம் ஐக்கியம் கொள்ள மாட்டார்கள். நீங்கள் புறாக்களும், காகங்களும் ஐக்கியம் கொள்வதை காண முடியாது. அவர்கள் இரண்டினுடைய பழக்க வழக்கங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமானது. அவைகளுடைய விருப்பங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை. அப்படியே ஒரு உலகத்தானுக்கும், ஸ்தாபன சபை கிறிஸ்தவனுக்கும், பரிசுத்த ஆவியை பெற்று இருதயத்தில் விருத்தசேதனம் செய்யப்பட்ட கிறிஸ்தவனுக்குமிடையே வித்தியாசம் உள்ளது. விருத்தசேதனம் என்றால் மாம்சத்தை அறுத்தல் என பொருள்படும். அந்நாட்களில் ஆண்களுக்கு மாத்திரமே விருத்தசேதனம் செய்யப்பட்டது. இன்று இந்த விருத்தசேதன நடைமுறை முஸ்லீம் ஜனங்கள் மத்தியில் இருப்பதை நாம் காணலாம். அவர்கள் இஸ்மவேலின் சந்ததியார் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இப்பொழுது பெண்களுக்கு விருத்தசேதன முறைமை கிடையாது. ஏனென்றால் ஒரு பெண் ஒரு ஆணை திருமணம் செய்யும் பொழுது, அவள் அவனுடைய ஒரு பாகமாகி விடுகிறாள். ஆதலால் அவனுடன் அவளும் விருத்தசேதனம் செய்யப்பட்டதாக கருதப்பட்டது. பொதுவாக பரிசுத்த ஆவி உங்கள் மேல் வரும்போது நீங்கள் முற்றிலுமாக வித்தியாசமாகி விடுவீர்கள். உங்களிடத்தில் முற்றிலுமான ஒரு மாற்றம். அப்பொழுது இவ்வுலக்கத்தின் சிந்தனைகள் உங்களுக்கு பிடிக்காது. ஆதலால் அவர்கள் உங்களுக்கு விரோதமாகி வருகின்றனர். அவர்கள் உங்களுடன் எந்தவிதமான தொடர்பும் கொள்ள விரும்புவதில்லை. நீங்கள் வேறொரு உலகில் பிறந்து வளருகிறீர்கள். ஆதலால் நீங்கள் அவர்களுக்கு அந்நியராக இருந்து வருகிறீர்கள். பரிசுத்த ஆவி உங்களுள் வரும்போது நீங்கள் வித்தியாசமாகிவிடுகிறீர்கள். அது ஒரு அடையாளம். அது மதத்தலைவனாக இருந்தாலும் சரி, பிஷப், தலைமை போதகன் போன்ற அந்தஸ்துக்களை உடையவனாக இருந்தாலும் சரி, அது பாஸ்டர் மற்றும் விசுவாசிகளாகயிருந்தாலும் சரி, தங்களுடைய பிரத்தியேகமான ஆடைகளினாலும், வெண்ணிற ஆடைகளினாலும் அவர்கள் தங்களை பரிசுத்தப்படுத்தலாகாது. வெண்ணிற ஆடை, சபைகளில் பற்பல பதவிகள் பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் என்பதற்கு அடையாளம் ஆகாது.

**40. பரிசுத்த ஆவி ஒரு முத்திரையாகும்.** அன்றியும் நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப்பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள். (எபே.4:30) நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தை கேட்டு, விசுவாசிகளானபோது (after ye belived - நீங்கள் விசுவாசிகளாக பிறகு என ஆங்கிலத்தில் உள்ளது.) இங்கு After he heard the word of truth எனவும் உள்ளது. அதாவது சத்தியவசனத்தை **கேட்டப் பிறகு,** விசுவாசிகளான **பிறகு** என்றே ஆங்கிலத்தில் உள்ளது. தமிழில் சத்திய வசனத்தை கேட்ட போது, விசுவாசிகளானபோது என உள்ளது. இது தவறு. இப்பொழுது இந்த முத்திரை எது வரை? அது நீங்கள் மீட்கப்படும் நாள் வரைக்கும், அத்துனைக்காலம் வரைக்கும் நீங்கள் பரிசுத்த ஆவியினால் முத்தரிக்கப்படுகிறீர்கள். அதாவது நித்தியத்திலிந்து நித்தியம் வரைக்கும் நீங்கள் பரிசுத்த ஆவியினால் முத்திரைப்போடப்பட்டிருக்கிறீர்கள். அது தேவனுடைய முத்திரை. அது பரிசுத்த ஆவியின் முத்திரை. தேவனுடைய பார்வையில் நீங்கள் கிருபை பெற்றுள்ளீர்கள். தேவன் உங்களை அதிகமாக நேசிக்கிறார். தேவன் உங்களை அதிகமாக நம்புகிறார். நீங்கள் அவர் நம்பிக்கைக்கு பாத்திரவான்களாகயிருக்கிறீர்கள். ஆதலால் அவர் உங்கள் மீது தமது ஆவியை முத்திரையாக போட்டிருக்கிறார். முத்திரையென்றால் அது முடிவுபெற்ற ஒரு பணியை குறிக்கும். தேவன் உங்களை இரட்சித்து, உங்களை பரிசுத்தப்படுத்தி, உங்களை சுத்திகரித்து, உங்கள்மேல் தயவு பாராட்டி உங்களை முத்தரித்துவிட்டார். மீட்கப்படும் நாள்வரைக்கும் நீங்கள் அவருடையவராகி விடுகிறீர்கள். முத்திரை முடிவுப்பெற்ற செயலைக் குறிக்கிறது. முத்திரை என்பது உங்களுக்கு கொடுக்கப்பெற்ற உறுதி, பாதுகாப்பு. காற்று பலமாக அடிக்கட்டும். உங்கள் வாழ்க்கையில் சாத்தான் உங்களை புடைக்கட்டும், உங்களை என்னவேண்டுமென்றாலும் செய்யட்டும். தேவன் நீங்கள் மீட்கப்படும் நாள்வரைக்கும் உங்களை முத்தரித்துவிட்டார். ஆதலால் எந்த தீங்கும் உங்களை அணுகாது, தீண்டாது. ஏனென்றால் பரிசுத்த ஆவி உங்கள் முத்திரையாகயிருக்கிறார்.

**41. பரிசுத்த ஆவி நமக்கு சகாயர்.** என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் எல்லாவற்றையும் உங்களுக்கு போதிப்பார். நான் சொன்ன எல்லாவற்றையும் மத்.28:19 யை அப்.2:38 வுடன்

உங்களுக்கு இணைத்து ஒப்பிட்டு நினைப்பூட்டுவார். அதாவது நான் மத்.28:19 ல் சொன்னதின் பொருள் அப்.2:38 தான் நிறைவேறுகிறது என நினைப்பூட்டுவார். நான் உங்களுக்கு உண்மையை சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்கு பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். குமாரத்துவத்தின் பணியை முடித்து, பரலோகத்திற்கு சென்ற பிறகு தான், அடுத்த பணியை செய்ய தேற்றரவாளனாக பரிசுத்த ஆவி வருவார். குமாரத்துவத்தின் பணி வேறு, தேற்றரவாளனுடைய பணி வேறு. இரண்டையும் ஒரே நேரத்தில் அவர் செய்யக்கூடாது. ஒன்றன்பின் மற்றது. இப்பொழுது சத்திய ஆவியாகிய அந்த தேற்றரவாளன் என்றென்றென்றைக்கும் நம்மோடு பரிசுத்த ஆவியாகயிருக்கிறார். ஆதலால் நமது சரீரம் தேவன் வாசம் செய்யும் ஆலயமாயிருக்கிறது. (யோ.14:16,17,16:7) இப்பொழுது சகாயராக பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். (1யோ.2:1) சகாயர் என்றால், ஒருவனுக்காக நின்று பரிந்து பேசும் அட்வோகேட் ஆகும். அந்தப்படியே ஆவியானவரும் (பரிசுத்த ஆவி) நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமல் இருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெரும் மூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறார். நீதிமன்றங்களில் பரிகாரம் தேடும் ஒருவர் தன்னுடைய சரியான நிலையை, எடுத்துச் சொல்ல முடியாத நிலையில், அவருக்காக அவருடைய அட்வோகேட் வாதாடுகிறார். அதுபோன்றுதான் பரிசுத்த ஆவியானவர் ஒரு நீதிமானுக்காக போராடுகிறார். தியானியுங்கள் (ரோ.8:26-34).

**42. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்றால் என்ன?** அப்.2:38 ன் படி நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறும்போது, (பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் அல்ல, ஏனென்றால் அப்படியொரு நாமம் இல்லை. மாறாக பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திற்குரிய ஒருவர் இருக்கிறார். அவர் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறும்போது) பரிசுத்த ஆவி நம்மை கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணுகிறார். அதுவே பரிசுத்த ஆவியின் அபிஷேகம். இதுதான் மறுபிறப்பு. நாம் வசனத்தை கேட்டு, மனந்திரும்பி, தேவனை பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கையை தண்ணீரினால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று நிறைவேற்றிய பிறகு அதாவது அப்.2:38 ன்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்ற பிறகு பரிசுத்த ஆவி நம்மை நிரப்பி மறுப்பிறப்பின் அபிஷேகத்தை கொடுக்கிறார். அன்று அவிசுவாசிகள் 3000 பேர் மாண்டார்கள். (யாத்.32:28, நியாயா.16:27) இங்கு விசுவாசிகள் 3000 பேர் இரட்சிக்கப்பட்டார்கள். (அப்.2:41) நீ அன்று மாண்ட அவிசுவாசிகளில் ஒருவனா அல்லது இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தை பெற்ற ஒருவனா சிந்தித்து பார். இந்த விசுவாசிகளை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வருகிறார். அந்த விசுவாசிகளை சாத்தான் தனது திரித்துவ ஸ்தாபனங்களில் சேர்த்துக்கொண்டு வருகிறான். அந்த 3000 பேருக்கும், இந்த 3000 பேருக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். நீ எந்தக் கூட்டத்தில்?

**43. பரிசுத்த ஆவி ஞானஸ்நானம் குறித்து முன் அறிவிப்பு.**

அ. யோவான் ஸ்நானன் : எனக்குப்பின் வருகிறவர் என்னிலும் வல்லவராயிருக்கிறார். அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். (மத்.3:11)

ஆ. யோவான் ஸ்நானன் : நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன் ; அவரோ (இயேசு) உங்களுக்கு பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று பிரசங்கித்தான். (மாற்.1:8)

இ. யோவான் ஸ்நானன் எல்லாருக்கும் பிரதியுத்தரமாக : நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார்...... அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். (லூக். 3 16)

ஈ. யோவான் ஸ்நானன் : ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர், ஆவியானவர் இறங்கி யார் மேல் தங்குவதை நீ காண்பாயோ அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர் என்று எனக்கு சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்து வருகிறேன் என்றான். (யோ.1:33)

உ. இயேசு தாம் தெரிந்துக்கொண்ட அப்போஸ்தலர்களை நோக்கி : யோவான் ஸ்நானன் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான். நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் எருசலேமை விட்டு போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குதத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். (அப்.1:4,5)

**44. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் நிகழ்ந்த இடங்கள்.**

(அ) அப்.2:1-4 பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, சீஷர்களில் சுமார் 120 பேர் ஒருமனப்பட்டு ஒரிடத்திலே வந்திருக்கையில் பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கம் உண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அக்கினி மயமான நாவுகள் போல நாவுகள் அநேகருக்கு காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்.

(ஆ) அப்.8:14-17 சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்தபோது அவர்களில் ஒருவனும்

பரிசுத்த ஆவியை பேராமல், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாக கண்டு, அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளும்படி, அவர்களுக்காக ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றார்கள்.
(இ) இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுற்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டிணத்திலே இருந்தான். அவன் வீட்டில் பேதுரு பிரசங்கிக்கும் போது : அவரை (இயேசு) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) பாவமன்னிப்பை பெறுவான் என்று (அப்.2:38) தீர்க்கதரிசிகள் எல்லாரும் அவரைக்குறித்து சாட்சி கொடுக்கிறார்கள் என்றான். இந்த வார்த்தையை பேதுரு பேசிக் கொண்டிருக்கையில் வசனத்தை கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அப்பொழுது பேதுரு நம்மை போல பரிசுத்த ஆவியை பெற்ற அவர்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ) அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான். (அப்.10:43-48)
(ஈ) பவுல், எபேசுக்கு வந்தான். அங்கே சில சீஷர்களை கண்டு நீங்கள் விசுவாசிகளான பிறகு (விசுவாசிகளானபோது அல்ல – Since ye believed) பரிசுத்த ஆவியை பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள் : பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விபடவேயில்லை என்றார்கள். அப்பொழுது பவுல் : அப்படியானால் நீங்கள் எப்படி (இங்கு தமிழில் எந்த ஞானஸ்நானம் என உள்ளது. அது தவறு) ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். (Unto what, then, were ye baptizised) அதற்கு அவர்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள். அப்பொழுது பவுல் : யோவான் தனக்குப்பின் வருபவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்று ஜனங்களுக்கு சொல்லி மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்தானத்தை கொடுத்தானே என்றான். அதை கேட்ட போது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்த போது பரிசுத்தஆவி அவர்கள் மேல் வந்தார். அந்த மனுஷர்கள் எல்லாரும் ஏறக்குறைய 12 பேராக இருந்தார்கள். (அப்.19:1-7)

45. விசுவாசம், ஞானஸ்நானம் மூலமாய் ஒருவன் பரிசுத்த ஆவியை பெறுகிறான். (கலா.3:2, 1கொரி.12:13) பிரதி ஞாயிறு ஆராதனை முடிந்தவுடன் ஒரு சிறு கூட்டத்தார் வலது பக்கமும் இடது பக்கமும் முழங்காலில் நின்றுக் கொண்டு கை தட்டி அல்லேலூயா, ஸ்தோத்திரம் என கத்தி உருண்டு புரண்டு சில வேளைகளில் ஆண்கள் பக்கம் பெண்களும், பெண்கள் பக்கம் ஆண்களும் உருண்டு புரள்வது உண்டு. அதோடு மட்டுமல்லாமல் அக்கர புக்கர என கத்தி பரிசுத்த ஆவியை காத்திருந்து பெற்றுக் கொண்டோம் என்பது அல்ல. ஒருவர் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, பின் பரிசுத்த ஆவியை பெறுகிறான். அதாவது கிறிஸ்துவை தரித்துக் கொள்கிறான். (கலா.3:27) பரிசுத்த ஆவியை பெறுவதால் விசுவாசி கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவமாகிறான். (1கொரி.12:13) இப்பொழுது அந்த விசுவாசி கிறிஸ்துவோடே ஒரே ஆவியாயிருக்கிறான். கர்த்தரோடிருக்கிறவன் அவரோடே ஒரே ஆவியாயிருக்கிறான். (1கொரி.6:17) இப்பொழுது பாருங்கள் இந்த கிறிஸ்துவின் சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிறது. (1கொரி.3:16, 6:19) இவ்வாறாக ஒரு விசுவாசி கிறிஸ்துவின் ஆலயமாயிருக்கிறான். ஆதியாகமம் முதல் கொண்டு வெளிப்படுத்தின விசேஷம் முழுவதும் ஆவியானவரைப் பற்றியே உள்ளது. நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் சபைக்காலம் ஆவியானவரின் யுகம் ஆகும். அதாவது பரிசுத்த ஆவியின் யுகம். இந்த யுகத்தில் நமது வாழ்க்கையை பரிசுத்தப்படுத்த பரிசுத்த ஆவியானவருடைய பிரதான ஊழியம், மணவாட்டியை தமது மணவாளனை சந்திக்க ஆயத்தப்படுத்துவதே. அதற்காக நம்மை திருவசனத்தைக்கொண்டு தண்ணீரின் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குவதற்கும் கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும, மகிமையுள்ள சபையாக அதை தமக்கு முன் நிறுத்திக் கொள்வதே அவருடைய பிரதான ஊழியம். (எபே.5:26,27, ரோ.15:15, 2தெச.2:13) சபைக்காலங்களில் தொடக்கத்திலிருந்து அப்போஸ்தலர்கள் காலம் வரை யார் யார் பரிசுத்த ஆவி அபிஷேகத்தைப் பெற்றார்கள்? யோவான் ஸ்நானன் : நான் மனந்திரும்புதலுக்கென்று ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். எனக்குபின் வருகிறவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். (மத்.3:11, மாற்.1:8, லூக்.3:16, யோ1:33, அப்.1:4) பொதுவாக மனந்திருந்தி பாவமன்னிப்புகென்று ஞானஸ்நானம் பெற்றவர்கள் அப்.2:38,41 ன் படி சுமார் 3000 பேர்கள். இவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் (அப்.4:12, 10:48, 20:18) அடுத்து சமாரியா தேசத்தார் (அப்.8:15-17). அதன்பின் செசரியா பட்டிணத்திலே கொர்நேலியு வீட்டார் (அப்.40:44-48) அடுத்து எபேசுவில் உள்ள யோவான் ஸ்நானனின் சீஷர்கள் (அப்.19:1-7) முடிவாக ஏறக்குறைய 120 சீஷர்கள் (அப்.2:1-4) அதன்பின் எத்தியோப்பிய மந்திரி (அப்.8:36,49)

46. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் / ஞானஸ்நானம் மாத்திரமே உங்களை கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அவயவமாக சேர்க்கும். நீ சத்தியத்தை அறிந்தபிறகு பிதா குமாரன் பரிசுத்த ஆவி நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றால், அது உன்னை திரித்துவ ஸ்தாபன சபைகளில் தான் அவயவமாக சேர்க்கும். அங்கத்தினராக சேர்க்கும். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் / ஞானஸ்நானம், மறுபிறப்பு என்பது உன்னிடத்தில் உள்ள பழையவைகள் எல்லாம் ஒழிந்தன அனைத்தும் புதிதாகின என்பதாகும். நீ ஒரு புதிய சிருஷ்டிப்பு, நீ கிறிஸ்துவின் சாயலை அடைகிறாய். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் நீ மனந்திரும்பி உன் பாவமன்னிப்புக்கென்று, நல்மனசாட்சியின் உடன்படிக்கையாக தண்ணீர் ஞானஸ்நானம் பெற்ற பிறகு பெறுகிறாய். விசுவாசிக்கும் போது அல்ல. கவனியுங்கள். தேவ ஆவியினால்

அருளப்பட்டிருக்கிற வேதவாக்கியங்களில், அதாவது நமது கரத்தில் உள்ள பரிசுத்த வேதாகமத்தில் எங்காவது ஒரு இடத்தில்கூட யாராவது பிதா குமாரன் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றதாக சாட்சிகளுடன் ஆதாரம் பொருத்த முடியாது. ஒருவன் பிதா குமாரன் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்று நாங்கள் பரிசுத்த ஆவியை பெற்றுள்ளோம் என்று கூறுவானானால் அவன் பொய்யனும் பொய்க்கு பிதாவுமாயிருக்கிறபடியினால், தன் சொந்தத்திலிருந்து எடுத்து பொய் பேசுகிறான். பொய் பேசும்படி சாத்தான் அவர்கள் இருதயத்தை நிரப்பினான். மேலும் கவனியுங்கள் மழை களையின் மீது விழுந்து அது வளர்வது போன்று ஒருவன் மீதும் பரிசுத்த ஆவி விழுந்து (பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அல்ல) அவனிடத்தில் தேவனுடைய கிரியைகளை நடப்பிக்கலாம். (மாற்.9:38-40)

47. பரிசுத்த ஆவியை பெறாமலே, பரிசுத்த ஆவியை பெற்றுவிட்டேன், அந்நிய பாஷைகளை பேசுகிறேன் என கூறி மாய்மாலம் பண்ணுகிற ஸ்தாபன சபையாருக்கு மன்னிப்பு இல்லை. வெள்ளை ஆடை அணிதல், பாஸ்டர், தலைமை பாஸ்டர், இண்டர்நேஷனல் பிரசங்கி, போன்ற பட்டங்களை பெற்றிருப்பதினால், அக்கர, புக்கர என்று கத்துவதினாலும், பரிசுத்த ஆவியை பெற்று விட்டேன் என்று கூற முடியாது. மேலும் ஊழியத்தின் பாதையில் அற்புத அடையாளங்கள் நிகழ்கின்றன எனக்கூறி அதையும் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொண்டேன் என்பதற்கு அடையாளமாக கூற முடியாது. மாம்ச கிரியைகளை கொண்டு அதன்படி நடந்து, ஆவிக்குரிய கனிகள் எதுவும் காணப்படாது பரிசுத்த ஆவியை பெற்று விட்டேன் எனவும் கூற முடியாது. ஏதோ ஒரு பெந்தெகொஸ்தே சபையில் அங்கத்தினராயிருப்பதால் பரிசுத்த ஆவியை பெற்று விட்டேன் என கூறி மாய்மாலம் பண்ணுகிறவர்கள் பரிசுத்த ஆவியை தூஷிக்கிறார்கள். இவர்களுக்கு மன்னிப்பு என்பதே கிடையாது. இவர்கள் தங்கள் பாவத்திலே வாழ்ந்துக் கொண்டு பாவத்திலே சாகிறவர்களாகயிருக்கிறார்கள். தியானியுங்கள். மத்.12:31,32. வெண்ணிற ஆடைகளே, அப்.2:38 யை புறக்கணிக்கிற உங்களுக்குள் பரிசுத்த ஆவி எங்கிருந்து வந்தது? தேவன் ஒருவர் என்பதை புறக்கணித்து தேவன் மூவரில் வாசம் பண்ணுகிறார் என பரிசுத்த ஆவியினுடைய தேவத்துவத்தை மறுதலிக்கும் உங்களுக்குள், தேவனுடைய வார்த்தைக்கு மேலாக அதனாசியஸ் உபதேசத்தை, விசுவாச பிரமாணத்தை விசுவாசிக்கும் உங்களுக்குள் பரிசுத்த ஆவி எப்படி, எங்கிருந்து வந்தது? வேதஎழுத்துக்களில் உங்களுக்கு சாதகமானதை எடுத்துக் கொண்டு நீங்கள் ஏற்றுக்கொள்ள கூடாததை புறக்கணிக்கும் உங்களுக்குள் பரிசுத்த ஆவி எங்கிருந்து வந்தது? பதில் சொல்லுங்கள். தேவன் / பரிசுத்த ஆவி நம்மில் வாசமாயிருக்கிறார். உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது. (1கொரி.6:19) தேவனுடைய ஆவி (பரிசுத்த ஆவி) உங்களில் இருந்தால் நீங்கள் மாம்சத்திற்குட்பட்டவர்களாயிராமல், ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். ரோ.8:9 மாம்சத்திற்குட்பட்டவர்களிடம் விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூன்யம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் – இது இன்றைய கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் வீடியோ, ஆடல் பாடல், இன்னிசை நாடகம், கிறிஸ்தவ மூவீஸ் போன்றவைகளாகும். பிரபல ஊழியர்களுடைய கிறிஸ்தவ மூவிகளில் பெரும்பாலனவைகள் யாவும் களியாட்டுகள் தான் (கலா.5:9-21) ஆவிக்குட்பட்டவர்களிடம் அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சை அடக்கம் காணப்படும். (கலா.5:22-25) இதிலிருந்து மாம்சத்திற்குரியவன், பேர் கிறிஸ்தவன், ஆவிக்குரிய கிறிஸ்தவன் யார் என்பதை தெரிந்துக்கொள்ளலாம்.

48. கிறிஸ்துவின் ஆவி (பரிசுத்த ஆவி) இல்லாதவன் அவருடையவன் அல்ல. மாறாக ஸ்தாபன சபைக்குரியவன், ஒரு பேர் கிறிஸ்தவன். கவனியுங்கள் கிறிஸ்து (பரிசுத்த ஆவி) உங்களில் இருந்தால் உங்கள் சரீரமானது பாவத்தின் நிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியின் நிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். (ரோ.8:9,10) பரிசுத்த ஆவியானவர் பூமியின் ரூபத்தை புதிதாக்கினார். (சங்.104:30) ஏனென்றால் பூமியானது ஒழுங்கின்மையும், வெறுமையுமாயிருந்தது. (ஆதி.1:2) உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்கள். கர்த்தரோடிசைந்திருக்கிறவன் அவருடன் ஒரே ஆவியாயிருக்கிறான். (1கொரி.6:15-17) அவர் உங்களுடனே வாசம் பண்ணி, உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள். (யோ.14:17) பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் என்னென்றைக்கும் நம்மோடு இருக்கும்படிக்கு தேவன் சத்திய ஆவியாகிய அவரை நமக்கு தந்தருளியுள்ளார். (யோ.14:16) நாம் தேவனுடைய புத்திரராயிருக்கிறபடியினால் அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை (பரிசுத்த ஆவியை) நம்முடைய இருதயங்களில் அனுப்பியுள்ளார். (கலா.4:6, ரோ.8:15,16) பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் நமக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறார். (மத்.3:11, அப்.1:4) பரிசுத்த ஆவி நம்மை பூமியின் கடைசி பரியந்தம் சாட்சியாக வைத்துள்ளார். (அப்.1:8, அப்.11:15-18) பரிசுத்த ஆவி இயேசு கிறிஸ்துவை குறித்து சாட்சி கொடுக்கவே வந்துள்ளார். (அப்.15:26, யோ.16:28) தேவன் நம்மை முத்தரித்து நம்முடைய இருதயங்களில் ஆவி என்னும் அச்சாரத்தை (பரிசுத்த ஆவி) கொடுத்திருக்கிறார். (2கொரி.1: 22) பரிசுத்த ஆவியின் அபிஷேகம் சகலத்தையும் குறித்து நமக்கு போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது. அது உங்களுக்கு போதிக்கிறபடியே அவரில் நிலைத்திருங்கள். (1யோ. 2:27,20) ஸ்தாபன சபைகளை நம்பி மோசம் போகாதீர்கள். உங்கள் பிஷப்களை நம்பி, உங்கள் இண்டர் நேஷனல் பிரசங்கிகளை நம்பி, ஸ்தாபன சபை தலைவர்களை நம்மி மோசம் போகாதீர்கள். அவர்கள் அனைவரும் மோசடிக்காரர்கள். பணமே அவர்களது நோக்கம். பணத்திற்காக தகாதவைகளை போதித்து உங்களை மோசம் போக்குகிறார்கள். அவர்களுடையை இருதயமானது பொருளாசையை பின்பற்றி போகிறது. உங்கள் ஊழியக்காரர்களை நோக்குங்கள், உங்கள் வாழ்க்கையை அவர்களது வாழ்க்கையுடன்

ஒப்பிட்டு பாருங்கள். அவர்கள் வாழ்கிறார்கள். நீங்கள் தாழ்வடைகிறீர்கள். அவர்கள் உங்களை கொள்ளையிடும் பகல் கொள்ளைகாரர்களாயிருக்கிறார்கள். அன்று பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே ஜனங்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள். (1பேது.1:12) இன்று யார் பரிசுத்த ஆவியினால் சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறார்கள்? நீங்கள் நான் பரிசுத்த ஆவிவையைக் கொண்டு பிரசங்கிக்கிறேன் என்று கூறுவீர்களானால், அன்பு சகோதரனே நான் உங்களை அழைக்கிறேன். என்னிடம் வந்து பேசுங்கள், தர்க்கத்துக்காக அல்ல, மாறாக நம்மை நாமே சோதித்து அறிய. இந்நாட்களில் கிறிஸ்துவைக் கொண்டு நடைபெறும் ஊழியங்கள் யாவும், மாயையும் மனதிற்கு சஞ்சலுமாயிருக்கிறது. ஏனென்றால் இது ஒரு கொடிதான வஞ்சிப்பின் காலம்.

49. விசேஷித்த பணிகளுக்காக, நோக்கங்களுக்காக மனிதர்களை பரிசுத்த ஆவியானவர் தகுதிபடுத்துகிறார். அவர்களை பூமியில் பிறக்கச்செய்கிறார். அதாவது அவர்களை பூமியில் பிரவேசிக்க செய்கிறார். தேவனுடைய பணிக்காக ஒருவன் தன்னைத்தானே தகுதிப்படுத்திக் கொள்ள தேவையில்லை, கூடாது, முடியாது. மோசேயின் மேல் இருந்த ஆவியை தேவன் 70 பேர் மேல் வைத்தார். அந்த ஆவி அவர்கள் மேல் வந்து தக்கின மாத்திரத்தில், அவர்கள் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். (எண்.11:25) கர்த்தருடைய ஆவி (பரிசுத்த ஆவி) தாவீதின் மேல் வந்து இறங்கினார். (1சாமு.16:12,13) கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை இரட்சிக்க ஒத்னியேல் என்னும் ஒரு இரட்சகனை எழும்ப பண்ணினார். கர்த்தருடைய ஆவி (பரிசுத்த ஆவி) அவன் மேல் வந்ததினால் அவன் இஸ்ரவேல் ஜனங்களை விசாரித்தான். (நியாயா.3:10) அவ்வாறாகவே கிதியோன் மேல் கர்த்தருடைய ஆவி ( பரிசுத்த ஆவி) (நியாயா.6:34). எபே.4:11-13 ன் வரங்கள் – ஊழியங்கள் ஒரு நோக்கத்திற்காக. 12 அப்போஸ்தலர்களுடைய அழைப்பும் அப்படியே.

50. தேவனுடைய ராஜியத்தில் பிரவேசிக்க, ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்க வேண்டும். மறுபடியும் பிறக்க வேண்டும். யோ.3:5,7, தீத்.3:5) கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் ஒருவனை பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்திலிருந்து விடுதலையாக்குகிறது. (ரோ.8:2) அப்படியானால் தேவனுடைய புத்திரர் யார்? தேவனுடைய ஆவியினாலே (பரிசுத்த ஆவி) வழிநடத்தப்படுகிறவர்கள். (ரோ.8:14) பரிசுத்த ஆவியானவர் வரும்போது, சகலசத்தியத்திற்குள்ளும் உங்களை வழிநடத்துவார். (ரோ.16:14) ஆவியினால் வழிநடத்தப்படுகிறவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்பட்டவர்கள் அல்ல. (கலா.5:18) பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் கர்த்தருக்கு சாட்சிகள். (அப்.1:8) அப்போஸ்தலர்களுடைய சுவிசேஷம் வசனத்தோடு மாத்திரம் அல்ல. வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத் தோடும் வந்தது. (1தெச.1:5)

**51. பரிசுத்த ஆவி, ஆவியின் நற்கனிகளை நமக்கு கொடுக்கிறது.** (கலா.5:22,23) பரிசுத்த ஆவி உங்களில் வாசமாயிருந்தால், சாவுகேதுவான உங்கள் சரீரம் உயிர்ப்பிக்கப்படும். (ரோ.8:11) பரிசுத்த ஆவியினால் ஒருவன் உள்ளான மனுஷனின் வல்லமையாய் பலப்படுகிறான். (எபே.3:16) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் நாம் அவரை அறிந்துக்கொள்வதற்கான ஞானத்தையும், தெளிவையும் பரிசுத்த ஆவியினால் நமக்கு தருகிறார். (எபே.1:17) கிறிஸ்துவர்கள் மத்தியில் விசுவாசத்துக்கடுத்த காரியங்களில், தேவத்துவத்துக்கடுத்த காரியங்கள், ஞானஸ்நானத்துக்கடுத்த காரியங்களில், இன்னும் அநேக உபதேசங்களில், போதனைகளில் எங்கு பார்த்தாலும் குழப்பங்களும், கூச்சல்களும். ஏன்? அவர்கள் பரிசுத்த ஆவியை பெறவில்லை என்பதே. அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றிருந்தால் தெளிவான ஞானத்தையும், அறிவையும் பெற்றிருப்பார்கள். பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து, இயேசு சொன்ன எல்லாவற்றையும் நினைப்பூட்டுகிறார். (யோ.16:26) அதாவது பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் இயேசு கிறிஸ்துவின் போதனைகளையும், அறிவுரைகளையும் நமக்கு நினைப்பூட்டுகிறார். ஆதலால் பரிசுத்த ஆவியை பெற்றவன் எதிலும் குழம்ப தேவையில்லை. இயேசு : தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு பரிசுத்த ஆவியை கொடுக்கிறார். (யோ.7:39) பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு பரிசுத்த ஆவியை கொடுக்கிறார். (லூக்.11:13) பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பபோகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் என்னை குறித்து (இயேசுவை) சாட்சி கொடுப்பார். (யோ.15:26) ஊழியத்தின் பாதையில் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட பாத்திரங்களை வழிநடத்துகிறார். (அப்.13:2, 16:6,7) முடிவாக பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக் கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணுங்கள். (யூதா:20) நாம் ஆவியோடும், கருத்தோடும் பாட வேண்டும், ஆவியோடும், கருத்தோடும் விண்ணப்பம் செய்ய வேண்டும். (1கொரி.14:15) நம் மத்தியில் காணப்படும் ஆடல் பாடல்களும் விண்ணப்பங்களும் பொதுவாக கூறப்போனால் பக்தி பரவசங்கள் யாவும் பேய்தனத்திற்கடுத்தாக இருக்கிறது.

**52. பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டவர்களின் நிலை எவ்வாறு இருக்கிறது?** பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளுதல், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல், உன்னத பலத்தால் தரிபிக்கப்படுதல் என்று பலவாறு இதன் அனுபவத்தை கூறலாம்.

(1) பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் வசனத்திற்கு சாட்சிகளாயிருந்தார்கள். வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், தங்கள் சுய மற்றும் புறஜாதிகளுடைய தீமையான சோதனைகளால் நேரிட்ட, சோதனைகளின் மத்தியில் கர்த்தரையே சார்ந்திருந்து அவரையே சேவித்தார்கள். (2) ஊழியக்காரர்கள் விசுவாசிகளுக்கு பிரயோஜனமான ஒன்றையும் மறைத்து வைக்காமல் வெளியரங்கமாக பிரசங்கித்து, கடிந்து கண்டனம் பண்ணி உபதேசம் பண்ணினார்கள். காணிக்கைகளுக்காகவும், நன்கொடைகளுக்காகவும், மாய்மாலம் பண்ணவில்லை. (3)

தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக்குறித்தும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதை குறித்தும், பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்தானத்திற்கடுத்த காரியங்களை குறித்தும், தைரியமாக சாட்சியாக அறிவித்தார்கள்.(4) கட்டுகளும் உபத்திரவங்களும் தங்களுக்கு வைத்திருக்கிறது என பரிசுத்த ஆவியானவர் தெரிவிக்கிறதை அறிந்திருந்தும், அதைகுறித்து அவர்கள் கவலைப்படவில்லை. தங்கள் பிராணனை அருமையாக எண்ணவில்லை. (5) தங்கள் ஓட்டத்தை சந்தோஷத்தோடே ஓடி முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தை பிரசங்கம் பண்ணும்படிக்கு கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவும் விரும்பினார்கள். மக்கள் மத்தியில் பல திட்டங்களை முன் வைத்து பொருளாசை உள்ளவர்களாய் மாய்மாலம் பண்ணவில்லை. இதில் மிக்க பிரபலமானது **இயேசு அழைக்கிறார்** ஊழியம். (6) தேவனுடைய ஆலோசனைகள் ஒன்றையும் அதாவது தேவனுடைய வார்த்தையிலுள்ள எந்தவொரு உபதேசங்கள், போதனைகளையும் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் தேவனுடைய வார்த்தையில் உள்ளபடியே போதித்தார்கள். இன்று நம் மத்தியில் கிறிஸ்துவின் பெயரில் ஆயிரக்கணக்கான சபைகள், ஆயிரக்கணக்கான போதனைகள், இவைகள் யாவும் என்ன? இவைகள் யாவும் லௌகிக சம்பந்தமானதும், பரத்திலிருந்து வருகிற ஞானமாயிராமல், பேய்தனத்துக் கடுத்தாயிருக்கிறது. பொதுவாக ஸ்தாபன சபைகளில் பிசாசினால் தான் வழிநடத்தப்படுகிறது. அங்கு தேவனுடைய ஆவிக்கு, பரிசுத்த ஆவியின் வழிநடத்தலுக்கு இடமேயில்லை. ஏனென்றால் அங்கு பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் கிடையாது. பரிசுத்த ஆவியை பெற்றிருந்தால் அவர்கள் திரித்துவத்தை / அதனாசியஸ் உபசேத்தை விசுவாசிக்க மாட்டார்களே, போதிக்க மாட்டார்களே. (7) பரிசுத்த ஆவியே தேவன் தம்முடைய சுயரத்தத்தினால் சம்பாதித்துக்கொண்ட தமது சபையை போஷிப்பதற்கு / வழி நடத்துவதற்கு கண்காணிகளை நியமிக்க வேண்டும். எந்த ஸ்தாபனமும், மனுஷனும் தேவனுடைய மந்தையை வழிநடத்துவதற்கு கண்காணிகளை நியமிக்க முடியாது. தங்களுடைய மந்தையை வழிநடத்த அவர்களே தங்களுக்காக கண்காணிகளை நியமிக்கலாம். இதைத்தான் ஸ்தாபன மற்றும் தனியார் சபைகள் செய்கின்றன. ஆனால் தேவனுடைய மந்தையை வழிநடத்த நியமிக்க முடியாது. (8) பலர் அதாவது கள்ளகபடமுள்ள வேலையாட்கள் சீஷர்களை (விசுவாசிகளை) தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும் படிக்கு மாறுபாடானவைகளை போதிக்கிறார்கள் என்பதை அறிந்து, இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் சத்துருவை எதிர்த்து போராடி மந்தையை ஓநாய்களிடமிருந்து மீட்டுக்கொள்கிறவர்களாயிருக்கிறார்கள். (9) விசுவாசிகளை தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்திற்கும் ஒப்புக்கொடுக்கிறார்கள். மாறாக தங்களுடை சுய ஞானத்தை கொண்டு அவர்களை வழிநடத்துவதில்லை. அதாவது பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலுக்கு தங்களையும், விசுவாசிகளையும் ஒப்புக்கொடுக்கிறார்கள். (10) ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும், வஸ்திரத்தையாகிலும் இவர்கள் இச்சித்து மாய்மாலம் பண்ணுவதில்லை. இன்று கிறிஸ்துவின் பெயரில் ஊழியங்கள் யாவும் பொன்னுக்காகவும், பொருளுக்காகவுமே இருக்கிறது. ஆனால் பரிசுத்த ஆவியினால் ஊழியம் செய்கிறவர்கள் தங்களுக்காகவும், தங்களுடனே கூட இருக்கிறவர்களுக்காகவும் வேண்டியவைகளுக்காக தங்கள் கைகளினாலே வேலை செய்து பிரயாசப்படுகிறார்கள். பிறனுடையதை அதாவது காணிக்கை தசமபாகங்களுக்காக, நன்கொடைகளுக்காக மாய்மாலம் செய்து ஊழியம் செய்வது அல்ல. கிறிஸ்துவின் பெயரில் இன்று 99% இந்த மாய்மால ஊழியம்தான். (11) ஊழியத்தின் பாதையில் வாங்குகிறதை பார்க்கிலும், கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்னதை நினைவுகூர்ந்து பிறருக்கு மாதிரியாக, சாட்சியாக ஊழியம் செய்கிறார்கள். ஊரை சுற்றித்திரிந்து, உடம்பை வளர்ப்பது ஊழியம் அல்ல. (12) இவர்களுடைய ஆகாரம், பழக்கவழக்கங்கள், சிந்தனைகள், செயல்கள், எண்ணங்கள், நினைவுகள் யாவும் பிறருக்கு விகர்ப்பமாகவே இருக்கும். ஊரோடு ஒத்துப்போகிறவர்கள் அல்ல, உலகப்பிரகாரமாக நடப்பவர்கள் அல்ல. தியானியுங்கள் (2கொரி.6அதி). நான் அறிய சர்ச் ஆப் கிரைஸ்ட் பாஸ்டர் ஒருவர் சமீபத்தில் நடந்த தேர்தலில் நின்றார். எச்சரித்தேன். கேட்கவில்லை. முடிவில் மண்ணைக்கவ்வினார். (13) இவர்கள் பரிசுத்த ஆவியினால் சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள். (1பேது.1:12) ஆத்தும ஆதாயம் செய்வதே இவர்களுடைய நோக்கமாயிருக்கிறது. தேவனுடைய ராஜியத்துக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்திற்கும் ஏற்றவைகளை குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை சமாரியர் விசுவாசித்த போது புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப்.8:12,13) பர்னபா நல்லவனும் பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனாயிருந்தான். அநேக ஜனங்கள் கர்த்தரிடத்தில் சேர்க்கப்பட்டார்கள். (அப்.11:24) பவுல், பர்னபா இக்கோனியா பட்டணத்தில் உள்ள ஜெப ஆலயத்தில் பிரவேசித்து திரளான ஜனங்கள் விசுவாசிக்கத்தக்கதாக பிரசங்கித்தார்கள். அநேக நாள் அங்கே சஞ்சரித்து கர்த்தரை முன்னிட்டு தைரியமுள்ளவர்களாய் போதகம் பண்ணினார்கள். (அப்.14:1-3) சுவிசேஷத்தை பிரசங்கிப்பது மாத்திரமே தங்கள் மேல் விழுந்த கடமை என கருதினார்கள். ஆனால் இன்றோ சபைக்கு கட்டிடங்கள் கட்டுவதையும், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் போன்ற பொதுநலக்காரியங்களிலே பொருள் சம்பாதிக்க ஈடுபடுகிறார்கள். இவர்களிடம் பணமே எல்லா தீமைக்கும் வேராக இருக்கிறது. கொள்ளை பொருட்களினால் தங்களுடைய வீடுகளை நிரப்புகிறார்கள். ஆனால் அப்போஸ்தலர்கலோ சுவிசேஷத்தை ஒருவன் வேதவாக்கியங்களின்படி பிரசங்கியாதிருந்தால் அவனுக்கு ஐயோ என்று கூறுகிறார்கள். சுவிசேஷத்தை பிரசங்கிப்பதினால் ஒருவன் தன்னை மேன்மை பாராட்ட அதினால் அவனுக்கு இடமில்லை. (1கொரி.9:16,17) (14) ஊழியத்தில் ஆவியானவருடைய வழிநடத்துதல் ஆதி அப்போஸ்தல்கள் காலத்தில் இருந்தது. ஆனால் இக்காலத்தில் ஊழியத்தில் ஸ்தாபன சபைகளின் வழிநடத்துதல், செல்வாக்குடைய ஒரு தனிப்பட்ட மனிதனின் சுய வழிநடத்துதல், வசதி படைத்தவர்களுடைய கைக்கூலிகளாக இருந்து ஊழியம் நடந்து வருகிறது. கடைசி கால ஊழியம் என்று சொல்பவர்கள் மத்தியிலும் பெரும்பாலானோர் வெளிநாட்டு ஊழியர்களையே நம்பி ஊழியம் செய்யும் அவல நிலை உள்ளது. ஆனால் ஆதியில் அப்படியல்ல. ஊழியத்தின் பாதையில் ஆவியானவருடைய வழிநடத்துதலை தேடினார்கள், கண்டடைந்தார்கள்.

இக்காலக்கட்டத்தில் ஆவியானவருடைய வழிநடத்துதலை ஊழியர்கள் தேடுவதில்லை. காரணம் அவர்கள் ஊழியத்திற்கென தேவனால் அழைக்கப்படவில்லை. ஊழியத்தை ஒரு ஆதாயத் தொழிலாக மாற்றிக்கொண்டார்கள். சுகபோக வாழ்வுக்காகவே ஊழியம் அமைந்துள்ளது. ஆதலால் ஆவியானவருடைய வழிநடத்துதல் இல்லை. அப்போஸ்தலர்கள் காலத்தில் பிலிப்பு, எத்தியோப்பியருடைய ராஜஸ்தீரியாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷங்களுக்கு தலைவனுமாயிருந்து எத்தியோப்பியரிடம் ஆவியானவரால் அனுப்பப்பட்டான். (அப்.8:27-29) பேதுரு கொர்நெலியு வீட்டாரிடம் ஆவியானவரால் அனுப்பப்பட்டான். (அப்.10:19, 11:12) பர்னபாவும், சவுலும் ஆவியானவரால் ஊழியத்திற்கு பிரித்தெடுக்கப்பட்டார்கள். (அப்.13:2) ஆசியாவிலே வசனத்தை சொல்லாதபடிக்கு பவுலும், தீமோத்தேயும் தடைப்பண்ணப்பட்டார்கள். (அப்.16:6) பவுல் ஆவியிலே கட்டப்பட்டவனாய் எருசலேமுக்கு போனான். (அப்.20:22) சபைக்கடுத்த தீர்மானங்களில் ஆவியானவர் வழிநடத்துதல் இருந்தது (அப்.15:29). இன்று சபைகளில் பொருளாதார வசதி உடையவர்களுடைய தீர்மானமாகவேயிருக்கிறது. பாஸ்டர் பணமுதலைகளின் கைக்கூலியாகவே இருந்து வருகிறான். சபையில் ஊழியங்களை நியமிப்பதில் பரிசுத்த ஆவியின் பங்கு இருந்தது. (அப்.20:28) ஆனால் இந்நாட்களில் ஊழியர்கள் தேர்தல்களினாலும், அதிகார மற்றும் பண செல்வாக்கு உடையவர்களினாலும் நியமிக்கப்படுகிறார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் மீது அப்போஸ்தலர்கள் கைகளை வைக்க அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றார்கள். (அப்.8:15-17) பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தை கேட்ட யாவர் மேலும் பரிசுத்த ஆவி இறங்கினார். (15) ஒருவனிடத்திலும் இலவசமாய் சாப்பிடாமலும், ஒருவனுக்கும் பாராமாயிராதபடிக்கு, இரவும் பகலும் பிரயாசத்தோடும், வருத்தத்தோடும் வேலை செய்து சாப்பிட்டார்கள். (2தெச.3:8) ஆனால் நம் மத்தியில் இன்றைய ஊழியர்கள் தங்களை பாஸ்டர்கள் என அழைத்துக்கொண்டு, ஊர் ஊராக சுற்றி திரிந்து, ஓசியில் சாப்பிட்டுக்கொண்டு உடம்பை வளர்த்துக்கொண்டு, உல்லாசமாக பவனி வந்து ஏழை எளிய விசுவாச மக்களுடைய இரத்தத்தை குடித்துக் கொண்டு வருகிறார்கள். வெளியில் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையாகவே காணப்படுகிறார்கள்.

53. பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் பரிசுத்த ஆவியின் வரங்களை உடையவர்களாக இருந்தார்கள். (1கொரி.12:4-11) பரிசுத்த ஆவியின் அபிஷேகம் உங்களை கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அவயவமாக இணைக்கிறது. அது வரங்களைக்கொண்ட சரீரமாக இருக்கிறது. அதே வேளையில் தேவன் நல்லோர் மீதும் தீயோர் மீதும் தம்முடைய மழையை பெய்யப் பண்ணுகிறார். (மத்.5:45) பாருங்கள் நீங்கள் தேவனையுடையவர்களாகயிராமல், தேவனுடைய ஆவியை உடையவர்களாயிராமல், பரிசுத்த ஆவியை உடையவர்களாயிராமல், தேவனுடைய வரங்களை உடையவர்களாக காணப்படலாம். ஏனென்றால் வரங்கள் ஒருவன் மனந்திரும்பாத பட்சத்திலும் அவனிடத்தில் கிரியை செய்யும். ஆம், தேவன் நல்லோர் மீதும் தீயோர் மீதும் தம்முடைய மழையை பெய்யப்பண்ணுகிறார். The gifts and callings of God are without repentance (ரோ.11:29) ஆக வரங்களானது கிறிஸ்துவை சாராதவர்களிடத்திலும் கிரியை செய்யும். ஒருவனிடத்தில் காணப்படும் வரத்தைக் கொண்டு அவன் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட பாத்திரம் என கருதமுடியாது. இதில் பகுத்தறிவு ஒருவனிடத்தில் காணப்பட வேண்டும். அது பரிசுத்த ஆவியை பெற்றவனிடத்தில் மாத்திரமே காணப்படும். கிறிஸ்துவை சாராதவர்கள், அற்புத அடையாளங்களை செய்தார்கள். (மாற்.9:38-41)

**54. பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் உலகத்தை ஜெயிக்கிறவர்களாயிருந்தார்கள்.** (1யோ.5:4,5) அதோடுமட்டுமல்ல உலகத்தை கலக்குகிறவர்களுமாயிருந்தார்கள். (அப்.17:6) சத்தியத்தை தைரியமாக பேசுகிறவர்களுமாயிருந்தார்கள். (அப்.4:13) சத்தியத்தை மறைப்பவர்களாகவோ, மறுதலிப்பவர்களாகவோ இருந்ததில்லை. பேதுருவும், யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டார்கள். அவர்கள் படிப்பறியாதவர்கள் என்றும், பேதைமையுள்ளவர்கள் என்றும் அறிந்து கொண்டார்கள். இதனால் அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்கள் என்றும் அறிந்துக்கொண்டார்கள். பாருங்கள் அன்று இயேசுவுடனே கூட இருந்தவர்கள் படிப்பறியாதவர்களும், பேதைமை உள்ளவர்களுமாயிருந்தார்கள். ஆனால் இன்றோ சூட் அணிந்து டாக்டர், இண்டர்நேஷ்னல் பிரசங்கி, P.hd, M.Th., போன்ற பெரிய பெரிய பட்டங்களை போட்டுக்கொண்டிருக்கிறவர்கள்தான், இயேசுவுக்கு பின் செல்கிறவர்களாக கருதப்படுகிறார்கள். இவர்கள் தங்களை தாங்களே மெச்சிக் கொள்கிறார்கள். இவர்களால் மக்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். ஏனென்றால் இவர்களுடைய போதனைகளை மற்றும் உபதேசங்களைத்தான் மக்கள் அதிகமாக விரும்புகிறார்கள். அதாவது கவர்ச்சியை விரும்புகிறார்கள். ஆனால் அது போலியானது, லௌகிக ஞானத்தைக் கொண்டது, பரத்திலிருந்து வராத ஞானம் என்பதை மக்கள் அறிந்துக்கொள்வதில்லை. இதற்கொரு காரணம் உண்டு அது என்னவென்றால் இது கொடிதான வஞ்சிப்பின் காலமாயிருக்கிறது. தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை சாத்தான் வஞ்சிக்க முயற்சி செய்யும் காலமாயிருக்கிறது. ஆனால் இந்த படிப்பறியாத பேதைகளுடைய ஆவியையும், ஞானத்தையும் யாராலும் எதிர்த்து நிற்க முடியவில்லை. பாருங்கள், பரிசுத்த ஆவியானவரே ஊழியங்களை / ஊழியர்களை நியமிக்க வேண்டும். பாருங்கள் அந்தியோகியா பட்டனத்திலுள்ள சபையிலே விசுவாசிகள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக்கொண்டிருந்தபோது பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்த ஊழியத்திற்காக அவர்களை பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். (அப்.13:2) கர்த்தர் அனனியாவிடம் : நீ போ, அவன் (பவுல்) புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துக்கொண்ட பாத்திரம் என்றார். (அப்.9:15) தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை

போஷிப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களை கண்காணியாக வைத்தார். (அப்.20:28) கர்த்தர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகனாகவும் ஏற்படுத்தினார். (எபே.4:13) ஆக சபைக்கடுத்த ஊழியக்காரர்களை தேவன் தானே நியமிக்க வேண்டும். எந்தவொரு சபையும் நியமிக்க முடியாது. எந்தவொரு தலைமைபீடமும் நியமிக்க முடியாது, இது கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையாக இருக்குமானால், ஊழியர்களுடைய நியமனம் கர்த்தருடைய கரத்தில் மாத்திரமே உள்ளதாகும். இந்நாட்களில் ஒருவர் தன்னைத்தானே அப்போஸ்தலனாகவும், தீர்க்கதரிசியாகவும் நியமித்துக்கொள்வது ஒரு வெட்க கேடாகயிருக்கிறது.

**55. பரிசுத்த ஆவிதான் ஒருவனை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்த முடியும்.** (யோ.16:13) ஆவியினாலே தான் ஒருவன் சத்தியத்திற்கு கீழ்படிந்து நடக்க முடியும். எந்த வேதாக கல்லூரியும் உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்த முடியாது. பொதுவாக கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை அறிவிப்பதில் டாக்டர், P.hd, M.Th., போன்ற பட்டதாரிகள் யாவரும் உங்களை சத்தியத்திற்குள் வழிநடத்த முடியாது. மேலும் இந்த பட்டங்கள் யாவும் தேவனுடைய பார்வையில் குப்பைக்கு சமானம். இதனால் ஒரு பிரயோஜனமும் இல்லை. இது இந்த உலகத்தில் பணம் சம்பாதிப்பதற்காகவே படிக்கும் ஒரு பட்டப்படிப்பு. அவ்வளவுதான். பாருங்கள் சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் (பரிசுத்த ஆவி) உங்களில் நிலைத்திருக்கிறது. ஒருவரும் உங்களுக்கு போதிக்க வேண்டியதில்லை. அந்த அபிஷேகம் (பரிசுத்த ஆவி) சகலத்தையும் குறித்து உங்களுக்கு போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது. அது உங்களுக்கு போதிக்கிறபடியே அவரில் நிலைத்திருங்கள். (1யோ.2:27) நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்று, சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள். (1யோ.2:20) தாவீது : உமக்கு பிரியமானதை செய்ய எனக்கு போதித்தருளும், நீரே என் தேவன், உம்முடைய நல்ல ஆவி (பரிசுத்த ஆவி) என்னை செம்மையான வழியிலே நடத்துவாராக. (சங்.143:10) ஆதலால் ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதை காதுள்ளவர்கள் கேட்க கடவர்கள். எபேசு - வெளி.2:7. சிமிர்னா - வெளி.2:11. பெர்கமு-வெளி.2:17. தியத்திரா-வெளி.2:29. சர்தை-வெளி.3:6. பிலதெல்பியா-வெளி.3:13. லவோதிக்கேயா-வெளி.3:22 இதென்ன? ஒவ்வொரு சபைக்காலத்திலும் அந்தந்த சபைக்கால தூதனுக்கு அவன் கொண்டுவரும் செய்திக்கு செவிக்கொடுத்தல். ஆவியானவர் சபைகளுக்கு தம்முடைய தூதன் மூலமாக சொல்லுகிறதை காதுள்ளவர்கள் மாத்திரமே கேட்பார்கள். அதாவது பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் மாத்திரமே செவிக்கொடுப்பார்கள். ஸ்தாபன சபையாருக்கு இது செவிடன் காதில் சங்கு ஊதிய ஒரு செய்தியாகவே இருக்கும்.

**56. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்கிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன்.** (வெளி.2:11) இதிலிருந்து ஆவியானவர் சபைக்காலங்களுக்கு கொடுக்கும் செய்திகளை அனைவரும் கேட்பதில்லை, செவிகொடுப்பதில்லை, விசுவாசிப்பதில்லை என தெரிகிறது. மேலும் ஆவியானவர் சபைகளுக்கு கூறுகிறதை எல்லா மனுஷரும் கேட்டு, அறிந்து, புரிந்துக்கொள்ள முடியாது. ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார். தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண்கள் காணவும் இல்லை, செவிகள் கேட்கவும் இல்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவும் இல்லை. தேவன் அவைகளை நமக்கு அதாவது தம்முடைய மணவாட்டிக்கு தமது ஆவியினால் வெளிப்படுத்தியிருக்கிறார். தேவனுடைய ஆவியினாலேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான். ஜென்ம சுபாவ மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ள மாட்டான். பாருங்கள் ஸ்தாபன சபையார் தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்வது இல்லை. அவர்களுக்கு அவர்கள் சார்ந்திருக்கும் சபையே, அதன் போதகமே போதுமானது. அதை விட்டு வேறு எதுவும் அவர்களுக்கு தெரியாது. ஆனால் ஆவிக்குரியவன் மற்றொருவராலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். (1கொரி.2:6-16) ஒவ்வொரு சபைக்காலத்திலும் ஒரு பிரத்தியேகமான கூட்டம் மாத்திரமே அக்காலத்திற்குரிய தேவனுடைய வெளிப்படுதலை பெற்று, ஆவியானவர் கூறுவதை கேட்டு, அதை அறிந்து, புரிந்துக்கொள்ளமுடியும்.

**57. பரிசுத்த வேதாகமத்தை தேவ ஆவியினால் / பரிசுத்த ஆவியினால் தூண்டப்பட்டு (Given by inspiration of God) தேவனுடைய மனிதர்கள் எழுதினார்கள்.** ஆவியானவர் அவர்கள் எழுத வேண்டியதை, எப்படி மொழிப்பெயர்க்க வேண்டும் என்பது பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டது. ஆவியானவர் தேவையான ஞானத்தை கொடுத்தார். அவர்கள் எழுதினார்கள். அதே வேளையில் புரிந்துக்கொள்ளுதலில், கேட்பதில், பேசுவதில், எழுதுவதில், மொழிப்பெயர்த்தலில், பிரிண்ட் ஆவதில், ஒன்றை செய்வதில் உண்டான கவனக்குறைவுகளினால் சில தவறுகள் ஏற்படலாம். இதை யாரும் மறுக்க முடியாது. ஆவியானவருடைய வழிநடத்துதல் சரியாக இருந்தாலும், கேட்ட, எழுதிய, தேவனுடைய மனுஷர்கள் தவறுவதற்கு காரணங்கள் இருக்காது என ஆணித்தனமாக கூற முடியாது. தவறுகள் இருக்கலாம் என்பதே என்னுடைய கருத்து. ஆனால் இன்று நம்முடையவர்கள் பரிசுத்த ஆவிக்கு பதிலாக லௌகிக ஞானத்தைக் கொண்டும், நவீன தொழில்நுட்பங்களை கொண்டும் மொழிப்பெயர்ப்பதால், இதில், சகோ.பிரன்காமினுடைய செய்திகளை தமிழில் மொழிப்பெயர்ப்பவர்களும் அடங்குவார்கள். தங்களுடைய பெயருக்கும், புகழுக்கும், பணத்திற்கும் மொழிப்பெயர்ப்பதால் அதில் தவறுகள், பிழைகள் அதிகம் அதிகமாக காணப்படுகின்றன. இது இந்நாட்களில் இக்காலத்திற்குரிய செய்திகளை மொழிப்பெயர்ப்பவர்கள் மத்தியில் காணப்படுகிறது. ஆனால் முற்றிலுமாக ஆவியானவர் வழிநடத்துதல் இருக்கும்போது அங்கு தவறுகளுக்கு, பிழைகளுக்கு வாய்ப்பு இருக்க காரணம் இல்லை. பரிசுத்த ஆவியின் நிறைவை பெற்றவனே அந்தந்த காலத்திற்குரிய வெளிப்பாட்டை

பெற்றுக்கொள்ள முடியும், அறிய முடியும், புரிய முடியும், ஏற்றுக்கொள்ள முடியும், விசுவாசிக்க முடியும், அதன்படி நடந்து கனி கொடுக்க முடியும். இவள்தான் கிறிஸ்துவின் மணவாட்டி.

**58. அந்நிய பாஷை பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு அடையாளம் என கூற முடியாது.** அப்.2 அதியில் அவர்கள் எல்லாரும் அதாவது சுமார் 120 பேர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட பிறகே வெவ்வேறு பாஷைகளை பேசினார்கள், தீர்க்கதரிசனம் உரைத்தார்கள் என்று காண்கிறோம். அந்நிய பாஷை ஆவியின் 9 வரங்களில் ஒன்றாகும். அந்நிய பாஷை பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாக இருப்பின், ஒவ்வொரு அந்நிய பாஷையும் தேவனால் உண்டாயிருக்க வேண்டும். நாம் தவறான அந்நிய பாஷைகளை நம் மத்தியில் பலர் பேசக் காண்கிறோம். அன்று பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியை பெற்ற மக்கள், விசுவாசிகள், அவிசுவாசிகள் அனைவரும் புரிந்துக்கொள்ளும் படியாக பற்பல பாஷைகளை பேசினார்கள். (அப்.2அதி) பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்ற பிறகு, பரிசுத்த ஆவியே நமக்கு சகல சத்தியத்தையும் போதிப்பார். அவர் நமக்குள் வாசம் செய்து போதிக்கும் போதகனாயிருக்கிறார். பரிசுத்த ஆவியினால் பிறப்பதே பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஆகும். தேவன் நமக்குள் வாசம் செய்து நாம் ஆவியினால் வழிநடத்தப்படுவதே பரிசுத்த ஆவியின் அபிஷேகம். ஒருவன் மனந்திரும்பி தன் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறும்போது, உடனே பரிசுத்த ஆவியை பெற்றுவிட்டார்கள் என கூறமுடியாது. ஆனால் தேவன் அவனை தம்முடைய ஆவியினால், பரிசுத்த ஆவியினால் நிரப்ப கடமைப்பட்டிருக்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது அனைவரும் பரிசுத்த ஆவியை பெறுவதில்லை. விசுவாசித்தப்பிறகே, விசுவாசத்தில் தொடர்ந்து, ஜீவித்து பரிசுத்த ஆவியை பெறுகிறார்கள். பெந்தெகொஸ்தே நாளன்று சீஷர்கள் மேல் பரிசுத்த ஆவி இறங்கியது. கொரிந்து பட்டிணத்தில் வசனத்தை கேட்டுக்கொண்டிருந்த அனைவர் மேலும் பரிசுத்த ஆவி இறங்கியது. பரிசுத்த ஆவி நம்மை கிறிஸ்துவின் சரீரத்துக்குள் ஞானஸ்நானம் பண்ணுவதே பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் அர்த்தம். இதுதான் மறுபிறப்பு. நாம் வசனத்தை கேட்டு, மனந்திரும்பி, தேவனை பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கையே தண்ணீரில் மூழ்கி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, விசுவாசத்தில் தொடர்ந்து ஜீவித்து, அதன்பின் பரிசுத்த ஆவி நம்மை நிரப்பி, மறுபிறப்பின் அனுபவத்தை நமக்கு கொடுக்கிறது.

**59. ஏழுசபைகளின் காலம் புறஜாதிகள் இரட்சிக்கப்பட தேவன் குறித்த காலமாகும்.** புறஜாதியின் நிறைவு என்பது இதுதான். ஒவ்வொரு காலத்திலும் அதற்குரிய செய்தி, அந்தந்த சபைக்கால தூதனுக்கு கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு காலத்தின் செய்தியும் ஆவியானவர் சபைக்கு சொல்கிறதை காதுள்ளவன் கேட்க கடவன் என்ற கட்டளையுடன் முடிவடைகிறது. ஒவ்வொரு சபைக்கால தூதனும் அந்தந்த காலத்திற்குரிய செய்தியை தேவனிடமிருந்து பெற்று, உண்மையான சபையும், கள்ளச்சபையும் கொண்ட சபைக்கு (பொதுவான அனைத்து சபைகளுக்கும்) அதை அறிவிக்கிறான். அதாவது நமது மத்தியில் உள்ள ஆயிரக்கணக்கான ஸ்தாபன சபைகளுக்கும் செய்தி கொடுக்கப்படுகிறது. ஆவியானவர் தூதன் மூலமாக அளிக்கும் செய்தியை, கேட்க திறமை பெற்றவர்களே அதை ஏற்றுக்கொள்கிறார்கள். ஒவ்வொரு சபைக்கால தூதனும் அக்காலத்திற்குரிய செய்தியை / வெளிப்பாட்டை பெறுகிறான். இச்சத்தியம் மனுஷர்களுக்கு போதிக்கப்பட்டு, அவர்கள் மூலம் மற்ற எல்லா இடங்களிலும் பரவுகிறது. சத்தியத்தை பரப்புகிறவர்களில் சிலர் மந்தையை தப்ப விடாத கொடிதான ஓநாய்களாயிருப்பதினால் சமயம் கிடைக்கும்போது தூதன் கொடுத்த செய்தியை மாத்திரம் போதிக்காமல் சிலவற்றை கூட்டியும், குறைத்தும் போதித்து சத்தியத்தையும், செய்தியையும் கறைப்படுத்துகிறார்கள். இதனால் எழுப்புதல் உண்டாவதில்லை.

60. நான் அறிய நம் மத்தியில் உள்ள கிறிஸ்து பிரன்காம், காக்குவ் பிலிப்பு, டால்டன் புரூஸ், ரிச்சர்டு கேன் போன்றவர்களுக்காக கூலிக்கு மாரடிக்கும் கூட்டத்தார் யாவரும் சத்தியத்தை கறைப்படுத்துகிறவர்களே. மேலும் இராபோஜனம் கிடையாது, ஞானஸ்நானம் கிடையாது, கர்த்தருடைய வருகை வந்துவிட்டது, லவோதிக்கேயா சபைக்காலம் முடிந்து விட்டது, ஏழாவது முத்திரையின் இரகசியம் நிறைவேறிவிட்டது. ஏழாம் முத்திரை ஆவியானவரால் உடைக்கப்பட்டு, அதற்கடுத்த காரியம் என்ன என்பது ஏழாம் சபைக்கால தூதனுக்கு வெளிப்பட்டது உண்மைதான். ஆனால் அதனுடைய இரகசியம் என்ன என்பதை அவர் வெளிப்படுத்தவில்லை. இதை பிதா தவிர வேறொருவனும் அறியான். குமாரனும் அறியார் என்பதை மறந்துவிட்டார்கள். இனி எட்டாவது தூதனாக ஒருவர் வர வேண்டும். அவர்தான் காக்குவ் பிலிப்பு, அவர்தான் டால்டன் புரூஸ் என இதில் போட்டாபோட்டி, சகோ.பிரன்காம் வேதவாக்கியங்களில் அறியாதது ஒன்றுமில்லை, ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு புத்தகம் முற்றிலுமாக கர்த்தர் உரைக்கிறதாவது என்பது, பிரன்காம் மரித்து உயிர்தெழுந்து விட்டார், அவருடைய புதிய நாமம் கிறிஸ்து பிரன்காம் என்பதாகும், ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனும் என்று பரிசுத்த வேதாகமம் கூற இதில் யாக்கோபினுடைய பேரை மாத்திரம் எடுத்துவிட்டு ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், பிரன்காமின் தேவனும் என்று பெரவலூர் சென்னை சபையார் பாடும் பாடல்கள், சகோ.பிரன்காமை சந்தித்த ஏழு தூதர்களின் கூட்டத்தில் இது நான் அது நீ, அது அவர் என்றுக்கூறி தங்களுக்குள்ளே பங்குப்போட்டுக்கொள்ளும் பிசாசின் கூட்டத்தாரும், இனி ஐந்து வகை ஊழியங்கள் கிடையாது, அது அனைத்தும் என்னிலே அடங்கும் என கொக்கரிக்கும் வளசரவாக்கம் பாஸ்டரும், நான் பாஸ்டர் மாத்திரம் அல்ல, அப்போஸ்தலன், சுவிசேஷகன் என்றுகூறி ஊர் ஊராக சுற்றி வலம் வரும் பெரவலூர் சென்னை பாஸ்டரும், இவ்வாறாக சத்தியத்தை பாழாக்கி சாத்தானுடைய தூதர்களாக இவர்கள் இருக்கிறார்கள் என்று இவர்கள் மீது நான் குற்றம் சுமர்த்துகிறேன். நாளுக்குநாள் புது புது உபதேசங்கள், இதனால் நாளுக்குநாள் சபை உடைகிறது. காலையிலே புதிய சபை உருவாகியது. மாலையிலே அது

பட்டுபோயிற்று. முன்னொரு காலத்தில் திருச்சியில் நான் அறிய ஒரு சபை ஞாயிறு காலை மலர்ந்தது. மறு ஞாயிறு அது உலர்ந்து போயிற்று.

61. சென்னையில் ஒரு இடத்தில் வாலிப ஆண் பெண் பிள்ளைகளைக் கொண்டு சபை ஏக தடபுடலாக நடந்தது. சபை பாஸ்டரிடம் வெளிப்பாடுகள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிவந்துக் கொண்டிருந்தது. இந்த சூழ்நிலையில் சபைக்கு வந்த ஒரு சகோதரியை கரம் பிடித்து பாஸ்டர் திருமணம் செய்துகொண்டார். பிள்ளைகளை பெற்றார். ஆனால் அவர் கண்கள் நான்கு பக்கமும் சுற்றி திரிந்தது. மோகம் கொண்டார். சபைக்கு வந்த வேறொரு பெண்ணிடம் தவறாக நடந்துக்கொண்டார். காவல் நிலையம் சென்று அதிகாரிகளை தரிசனம் செய்து வந்தார். அங்கு இவரை நன்கு கனப்படுத்தி கௌரவிக்க வேண்டிய விதத்தில் கௌரவித்து அனுப்பி வைத்தார்கள். போலீஸ் ஸ்டேஷனில் கிடைக்கும் கௌரவம் உங்கள் அனைவருக்கும் தெரிந்ததே. சில ஆண்டுகள் பாஸ்டர் ஊழியத்தை நிறுத்தி வைத்தார். பின் திடீரென என் தேவன் என்னை நினைவுகூர்ந்தார் என்னுடைய பாவங்களையெல்லாம் மன்னித்து மீண்டும் என்னை பாஸ்டர் பதவியில் அரியனை ஏற்றி மகுடம் சூட்டியுள்ளார். நான் இப்பொழுது மீண்டும் பாஸ்டர் ஊழியம் செய்கிறேன் என்கிறார். இப்படிப்பட்ட பேர்வழிகளை குறித்து நான் என்ன சொல்வது? இப்படிப்பட்டவருடைய கூட்டத்தில் மக்கள் பங்கு பெறுவதைக் குறித்து நான் என்ன சொல்வது? இப்படிப்பட்ட பாஸ்டர்கள் தான் கடைசிக்கால ஊழியம் என்று சொல்லிக்கொண்டு மக்களை ஏமாற்றி தங்கள் பிழைப்பை ஓட்டிக்கொண்டு வருகிறார்கள். பாருங்கள் இப்படிப்பட்டவர்களால் இந்த கடைசிக்கால ஊழியம் எவ்வளவு சீர்கெட்டுவிட்டது என்பதை பாருங்கள். சகோ.பிரன்காம் பெயரை கூறிக்கொண்டு தானே இப்படிப்பட்டதான மானங்கெட்ட பிழைப்பு நடக்கிறது. செய்தியை கறைப்படுத்திவிட்டார்களே. சகோ.பிரன்காம் பெயரை மாசுபடுத்திவிட்டார்களே, ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தியை வெறொரு செய்தியாக்கி விட்டார்களே. இதற்கெல்லாம் காரணம் யார்? பரிசுத்த ஆவியை பெறாத, ஒன்றை பகுத்தறிய முடியாத விசுவாசிகளே, கள்ளகபடமுள்ள வேலையாட்களே.

62. நீங்கள் உண்மையாய் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றிருந்தால், எல்லாவற்றை காட்டிலும் தேவனுடைய வார்த்தையை அதிகமாக மதித்து, நேசித்து அவருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் நீங்கள் பிழைப்பீர்கள். ஒருவன் பரிசுத்த ஆவியை பெற்றதற்கு அடையாளம் அவன் சத்தியத்தை அறிகிற அறிவை மட்டும் வளர்ந்தால் போதாது, அவன் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டு, அதன்படி நடந்து, கனி கொடுக்கிறவனாயிருக்க வேண்டும். பாருங்கள் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தை சாந்தமாய் ஏற்றுக்கொள்வதோடு மட்டும் அல்லாது நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்கு, திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமாய் அல்ல, அதன்படி செய்கிறவர்களுமாயிருங்கள். ஒருவன் திருவசனத்தை கேட்டும் அதன்படி செய்யாதவனானால் கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தை பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாவான். அவன் தன்னைத்தானே பார்த்து அவ்விடம் விட்டு போன உடனே தன் சாயல் இன்னதென்று மறந்து விடுகிறான். சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்று பார்த்து அதே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல் அதற்கேற்றபடி கிரியை செய்கிறவனாயிருந்து தன் செய்கைகளில் பாக்கியவானாய் இருப்பான். (யாக்.1:25-25) ஆவியினால் மறுபிறப்பு அடைந்த ஒருவனே அந்தந்த காலத்திற்கு ஆவியானவர் மூலமாக சபைதூதனுக்கு கொடுக்கப்பட்டுள்ள வெளிப்பாடுகளை ஏற்றுக்கொள்வான் மற்றவர்கள் அல்ல. இதுகுறித்து அப்.பவுல் 1கொரி.2:4-16 வரை கூறியுள்ளதை தியானியுங்கள், தேவனே, தமது ஆவியினால் தேவஞானத்தை, தேவனுக்கடுத்த வெளிப்பாடுகளை நமக்கு வெளிப்படுத்தி தர வேண்டும்.

63. **பரிசுத்த ஆவியை பெற்றபின் இழந்துப்போக முடியாது.** அதாவது பரிசுத்த ஆவியை பெற்ற பின்பு ஒருவன், பின்மாற்றம் அடைந்து பெற்ற, பரிசுத்த ஆவியை இழந்துப்போக முடியுமா? முடியவே முடியாது. ஏனெனில் பரிசுத்த ஆவி ஒரு முத்திரை. அந்த முத்திரை எதுவரை? ஒரிரு ஆண்டுகளுக்கு மாத்திரமல்ல. அது அதனுடைய இலக்கை சேர்ந்து அடையும்வரை ஆகும். அந்த முத்திரை உங்களை நித்தியம் வரை கொண்டு செல்லும். பாருங்கள். ஒரு கூட்டம் உண்டு. எண்.13அதி. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுக்கும் கானான் சேதத்தை சுற்றிப்பார்பதற்கு ஒவ்வொரு பிதாக்களின் கோத்திரத்திலும், ஒவ்வொரு பிரபுவாகிய புருஷனை மோசே அனுப்பினான். அவர்கள் கானான் சென்றடைந்தார்கள். தேசத்தை சுற்றிப்பார்த்து 40 நாட்கள் சென்ற பிறகு திரும்பினார்கள். அந்த நாட்டின் உச்சிதமான கனிகளில் திராட்சை, மாதுளம், அத்திப்பழங்களை கொண்டு வந்தார்கள், அவைகளை ருசிப்பார்த்தார்கள். ஆனால் சென்ற 12 பேரில் 10 பேர் நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்த்து நிற்க நம்மாலே கூடாது, அவர்கள் நம்மை பார்க்கிலும் பலவான்கள் அங்குள்ள ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள் அங்கே இராட்சத பிறவிகளான ஏனாக்கின் குமாரராகிய ராட்சதரரை கண்டோம். நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுகிளிகளைப் போன்று இருந்தோம் போன்ற துர்செய்திகளை பரவச்செய்தார்கள். ஆனால் காலேப் மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி : நாம் உடனே போய் அதை சுதந்தரித்துக்கொள்ளுவோம். நாம் அதை எளிதில் ஜெயித்துக்கொள்ளலாம் என்றான். முடிவில் இந்த துர்செய்தியை சொன்னவர்களாகிய அந்த மனிதர்கள் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்தார்கள். தேசத்தை சுற்றிப்பார்க்க போன அந்த மனிதரில் நூனியின் குமாரனாகிய யோசுவாவும் எப்புனேயின் குமாரனாகிய காலேப் மாத்திரம் உயிரோடு இருந்தார்கள். கானானுக்குள் பிரவேசித்தார்கள். பாருங்கள் கானானை சுற்றிப்பார்க்க சென்ற அனைவரும் அங்குள்ள கனிகளை ருசிபார்த்தார்கள். அவ்வாறாகவே விசுவாசிகளில் அநேகர் பரிசுத்த ஆவியின் கனியை ருசிபார்த்தார்கள். ஆனால் பரிசுத்த ஆவிக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறார்கள். அதாவது அநேக சமயங்களில் தேவனுடைய வார்த்தைக்கு எதிர்த்து

நிற்கிறார்கள். பாருங்கள் பரிசுத்த ஆவியை விசுவாசிக்கிறார்கள். அதன் கனியை ருசி பார்த்தும் அவர்கள் முடிவு பரியந்தம் நிலை நிற்கவில்லை. இவர்கள்தான் பின்வாங்கி போனவர்கள். கவனியுங்கள் ஒருதரம் பிரகாசிக்கப்பட்டும், நீதிமானாக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்தமாக்கப்பட்டும், பரிசுத்த ஆவியை பெற்றும் அதாவது partakers of the Holy Spirit என உள்ளது. அதாவது இவர்கள் பரிசுத்த ஆவியை முற்றிலுமாக பெறவில்லை. அதில் பங்கு கொண்டவர்கள் மாத்திரமே. ஏனென்றால் பரிசுத்த ஆவி நல்லோர் மேலும் தீயோர் மேலும் விழுந்தது. அவர்கள் தீயவர்கள். இவர்கள் மீதும் பரிசுத்த ஆவி விழுந்தது. ஆதலால் அவர்கள் கனியை கொடுத்தார்கள். ஆனாலும் பின்பு இவர்கள் தங்களுடைய அவிசுவாசத்தினால், கிரியைகளினால் தேவனுடைய குமாரனை மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்தினார்கள், மறுதலித்தார்கள். ஆதலால் இவர்களை மறுபடியும் புதுப்பிக்க கூடாது. தியானியுங்கள் எபி.6:1-8, மத்.5:45. இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ளோம் என்பவர்களில் பெரும்பாலானோர் நிலை இது தான்.

**64. ஒரு மனிதன் பரிசுத்த ஆவியை பெற்ற பின்பு, பின்வாங்கி போய் தன் பந்தய பொருளை இழந்துப்போக முடியாது.** ஒருதரம் பிரகாசிக்கப்பட்டு நான் இழந்து போனேன் என்று கூறுபவன் ஒரு எல்லைக்கோட்டு விசுவாசி. அவன் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவன் அல்ல. மாறாக தேவனுடைய நல்வார்த்தையையும், இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தப்பின் மறுதலித்துப் போனவர்கள். இதை பவுல் யூதர்களுக்கு எழுதுகிறான். ஆனால் அது நமக்கும் திருஷ்டாந்தமாக உள்ளது. இவர்கள் பரிசுத்த ஆவியை ருசிபார்க்கும் அளவுக்கு, அருகாமையில் இருப்பார்கள். ஆனால் அதை பெற்றுக்கொள்ள மாட்டார்கள். விழுந்துப்போன அவர்கள் மனந்திரும்புவதற்கேதுவாக மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம். அவர்களுக்கு இனி மனந்திரும்பதலே இருக்க முடியாது. ஏனென்றால் பரிசுத்த ஆவி அவர்களை விட்டு செல்லும் அளவிற்கு அவர்கள் அவரை துக்கப்படுத்திவிட்டார்கள். அவர்கள் மிக அருகாமையில் வந்தனர் அது உண்மைதான். ஆனாலும் அவர்கள் புதுப்பிக்க கூடாத காரியம். பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் போலவே அவர்கள் அந்நிய பாஷை பேசி, அவர்களை போல் நடந்துக்கொண்டு அதே சமயத்தில் தேவனுடைய ராஜியத்திற்கு அபாத்திரராய் காணப்படுகிறார்கள். தொடக்கத்திலே அவர்கள் தவறாயிருந்தனர். தொடக்கத்திலிருந்தே அவர்கள் நோக்கங்களும் குறிக்கோள்களும் சரியில்லை. பெந்தெகொஸ்தே பாஸ்டர்களுடைய நிலை இதுதான். ஆரம்பத்திலே மிக்க தாழ்மை. காலம் கடந்து செல்ல செல்ல பணம், பெருமை, அந்தஸ்து, ஆணவம் போன்ற நிலைபாடுகள் காணப்படுகின்றன. பந்தய பொருளை இழந்துப்போகின்றனர். மேலும் கவனியுங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றப்பிறகு அவன் ஒரு ஸ்தாபனத்தில் பங்கு வைக்க / கொள்ள முடியாது. அவ்வாறாக பங்கு வைக்கிறவனுடைய நோக்கமே தொடக்கத்திலிருந்து தவறானது. அவன் ஒரு எல்லைக்கோட்டு விசுவாசி. எனது குடும்பத்தில் கூட அநேகர் எல்லைக்கோட்டு விசுவாசிகளாயிருக்கிறார்கள்.

65. ஆவியாகிய தேவனுக்கு ரூபம் ஒன்றும் இல்லை. ஆனாலும் அவருடைய சத்தத்தை கேட்டார்கள். (மாற்.10:20) புறா போன்ற வடிவத்தில் காணப்பட்டார். (மத்.3:16) He saw the Spirit of God decending like a dove இந்த பரிசுத்த ஆவி ஜீவதண்ணீர் (யோ.7:38,39) எண்ணெய் மத்.25:3,4, அக்கினி அப்.2:3, முத்திரை எபே.1:13, அபிஷேக அச்சாரமாக 1யோ.2:27 ல் வர்ணிக்கப்படுகிறார்.

**66. பரிசுத்த ஆவி எதற்காக?**

தேவன் சபைக்கு வாக்களித்துள்ள அனைத்துமே பரிசுத்த ஆவிக்குள் அடங்கியுள்ளது. தேவனுடைய ஆவி நம்மிடத்தில் இல்லாமல் நாம் இந்த வாழ்க்கை போரில் வெற்றி பெற முடியாது. அதாவது சாத்தானை எதிர்த்து சண்டையிட முடியாது. யோ.14:20 உலகம் அந்த சத்திய ஆவியானவரை காணமலும், அறியாமலும் இருக்கிற படியினால் அவரை ஏற்றுக்கொள்ள மாட்டாது. காணுதல் என்றால் புரிந்துக்கொள்ளுதல் என்று பொருள். அதாவது சத்திய ஆவியானவரை புரிந்துக்கொள்ளாமலும் என அர்த்தம். அதாவது சத்திய ஆவியானவரை புரிந்துக்கொள்ளாமலும், அறிந்துக்கொள்ளாமலும் இருக்கிறபடியினால் அவரை ஏற்றுக்கொள்ள மாட்டான். தேற்றரவாளன் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள். இது ஆங்கிலத்தில் Shall be in you என உள்ளது. அதாவது வருங்காலத்தில் உங்களுக்குள்ளே இருக்கப்போவதால் என்னும் அர்த்தத்தில் உள்ளது. பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து, நான் சொன்ன எல்லாவற்றையும் நினைப்பூட்டுவார். இதுவே ஆவியின் பணியாகும். அதாவது தேவனே தமது சபையில் வாசம் செய்து தமது சபையின் மூலம் தமது திட்டங்களை தொடங்க வேண்டும் என்பதற்காக தேவன் கிறிஸ்துவுக்குள் வாசம் செய்து, கிறிஸ்துவின் மூலம் தமது திட்டங்களை நிறைவேற்றி வந்தார். இப்பொழுது கிறிஸ்து சபைக்குள் வந்து சபையின் மூலம் தமது கிரியைகளை தொடர்ந்து நடத்திவருகிறார். தேவன் என்னவாயிருந்தாரோ அதை அனைத்தையும் கிறிஸ்துவுக்குள் ஊற்றினார். கிறிஸ்து தேவத்துவத்தின் பரிபூரணமாக சரீர பிரகாரமாக இருந்தார். அதாவது யேகோவா என்னவாயிருந்தாரோ அது அனைத்தையும் கிறிஸ்துவுக்குள் ஊற்றினார். கிறிஸ்து என்னவாயிருந்தாரோ அது அனைத்தையும் சபைக்குள் ஊற்றினார். அதாவது கிறிஸ்து என்னாயிருந்தாரோ அதை ஒரு நபருக்குள் மாத்திரம் அல்ல முழு சரீரத்திற்குள்ளும், முழு சபைக்குள்ளும் ஊற்றினார். பிதாவாகிய தேவன் அக்கினி ஸ்தம்பத்தில் மோசேயின் மேலும் இஸ்ரவேல் புத்திரரின் மேலும் இருந்தார். பிறகு தேவன் நம்மோடு கூட இருந்து, நம்மோடே நடந்து, நம்மோடே புசித்து, நம்மோட உறங்கினார். இப்பொழுது தேவன் நம்மோடு. அடுத்தக்கட்டமாக தேவன் இப்பொழுது நமக்குள். தேவன் பரிசுத்த ஆவியாக உங்களுக்குள் இருந்துக்கொண்டு

கிரியை செய்கிறார். நாம் தேவன் வாசம் செய்யும் ஆலயம். லூத்தரர்களை இரட்சித்த அதே பரிசுத்த ஆவி, மெத்தடிஸ்டுகளை பரிசுத்தமாக்கிய அதே பரிசுத்த ஆவி, இப்பொழுது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கென சபையை ஒழுங்குப்படுத்திக்கொண்டிருக்கிறது. பரிசுத்த ஆவியினால் நிறையப்பட்டவர்கள் மாத்திமே எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்கு பெறுவார்கள். பெயர் கிறிஸ்தவர்கள் நிச்சயமாக இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன் என்கின்றனர். ஆனால் பிசாசும் கூட அப்படியே விசுவாசிக்கிறேன் என்கிறான். (யாக்.2:19) ஆனால் பரிசுத்த ஆவியினாலேயன்றி ஒருவனும் இயேசுவை கிறிஸ்து என்று சொல்லக்கூடாது என்று கூறுகிறது. (1கொரி.12:3). நீங்கள் பரிசுத்த ஆவியை பெறாமல் இரட்சிக்கப்படுவதில்லை. பரிசுத்த ஆவியை பெற ஒரேயொரு வழிதான் உண்டு. அது தான் அப்.2:38.

**67. நித்திய ஜீவன் என்றால் என்ன?** இது கிரேக்க வேதாகமத்தில் சோ. Zoe என உள்ளது. என்னிடத்தில் வருகிற யாவருக்கும் நான் நித்திய ஜீவனை தருவேன். அவன் உயிரொடெழ வேண்டும். எனென்றால் அவனுக்குள் நித்திய ஜீவன் ஆதலால் அவன் உயிரொடெழுந்தே ஆக வேண்டும். தேவன் எப்படி மரிக்க முடியாதோ அப்படியே அவனும் மரிக்க முடியாது. இயேசு பேதுருவிடம் நீ குணப்பட்ட பின்பு, பாருங்கள் அவன் இன்னும் பரிசுத்த ஆவியை பெறவில்லை. நீ குணப்பட்ட பின்பு (நீ பரிசுத்த ஆவியை பெற்றபின்பு) உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார். முதலாவது தேவன் உங்கள் மேல், அதன் பின்பு உங்களோடு, அதன் பின்பு உங்களுக்குள். பரிசுத்த ஆவியில்லாமல் எந்த மனிதனும் அவரை தேவனுடைய குமாரன் என்று அழைக்க முடியாது. அதாவது பரிசுத்த ஆவி எனக்குள் வந்து, அதை குறித்து நான் சாட்சி கொடுத்தால் மாத்திரமே நான் அவரை தேவனுடைய குமாரன் என்று அழைக்க முடியும். நான் உங்களை பரிசுத்தமாக்க முடியாது. நீங்களும் என்னை பரிசுத்தமாக்க முடியாது. ஏனென்றால் நாம் அனைவருமே இனச்சேர்க்கையினால் பிறந்தவர்கள். இயேசு இனச்சேர்க்கையின்றி பிறந்தவர். எனவே அவருடைய இரத்தம் பரிசுத்தமாக்கும் தன்மை வாய்ந்தது. பாருங்கள் அவர் ஒரு சரீரரத்தை உண்டாக்கி அதில் இறங்கி வந்து அதில் வாசம் செய்தார். நம்மை பரிசுத்தமாக்கும் பொருட்டு அவருடைய இரத்தத்தை சிந்தினார். உங்களுக்கு வல்லமை அளிக்க பரிசுத்த ஆவி வந்தது. தேவனுக்கு எங்கோ ஒரிடத்தில் சிறுபான்மை பேர் இருப்பார்கள். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்று முன் செல்ல தேவனுக்கு ஒரு சிறு சபை உள்ளது. இதை என்னால் செய்ய முடியவில்லை என்று நீங்கள் கூறலாம். ஆனால் அதை செய்வதற்கு பரிசுத்த ஆவி உங்களுக்குள். பரத்திலிருந்து இறங்கி வந்துள்ள ஆவி. அது உங்களுக்குள் இருக்கும் தேவன். நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல் மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான். நீங்கள் நியாயத்தீர்ப்புக்கு செல்வது இல்லை. உங்கள் நியாயத்தீர்ப்பை நீங்கள் இங்கேயே அடைந்து விடுகிறீர்கள். என்னுடைய தவறுகளுக்கு நான் இங்கேயே சிட்சிக்கப்படுகிறேன், தண்டிக்கப்படுகிறேன். தண்டனை என்பது ஒருமுறை மாத்திரமே.

**68. நீங்கள் ஏன் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ள வேண்டும்?** அது என்ன? அது தேவனுடைய ஆவி. அது அனுப்பப்பட்டதின் நோக்கம் உங்களை வழிநடத்தி, உங்களுக்கு வழிகாட்ட, உங்களை நிறைக்க, உங்களை பரிசுத்தப்படுத்த, உங்களை வெளியே அழைத்து, அதாவது ஸ்தாபன சபைகளிலிருந்து உங்களை வெளியே அழைத்து, தம்முடைய சரீரமாகிய சபையில் சேர்க்க. சபை என்றால் என்ன? சபை என்றால் வெளியே அழைக்கப்படுதல், பிரித்தெடுக்கப்படுதல் என பொருள். பெந்தெகொஸ்தே நாளில் இருந்த மக்கள் தங்களுக்கு இருந்ததைக்கூட வேண்டாம் என்று தள்ளி விட்டார்கள். விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும், ஒரே மனமுள்ளவர்களுமாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையது என்று சொல்லவில்லை. சகலமும் அவர்களுக்கு பொதுவாயிருந்தது. அவர்கள் எல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. (அப்.4:32) இந்த கோட்டில் நாம் வர பிரயாசப்படவேண்டியவர்களாயிருக்கிறோம்.

**69. விவரமாக பெந்தெகொஸ்தே நாள் அன்று நடந்தது என்ன என்பதை காண்போம்.** பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கம் உண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அவர்கள் ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். நாவுகள் என்பது உடலில் ஒரு உறுப்பை குறிக்கும். இது நாக்கு. இது உங்களில் உள்ள ஒரு உறுப்பு. அக்கினி மயமான நாவுகள் என்பது நாவுகளை போன்று தீச்சுடர், அக்கினி சுவாலை என்று பொருள்படும். பரிசுத்த ஆவி வரும்வரைக்கும் நீங்கள் ஆவியில் பிறப்பதில்லை. அது உண்மை. பரிசுத்த ஆவியின் அபிஷேகம், பரிசுத்தமாக்குதலிலிருந்து வித்தியாசப்பட்டது. பரிசுத்தமாக்கப்படுதல் என்பது சுத்திகரிப்பு. அது ஜீவனைப் பெற ஆயத்தப்படுகிறது. ஆனால் பரிசுத்த ஆவி வரும்போது அதுவே ஜீவன். பரிசுத்தமாக்கப்படுதல் பாண்டத்தை சுத்தமாக்கி ஆயத்தப்படுத்துகிறது. பரிசுத்த ஆவி பாண்டத்தை நிரப்புகிறது. பரிசுத்தமாக்கப்படுதல் என்றால் சுத்தமாக்கப்பட்டு ஊழியத்திற்கென்று ஒதுக்கி வைக்கப்படுதல். பரிசுத்த ஆவி உங்களை ஊழியத்தில் புகுத்துகிறது. நீங்கள் தான் தேவன் சுத்தமாக்கின பாண்டம். பரிசுத்த ஆவி உங்களுக்குள் இருக்கும் தேவன். ஏனென்றால் பரிசுத்த ஆவியே தேவன். சீஷர்கள் எருசலேமிற்கு சென்று அங்கு காத்திருக்க வேண்டுமென்று இயேசு கட்டளையிட்டார். ஏனென்றால் அவர்கள் பிரசங்கிப்பதற்கு, தங்கள் பணிகளை தொடங்க வேண்டிய வேளை இன்னும் வரவில்லை. அவர்கள் தங்களை தகுதியுள்ளவர்களாக காண்பிக்க, அதுவரை காத்திருங்கள் என்று கூறினார். உன்னதத்திலிருந்து வரும் பலனால் அவர்கள் தரிப்பிக்கப்படும் வரைக்கும் அவர்கள் எந்த பணியிலும் ஈடுபடக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தார். இன்றைக்கு உழைத்து ஜீவனம் செய்ய முடியாதவர்கள், குறுக்குவழியில் பரிசுத்த வேதாகமத்தை கரத்தில் எடுத்துக்கொண்டு, பாட்டுப்பாடி, சங்கீதம் வாசித்து, ஜெபம் பண்ணி காணிக்கைகளை வேட்டையாடி, பந்தாவாக வெண்ணிற ஆடை அணிந்து கௌரவமாக

பாஸ்டர் என்ற பதவியுடன் உலாவி பவனி வருகிறார்கள். இவர்கள் வலையில் பல குருவிகள் விழுகின்றன. எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண் பிள்ளைகளுடைய வீடுகளில் இவர்கள் நுழைந்து அவர்களை வசப்படுத்திக்கொள்கிறார்கள். உழைக்காமலே உடம்பை வளர்த்து, செல்லும் இடங்களில் மோக இச்சையுடன் நடந்துக்கொண்டு, பல குடும்பங்களை கவிழ்த்துப் போடுகிறார்கள், பாழாக்குகிறார்கள். சிலருடைய மதிகேடு வெளிப்படுகிறது. சிலருடைய மதிகேடு அந்தரங்கமாகவே இருந்து வருகிறது. இவ்வாறாக 100க்கு 99% பாஸ்டர்கள் மாய்மாலமான வாழ்க்கையே வாழ்ந்து வருகிறார்கள். எந்தவொரு போதகனும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெறாமல் தேவனால் அனுப்பப்படாமல் போதகனாக நியமிக்கபடுவதில்லை. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெறாமல் பிரசங்க பீடத்தில் ஏறுவதற்கு எந்த போதகனுக்கும் உரிமையில்லை. அது முற்றிலும் உண்மை. அவன் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெறும்வரைக்கும் ஏதோவொரு ஸ்தாபனத்தின் அறிவினால் தனது லௌகிக ஞானத்தினால் வழிநடத்தப்படுகிறான். ஒருவன் ஆ கூ என்று சத்தமிடுவதால் இரட்சிக்கபடவில்லை. வெண்ணிற ஆடையில் உலாவி வருவதால் இரட்சிக்கப்படுவதில்லை. அக்கர புக்கர என்ற ஒரு சத்தத்தை எழுப்பி அந்நிய பாஷையில் பேசி மகிழ்கிறேன் என தன்னை அழைத்துக்கொள்வதால் ஒருவன் இரட்சிக்கப்படவில்லை. நீங்கள் ஒரு இண்டர்நேஷனல் பிரசங்கியாக இருப்பதால் இரட்சிக்கபடவில்லை, ஒரு சன்மார்க்க ஜீவியம் செய்வதினாலும் இரட்சிக்கப்படவில்லை. புருஷர்களும் ஸ்தீரிகளும் ஏறக்குறைய 120 பேர் அங்கு எருசலேமில் இருந்த ஆலயத்தின் மேலறைக்குச் சென்றனர். ஆலயத்தின் வெளிப்புரத்தில் ஒரு சிறு அறைக்கு செல்லும் படிக்கட்டு ஒன்று இருந்தது. அந்த படிக்கட்டு மேலே சென்ற போது அங்கு ஒரு சிறு அறை. அவர்கள் அந்த மேலறையில் கூடி இருந்தார்கள். இவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை வழிப்பட்டு வருவதால், யூதர்கள் அவர்களை சிதறடிக்கப்பண்ணுவார்களோ என்று பயந்திருந்தனர். முக்கியமாக பிரதான ஆசாரியனாகிய காய்பாவும் பொந்தியுபிலாத்துவும் இயேசுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தப்பிறகு. கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படும் எவரையும் ஒழித்துவிட முடிவு செய்தனர். இதனால் சீஷர்கள் பயந்து, மேலறைக்கு சென்று கதவுகள் அடைப்பட்ட நிலையில் அங்கு காத்திருந்தனர். பாருங்கள் மேலறைக்கு செல்லும்படி இயேசு அவர்களிடம் கூற வில்லை. மாறாக எருசலேமில் காத்திருங்கள் என்று மாத்திரமே கூறினார். இவர்கள் அடைப்பட்டிருந்த அந்த சிறு அறைக்கு ஜன்னல்கள் கிடையாது. ஜன்னல் கம்பிகள் போடப்பட்ட சிறு திறப்புகள் மாத்திரமே இருந்தன. கதவுகளை நீங்கள் இழுத்து திறக்க வேண்டும். அந்த அறையில் சிறு எண்ணெய் விளக்குகள் தொங்கவிடப்பட்டு அவைகள் எரிந்துக்கொண்டிருந்தன. ஒலிவ எண்ணெயினால் நிரப்பப்பட்ட அந்த சிறு விளக்கில் ஒரு சிறு திரி மூழ்கப்பட்டு அது எரிந்துக்கொண்டிருந்தன. அவர்கள் அந்த சிறு அறையில் உட்கார்ந்துக்கொண்டு 10 நாட்கள் காத்திருந்தனர். அவர்கள் இருந்த மேல் வீட்டின் கீழே தேவாலயத்தில் அவர்கள் பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரித்துக்கொண்டிருந்தனர். பெந்தெகொஸ்தே என்பது ஒரு ஸ்தாபனம் அல்ல. அது அதை விரும்பும் எவருக்கும் கிடைக்கும் ஒரு உன்னத அனுபவமாகும். அனுபவம் என்னும்போது அது ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் உரியது. ஆகவே பெந்தெகொஸ்தே சபைக்கும், பெந்தெகொஸ்தே அனுபவத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. ஆதலால் அக்கர புக்கர என்று கூச்சலிடும் கூட்டத்தாரை நம்பி மோசம் போகாதீர்கள். இது கொடிதான வஞ்சிப்பின் காலம். அந்த வேளையில் வானத்திலிருந்து சடிதியாக பலத்த காற்று அடிக்கிறது போல ஒரு முழக்கம் உண்டாயிற்று. அது பலத்த காற்று அல்ல. பலத்த காற்று அடிக்கிறது போன்ற முழக்கம். இது இயற்கைக்கு மேம்பட்ட ஒரு காற்று. அதை அவர்களால் உணர முடிந்தது. காற்று பலமாக அடிக்கவில்லை. காற்று பலமாக அடிக்கும்போது ஏற்படுகிற முழக்கம் போல ஒரு முழக்கம் உண்டாயிற்று. அது அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அப்பொழுது அக்கினி மயமான நாவுகள் அவர்களுக்கு காணப்பட்டு, அதாவது நாவின் வடிவத்தை போன்ற அக்கினி காணப்பட்டது. அவை ஒவ்வொன்றும் அவர்களுக்குள் சென்றது என்றல்ல, மாறாக அவர்கள் மேல் அமர்ந்தது. அதாவது முதலில் முழக்கம், இரண்டாவது நாவுகள் போன்ற அக்கினி, மூன்றாவதாக அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். நான்காவதாக ஆவியானவர் அவர்களை பேச ஏவியபடியே அவர்கள் வெவ்வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள்.

70. இங்கு நன்கு கவனியுங்கள். சீஷர்கள் மேல் அறையில் காத்திருந்தனர். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிறது போன்ற ஒரு சத்தம் உண்டாயிற்று. அது அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அதன் பின்பு நாவின் வடிவில் அக்கினி தோன்றி அவர்கள் மேல் தரிக்கிறது. அது பரிசுத்த ஆவியின் தோற்றம். அது என்ன? அக்கினி ஸ்தம்பம். அது தேவனே தம்மை தமது ஜனங்கள் மத்தியில் பிரித்துக்கொண்டு, ஜனங்களுக்குள் வருதல். இது என்ன? இயேசு பரிசுத்த ஆவியை அவர்கள் மேல் பொழிந்தருளினார். இப்பொழுது இயேசு பெற்றிருந்த அந்த அளவில்லாத ஆவியை, தம்முடைய சீஷர்கள் மேல் அளவோடு பொழிந்தருளினார். நாம் அளவோடு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகிறோம். இதன் பின் என்ன நடந்தது? அவர்கள் மேல் அறையிலிருந்து வெளியே வந்து, படிக்கட்டுகளின் வழியாக கீழே இறங்கி வந்து, தேவாலயத்தின் வெளிப்பிரகாரத்தை அடைந்தனர். அங்குதான் ஜனங்கள் எல்லோரும் கூடியிருந்தார்கள். அவர்கள் வெளியே வந்தபோது ஆவியினால் நிறைந்திருந்து ஆவியானவர் தங்களுக்கு தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளில் பேசத்தொடங்கினார்கள். பரிசுத்த ஆவி வந்து விட்டது, தேவனுடைய வாக்குதத்தம் எங்கள் மேல் உள்ளது. நாங்கள் ஆவியினால் நிறையப்பட்டிருக்கிறோம் என்று கூற முயன்றனர். அவர்கள் கலிலேயர்கள். அங்கு சுமார் 17 நாட்டினர் கூடியிருந்தனர். சீஷர்கள் பேசுகிறதை அவர்கள் தங்கள் தங்கள் பாஷையில் கேட்டார்கள். தங்கள் தங்கள் பாஷையில் அவர்கள் கலிலேயர் பேசுகிறதை கேட்டபோது கலக்கம் அடைந்தார்கள். பேசுகிற இவர்கள் அனைவரும் கலிலேயர்கள் அல்லவா, இப்படியிருக்க கேட்கிற நாம் நம்முடைய ஜென்ம பாஷையினால் அவர்கள் பேசுகிறதை கேட்கிறோமே? இது எப்படி? நாம் நம்முடைய

பாஷையிலே தேவனுடைய மகத்துவங்களை இவர்கள் பேச கேட்கிறோமே என்று பிரமித்து, சந்தோஷப்பட்டு இதென்னமாய் முடியுமோ என்று ஒருவரோடோருவர் சொல்லிக் கொண்டார்கள். மற்றவர்களோ இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்கள் என பரியாசம் பண்ணினார்கள்.

71. கவனியுங்கள். சீஷர்கள் கலிலேயர். தங்கள் பாஷையில் பேசினார்கள். அதை கேட்ட சுமார் 17 நாட்டு ஜனங்கள் தங்கள் தங்கள் ஜென்ம பாஷையில் சீஷர்கள் பேசுவதை கேட்டார்கள். சீஷர்கள் பேசுவதை அவர்கள் வெவ்வேறான தங்கள் தங்கள் பாஷைகளில் கேட்டார்கள். இங்கு நீங்கள் சற்று ஆழமாக சிந்திக்க வேண்டும். 120 பேர் கூடியிருந்தார்கள். அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். வெவ்வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள். 120 பேரும் வெவ்வேறு பாஷைகளில் பேசினார்கள். அப்படியானால் 120 பாஷைகளில் பேசினார்களா? ஆனால் அங்கு கூடியிருந்தவர்கள் சுமார் 17 நாட்டினர். இந்த 17 நாட்டினரும் தங்கள் தங்கள் பாஷையில் மாத்திரம் 120 பேர் பேசுவதை கேட்டார்கள். அந்த 120 பேரும் 120 பாஷைகளில் பேசியிருப்பார்களாகில் அங்கு குழப்பம் ஏற்பட்டிருக்கும். அல்லது இந்த 120 பேரும் 17 நாட்டினர் பாஷைகளை தங்களுக்குள் பகிர்ந்துக்கொண்டு பேசினார்களா? அப்படியானால் இது ஒரு கேலி கூத்தாகிவிடும். நம்முடைய தேவன் குழப்பத்தின் தேவன் அல்ல. பேசிய அந்த 120 பேரும் கலிலேயர்கள். அவர்கள் தங்கள் பாஷையிலேதான் பேசினார்கள். ஆனால் அதை கேட்ட அந்த 17 நாட்டினரும் தங்கள் தங்கள் ஜென்ம பாஷையில் கேட்டார்கள். இந்த 17 நாட்டினரும் சுவிசேஷத்தை கேட்கும்படி, தங்கள் தங்கள் பாஷையில் கேட்கத்தக்கதாக இந்த அற்புதம் ஆவியானவரால் நடப்பிக்கப்பட்டது. பாருங்கள் அந்தவேளை அங்கு பேதுரு பதினொருவரோடும்கூட நின்று : நீங்கள் நினைக்கிறப்படி இவர்கள் வெறிக்கொண்டவர்கள் அல்ல. தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறியது. மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், என்னுடைய ஊழியக்காரர் மேலும் என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று தீர்க்கத்தரிசனமாக கூறினானே என்றான். அப்பொழுது பேதுரு எபிரேய பாஷையில் தான் பேசியிருக்க வேண்டும் என்றால் அது அவனுடைய தாய் மொழி. ஆனாலும் அவனுடைய பிரசங்கத்தை கேட்ட 17 நாட்டு ஜனங்களும் தங்கள் தங்கள் ஜென்ம பாஷையில்தான் கேட்டிருக்க வேண்டும். பேதுரு தன் பிரசங்கத்தை 17 அந்நிய மொழிகளில் பேசியிருக்க முடியாது. அவன் எபிரேயன் மேலும் அவன் ஏதோ ஒரு மொழியில்தான் பேச முடியும். ஆனால் அவன் பேசியதை 17 நாட்டு மக்களும் தங்கள் தங்கள் ஜென்ம பாஷையில் கேட்டு தங்களுடைய இருதயத்திலே குத்தப்பட்டார்களே? அந்த 17 நாட்டவர்கள் கர்த்தருடைய வசனத்தை கேட்டார்கள், 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். பிரியமானவர்களே நீங்கள் இதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் வேதத்தை ஆராய்ந்து பாருங்கள், ஆராய்ச்சி செய்யாதிருங்கள். அந்த 120 பேரும் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று புரிந்துக்கொள்ள முடியாத பாஷையில் எவ்வாறு பேசியிருக்க முடியும்?

72. கவனியுங்கள் : ஒரு மனுஷன் செவிடனாகவோ அல்லது ஊமையனாகவோ இருந்து கேட்கமுடியாமல், பேச முடியாமல் இருந்தால் அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்களால் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ள முடியாதா? ஆக பரிசுத்த ஆவி என்பது அபிஷேகம். இந்த அபிஷேகத்தை செவிடனோ, குருடனோ, ஊமையனோ யாவரும் பெற்றுக்கொள்ள முடியும். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு அந்நிய பாஷை மாத்திரமே அடையாளம் என்றால் அவர்கள் அந்த கிருபையை இழந்துப் போவார்களே? அப்படியானால் செவிடர்கள், ஊமையர்கள் பரிசுத்த ஆவியை பெற முடியாதா? ஆக பிரியமானவர்களே அந்நிய பாஷை பேசுதல், அர்த்தம் உரைத்தல், போன்ற விஷயங்கள் அனைத்தும் நீங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்ற பிறகு, கிறிஸ்துவின் சரீரத்துக்குள் வந்தபிறகே, உண்டாகின்றன. இந்த வரங்கள் அனைத்தும் கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ளன. பரிசுத்த ஆவி என்பது ஒரு அபிஷேகம். அந்த அபிஷேகத்தை நீங்கள் பெறும்போது அந்நிய பாஷையை பேச வேண்டும் என்பது ஸ்தாபன சபைகளின் உபதேசம். இதற்கு வேதவாக்கியங்களில் எங்கும் ஆதாரங்கள் இல்லை. இந்த உபதேசத்தை எங்கும் காண முடியாது. ஆனால் இதற்கு ஸ்தாபன சபை புத்தகங்களில் மாத்திரமே இடம் உண்டு. அந்நிய பாஷைகள் பேசுதல், அர்த்தம் உரைத்தல் போன்ற வரங்கள் அனைத்தும் நீங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றபின், நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் வந்தபிறகே உண்டாயின. ஏனென்றால் வரங்கள் யாவும் கிறிஸ்துவின் சரீரத்தில் தான் உள்ளன, அதற்கு வெளியே கிடையாது. ஆனால் பெந்தகொஸ்தே ஸ்தாபன சபையினர் அந்த அபிஷேகத்தை பெறும்போது அந்நிய பாஷை அடையாளத்துடன் தான் பெற முடியும் என்கிறார்கள். அது தவறு, அது பேய்தனத்துக்கடுத்தது. வெள்ளை அங்கி அணிந்து ஊரை ஏமாற்றுகிறார்கள்.

73. நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷையில் பேசக்கேட்கிறோமே, (Every man heard them speak in his own language) இது எப்படி என்றார்கள்? ஆனால் பேசியவர்கள் வெவ்வேறு பாஷைகளில் பேசினதாக கூறப்படவில்லை. ஆனால் கேட்டவர்கள் வெவ்வேறு பாஷைகளில், அவரவர்கள் பாஷைகளில் கேட்டனர். இது ஆங்கிலத்தில் How hear we every man in our tongue where in we were born. நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷையில் கேட்கிறோம், இது எப்படி? என்னும் அர்த்தத்தில்தான் ஆங்கிலத்தில் உள்ளது. ஆனால் தமிழ் வேதாகமத்தில் இவர்கள் பேச கேட்கிறோமே என்று உள்ளது. ஆக இந்த தமிழ் மொழிப்பெயர்ப்பு தவறு என நாம் உறுதி செய்யலாம்.

74. கவனியுங்கள் : பரிசுத்த ஆவியின் வரங்களில் வித்தியாசங்கள் உண்டு. (1கொரி.12:4, 8-10) வரை தியானியுங்கள். ஒன்பது வரங்களைக்குறித்து இங்கு சொல்லப்பட்டுள்ளது. இது எட்டு மற்றும் ஒன்பது வரங்கள் : பற்பல பாஷை பேசுதல், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல் ஆகும். ஆக வரங்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ளன. ஆனால்

நீங்கள் எப்படி அந்த சரீரத்திற்குள் வருகிறீர்கள்? நீங்கள் அந்நிய பாஷை பேசி அந்த சரீரத்துக்குள் வருவதில்லை. தீர்க்கத்தரிசனம் பேசியோ, வியாதியஸ்தர்களை குணமாக்கியோ, அற்புத அடையாளங்களை செய்தோ, வேதாகம கல்லூரியில் படித்து பல பட்டங்கள் பெற்றோ கிறிஸ்துவின் சரீரத்திற்குள் வருவது இல்லை. மாறாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுவதினால் அந்த சரீரத்துக்குள் வருகிறீர்கள். ஆக நாம் எல்லாரும் ஒரே ஆவியினால் அதாவது பரிசுத்த ஆவியினால் அந்த சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு இந்த வரங்களை அடைகிறோம். ஒருவன் பரிசுத்த ஆவியினால் ஒருமுறை நிறையப்பட்டால் அவன் அதை இழந்துப்போக முடியாது. ஏனென்றால் அது ஒரு முத்திரை. நாம் ஆவியை பகுத்தறியும் வரங்களை கொண்டவர்களாகயிருக்க வேண்டும். அநேக சமயங்களில் பொல்லாத ஆவிகள் சபைகளுக்குள் நுழைந்துவிடுகின்றன. பொல்லாத ஆவி இல்லாத ஒரு சபையும் இல்லை. அது மணவாட்டி கூடாரமாக இருந்தாலும் சரி, அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபையாக இருந்தாலும் சரி, அது ஏல்பெத்தேல் சபையாக இருந்தாலும் சரி, அது பிரன்காம் கூடாரமாக இருந்தாலும் சரி, பொதுவாக அது எவ்வளவு பிரபலமான சபையாக இருந்தாலும் சரி அங்கு சாத்தான் உண்டு. எனென்றால் தேவபுத்திரர்கள் ஒன்று கூடும்போது சாத்தான் அவர்கள் நடுவில் வருகிறான்.(யோபு.1:6) சாத்தான் இல்லாத இடமும் இல்லை. சாத்தான் எல்லாயிடங்களிலும் இருக்கிறான். நம்முடைய வீடுகளிலும் இருக்கிறான்.

75. பரிசுத்த ஆவியினால் நிறைந்தவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவார்கள். அவர்கள் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள். மரணமடைந்த மற்றவர்கள் ஆயிரம் வருஷம் முடியும் அளவும் உயிரடையவில்லை. ஆயிரம் வருட அரசாட்சிக்குப்பின்பு, இரண்டாம் உயிர்தெழுதல், பின்பு வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு. மரிக்கும் குழந்தைகள் அவருடைய பெற்றோர் யாராக இருந்தாலும், ஒருவேளை ஒரு குடிகாரனாக இருந்தாலும், கொலைகாரனாக இருந்தாலும், விபசாரகாரனாக இருந்தாலும், அவனுடைய குழந்தைகள் இரட்சிக்கப்படுகின்றனர். குழந்தைகள் பாவத்தில் பிறந்தனர். அது உண்மை தான். ஆனால் அந்த குழந்தைகள் பாவத்தை அறியவில்லை. அவர்கள் பாவம் செய்யவும் இல்லை. இப்படியிருக்க அந்த குழந்தை பாவத்திற்கு மன்னிப்பை பெற்றுக்கொள்ள தேவையில்லை. அது தவறோ / பாவமோ ஒன்றுமே செய்யவில்லை. அதனிடத்தில் விசுவாசமோ, அவிசுவாசமோ ஒன்றும் காணப்படவில்லை. எனவே அது பரலோகத்திற்கு செல்வதற்கு முற்றிலும் விடுதலையடைந்துள்ளது.

**76. பொதுவாக நாம் பரிசுத்த ஆவியைக்குறித்து அறிந்துக்கொள்ள வேண்டியது :**

1. பரிசுத்த ஆவியே நித்திய ஆவி -Eternal Spirit. (எபி.9:14)
2. பரிசுத்த ஆவியே எங்கும் வியாபித்திருக்கும் ஆவி. Omnipresent. (சங்.139:7-16)
3. பரிசுத்த ஆவி எல்லாவற்றையும் அறிகிறவர். OmniScient. (1கொரி.2:10)
4. பரிசுத்த ஆவியினால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. Omnipotent. (லூக்.1:37)
5. பரிசுத்த ஆவி தேவ ஆவியின் பலம். Power of the Holy Spirit, Power of the Spirit of God. (ரோ.15:13,19)
6. பரிசுத்த ஆவி பரிசுத்தவான்களுக்குள் வாசம் பண்ணுகிறார். (யோ.14:17, 1கொரி.14:25, 1கொரி.3:16, 1கொரி.6:19) பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ள ஒருவன் தன் பாவங்களுக்கு மனந்திரும்பி தன் பாவங்களை அறிக்கையிட்டு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற வேண்டும். அதன்பின்பு தான் அவன் பரிசுத்த ஆவியை பெறுகிறான்.(அப்.2:38, 4:12, லூக்.24:45-49) பரிசுத்த ஆவி உங்களுக்குள். அது என்னவெனில் நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள். அதாவது தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார்.(1கொரி.3:16) அப்பொழுது பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து, இயேசு சொன்ன எல்லாவற்றையும் நினைப்பூட்டுவார். (யோ.14:26) பரிசுத்த ஆவி உங்களுக்கு போதிப்பதோடு மாத்திரம் அல்ல, உங்களைக்கொண்டு பிறருக்கு போதிக்கவும் செய்கிறார். உங்களது பிஷப், இண்டர்நேஷனல் பிரசங்கி, தலைமை போதகர், பாஸ்டர் போன்றவர்கள் சொன்னவற்றை நினைப்பூட்டுவதற்காக பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டதல்ல.
7. பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்கு பரிசுத்த ஆவியை கொடுப்பது அதிக நிச்சயம். (லூக்.11:13) தேவன் நமக்கு பரிசுத்த ஆவியை தந்தருளுகிறார். (1தெச.4:8)
8. ஒருவன் விசுவாசிக்கும் பொழுது பரிசுத்த ஆவியை பெறுவதில்லை. மாறாக விசுவாசித்தப்பிறகே பரிசுத்த ஆவியை பெறுகிறான்.
9. பரிசுத்த ஆவியை பெற்ற ஒருவன் எந்த சூழ்நிலையிலும், எக்காலத்திலும், எந்த நிலைமையிலும் அதை இழந்து போக முடியாது.
10. பரிசுத்த ஆவி உன்னில் - தேவன் உன்னில் நிரந்தரமாக.(எபே.4:30)
11. பரிசுத்த ஆவி, தேவனுடைய வார்த்தை உன்னில். தேவனுடைய ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தை நமக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவர் மாத்திரம் காத்துக்கொள்ளமுடியும். (2தீமோ.1:13,14)
12. பரிசுத்த ஆவியின் வரங்கள் உன்னில் காணப்படவேண்டும். தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுக்கப்படும் பரிசுத்த ஆவியின் வரங்கள் (எபி.2:4). பரிசுத்த ஆவியின் வரங்களுக்காக நாம் உபவாசிக்க, ஜெபிக்க தேவையில்லை.
13. பரிசுத்த ஆவி உன்னை முற்றிலுமாக ஆட்கொண்டு, உன்னை தேவன் வாசம் செய்யும் ஆலயமாக மாற்றுகிறது. (1கொரி.3:6,17)
14. பரிசுத்த ஆவி - தேவன் உன்னில், கர்த்தர் உன்னில், கிறிஸ்து உன்னில். (1யோ.3:24, 4:13)
15. பரிசுத்த ஆவியினாலேயன்றி ஒருவனும் இயேசுவை கிறிஸ்து என்று சொல்லக்கூடாது. (1கொரி.12:3)
16. பரிசுத்த ஆவியினால் மரியாள் கர்ப்பவதியானாள். (மத்.1:18)

17. பரிசுத்த ஆவியினால் மறுப்பிறப்பு அடைந்தவர்கள் மாத்திரமே. முதலாம் உயிர்தெழுதலில் பங்கு பெறுவார்கள். (வெளி.20:5)

18. பரிசுத்த ஆவியின் ஏவுதலினால்தான் பரிசுத்த வேதாகமம் எழுதப்பட்டது.(2தீமோ.3:16)

19. பரிசுத்த ஆவி என்பது ஒரு பெயர் அல்ல. இது தெய்வதத்துவம். ஆவிக்கு பெயர் சூட்ட முடியாது.

20. பரிசுத்த ஆவி ஒரு முத்திரை.(எபே.4:30)

21. பரிசுத்த ஆவி பெற்றவர்கள் இருதயத்தில் விருத்தசேதனம் பெற்றவர்கள்.

22. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவி ஊற்றப்படும் நாளுக்காக காத்திருந்தார்கள். அது ஊற்றப்பட்டு விட்டதால் இனி நாம் பரிசுத்த ஆவிக்காக காத்திருக்க தேவையில்லை. பெந்தெகொஸ்தே சபையினரின் காத்திருப்புக் கூட்டம் பிசாசுக்காகவேயன்றி தேவனுடைய ஆவிக்காக அல்ல.

23. பரிசுத்த ஆவி ஊழியத்தை செய்ய கொடுக்கப்படும் வல்லமை.(அப்.1:8)

24. தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பும் பரிசுத்த ஆவி ஒருவன் மேல் இறங்கினார். (அப்.10:44).

25. தேவன் பரிசுத்த ஆவியாக உன்னில் தங்குவது அவர் உனக்கு கொடுக்கும் ஒரு வெகுமதி.

26. பரிசுத்த ஆவியே தேவன். தேவன் ஆவியாயிருக்கிறார். (யோ.4:24)

27. பரிசுத்த ஆவி உன் பாத்திரத்தை நிரப்பும் எண்ணெய். (மத்.25அதி)

28. பரிசுத்த ஆவி உன்னை ஒரு புது சிருஷ்டியாக மாற்றுகிறது. பழையவைகள் யாவும் ஒழிந்தன. இப்பொழுது எல்லாம் புதிதாகின. (2கொரி.5:17)

29. பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்து காட்டுவார்கள். அவர்களிடத்தில் ஆவியின் கனிகள் காணப்படும். (கலா.5:22,23)

30. அப்போஸ்தலர்கள் ஒருவர் மேல் கைகளை வைப்பதினால் அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றார்கள். (அப்.19:6)

31. பரிசுத்த ஆவி - தேவன் உன் இருதயத்திலிருந்து கிரியை செய்வதாகும்.

32. பரிசுத்த ஆவி உன் வாழ்க்கையில் உனக்கு வழிகாட்டி. (யோ.16:13) நீங்கள் பரிசுத்த ஆவியை பெற்றிருந்தால் வலது புறமாய் சாயும்போதும், இடது புறமாய் சாயும்போதும் ; வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்கு பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும். (ஏசா.30:21)

33. பரிசுத்த ஆவியை பெற்றவனே உண்மையான கிறிஸ்தவன். மற்றவர்கள் அனைவரும் பேர் கிறிஸ்தவர்களே, மாய்மால கிறிஸ்தவர்களே. அவர்களுக்கும் தேவனுக்கும் எந்தவிதமான சம்பந்தம் இல்லை.

34. பரிசுத்த ஆவி இருதயத்தை பகுத்தறிகிறது. (அப்.8:20-23)

35. பரிசுத்த ஆவி உன்னை சத்தியத்திற்குள் வழிநடத்துகிறது. (யோ.16:13)

36. பரிசுத்த வேதாகமத்தில் உள்ள புத்தகங்களை எழுதுவதற்கு பரிசுத்த ஆவியினால் தூண்டப்பட்டார்கள். அப்.பவுல் காகிதத்தில் பேனாவைக்கொண்டு எழுதினாலும் அதை எழுதுவதற்கு பரிசுத்த ஆவியினால் அவன் ஏவப்பட்டான். பரிசுத்த ஆவியே அவனை எழுத வைத்தது.

37. தேவனுடைய ஆவி மகிமையுள்ள ஆவியானவர். Spirit of Glory and of God (1பேது.4:14)

38. பரிசுத்த ஆவி மறுபிறப்பு. (யோ.3: 5,6, 1யோ 5: 4)

39. வேதவாக்கியங்கள் எல்லாம் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டது. (2தீமோ.3 :16)

40. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள். (2பேது.1:21) அவர்கள் தங்களுடைய சுயமாக எதையும் பேசவில்லை. பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள். (1பேது.1:12) இன்று வேதாக கல்லூரிகளில் படித்து, பட்டங்கள் பெற்று பிரசங்கிக்கிறார்கள்.

41. பரிசுத்த ஆவி ஞானத்தை கொடுக்கும் ஆவி. (1கொரி.12:8, ஏசா.11:2)

42. தேவனுடைய ஆவியினால் / பரிசுத்த ஆவியினால் அற்புத அடையாளங்கள் நடந்தன. (மத்.12:28, ரோ.15:18)

43. தேவனுடைய சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவியே கண்காணிகளை நியமிக்கிறார். (அப்.20:28, அப்.13:2,4)

44. ஊழியத்தின் பாதையில் செல்லவேண்டிய இடங்களுக்கு பரிசுத்த ஆவியே வழிநடத்துகிறார். (அப்.13:2)

45. ஆவியானவர் கொடுக்கும் வரங்கள் ஊழியத்தின் பாதையில் அவனவனுடைய பிரயோஜனத்திற்காக கொடுக்கப்படுகிறது. பாருங்கள் வரங்களில் வித்தியாசங்கள் உண்டு. வரங்கள் மொத்தம் 9 ஆகும். அந்த ஒன்பது வரங்களையும் ஒரே ஆவியானவரே நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்கு பகிர்ந்து கொடுக்கிறார். (1கொரி.12:4-11) நீங்கள் அந்நிய பாஷைக்காக காத்திருக்க ஜெபிக்க, உபவாசிக்க தேவையில்லை. அதை உங்களுக்கு பிரயோஜனமானது என்று ஆவியானவர் நினைத்தால் அதை உங்களுக்கு தந்தருள்வார். உங்களுக்கு வரங்களை கொடுப்பது தேவனுடைய சித்தம். அது உங்களுடைய விருப்பு வெறுப்புக்கு உட்பட்டது அல்ல.

46. பரிசுத்த ஆவி ஆறுதலின் ஆவி. (அப்.9:31,2கொரி.1:3)

47. பரிசுத்த ஆவி உங்களை பரிசுத்தமாக்குகிறார். (ரோ.15:16)

48. பரிசுத்த ஆவி நமக்கு சாட்சி. (எபி.10:15)

49. பரிசுத்த ஆவி பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு குறித்து கண்டித்து உணர்த்துகிறார். (யோ.16:8)

50. பரிசுத்த ஆவி நம்மை சாட்சியாக நிலை நிறுத்துகிறார். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பலன் அடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியா முழுவதிலும் பூமியின் கடைசி பரியந்தமும் இயேசுவக்கு சாட்சியாக இருப்பீர்கள். (அப்.1:8).

51. இயேசுவின் சீஷர்கள் கூடியிருந்த இடத்தில் வந்து அவர்கள் நடுவிலே நின்று அவர்கள் மேல் ஊதி பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளுங்கள் என்றார். (யோ.20:22)

52. தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியும் இருக்கிறார். உங்களாலே மகிமைபடுகிறார். (1பேது.4:14)

53. கிறிஸ்துவின் சுவிசேஷம் தேவவசனத்தோடு மாத்திரமல்ல. வல்லமையோடும். பரிசுத்த ஆவியோடும், முழுநிச்சயத்தோடும் வருகிறது. (1தெச.1:5)

54. ஒருவன் பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே திருவசனத்தை ஏற்றுக்கொள்கிறான். (1தெச.1:6)

55. பரிசுத்த ஆவியினால் தேவனுடைய அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது. (ரோ.5:5)

56. பரிசுத்த ஆவி தீர்க்கதரிசிகளைக்கொண்டு பேசுகிறார். (அப்.28:27) 61. தீர்க்கதரிசிகளை கொண்டு மாத்திரமே கர்த்தர் உரைக்கிறதாவது என்பது வருகிறது. (அப்.21:11) தீர்க்கதரிசன ஊழியம் என்று ஒன்று இல்லை.

57. அந்நாட்களில் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர்கள் பர்னபாஸ் (அப்.11:24), யோவான் ஸ்நானன் (லூக்.1:15), எலிசபெத் (லூக்.1:41), சகரியா (லூக்.1:67), ஸ்தேவான் (அப்.7:55)

58. பரிசுத்த ஆவி வசனத்தை கேட்ட யாவர் மேலும் விழுந்தது. (அப்.11:15, 10:44,45)

59. இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தை கேட்டு, விசுவாசிகளானபிறகு வாக்குதத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியினால் அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) முத்திரைப்போடப்படுகிறீர்கள். (எபே.1:13) மீட்பின் நாளுக்கென்று முத்திரையாக பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவி.

60. சபைக்கு அவசியமான காரியங்கள் / நடத்தைகள் குறித்து பரிசுத்த ஆவியின் ஆலோசனை (அப்.15:28,29)

61. பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் மாத்திரமே அவரில் நிலைத்திருக்கிறான். (1யோ.3:24)

62. பரிசுத்த ஆவியினால் மாத்திரமே ஒருவன் சத்தியத்திற்கு கீழ்படிந்து தன் ஆத்துமாவை சுத்தமாக்கிக்கொள்ள முடியும். (1பேது.1:22)

63. பரிசுத்த ஆவி மாத்திரமே உங்களுக்குள் ஐக்கியத்தை கொண்டுவர முடியும். (பிலி.2:1, 1யோ.1:7)ஆதலால் ஊழியர்களின் ஐக்கிய கூட்டம் தேவையில்லாத ஒன்று.

64. பரிசுத்த ஆவியினாலே மாத்திரமே ஒருவன் உள்ளான மனுஷனில் பலப்பட முடியும். (எபே.3:16)

65. பரிசுத்த ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியம். (எபே.2:18) பிதாவை அறிந்துக்கொள்வதற்கான ஞானத்தையும், தெளிவையும் பரிசுத்த ஆவியே நமக்கு தந்தருள வேண்டும். (எபே.1:17)

66. நாம் பரிசுத்த ஆவியின் கூடாரம் என்று நாம் கூடிவரும் சபையை அழைக்கிறோம். பரிசுத்த ஆவியின் கூடாரம் என்று ஒன்றும் கிடையாது. சபைக்கு வரும் தனிப்பட்ட நபர்களே, பரிசுத்த ஆவியின் கூடாரமாயிருக்கின்றனர். அவர்களே பரிசுத்த ஆவியை தங்களுக்குள் கொண்டுள்ள கூடாரங்கள். மாம்சசரீரத்தை கொண்டுள்ள மக்கள் கூட்ட சபை அல்ல.

67. பரிசுத்த சபை என்று நீங்கள் எந்தவொரு சபையையும் கூற முடியாது. ஸ்தாபனத்தாரும் கூற முடியாது. அங்கு பரிசுத்த ஆவியைக்குறித்து பிரசங்கிக்கப்படலாம். அங்கு நல்லவர்கள், கெட்டவர்கள், அவலட்சணமானவர்கள் போன்றவர்களை காணலாம். ஆதலால் எந்தவொரு சபையையும் பரிசுத்தமானதென கூற முடியாது. பரிசுத்த ஆவி ஒரு தனிப்பட்ட நபர் மேல் ஊற்றப்படுகிறது.

68. இன்று பரிசுத்த ஆவியை குறித்து அதிகமாக குழப்பங்கள் சபைகளில் காணப்படுகின்றன. ஏனென்றால் பரிசுத்த ஆவியை குறித்து வேதவாக்கியங்களின் படி சரியாக போதிக்கப்படவில்லை. இது சரியாக போதிக்கப்படாததால் ஏற்படுகிற குழப்பமே.

**77. பரிசுத்த ஆவியினால் பெறும் ஆசீர்வாதம்.**

அ. நான் இஸ்ரவேல் வம்சாத்தார் மேல் என் ஆவியை ஊற்றினபடியினால் என் முகத்தை இனி அவர்களுக்கு மறைக்க மாட்டேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் கூறுகிறார். (எசே.39:29) பரிசுத்த ஆவியை பெற்றவர்களுக்கு தேவன் தம்முடைய முகத்தை மறைப்பதில்லை.

ஆ. கிறிஸ்துவுக்குள் நம்மை முத்தரித்து நம்முடைய இருதயங்களில் ஆவி என்னும் அச்சாரத்தை கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவுக்குள் நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே. (2கொரி.1:21-22)

இ. ஆவியைக்குறித்து சொல்லப்பட்டுள்ள வாக்குதத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெற்றுள்ளோம். Received through faith (கலா.3:14)

ஈ. அவருடைய கட்டளைகளை கைகொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான். அவரும் அவனில் நிலைத்திருக்கிறார். அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்கு தந்தருளின ஆவியினால் அறிந்திருக்கிறோம். (1யோ.3:24)

உ. அவர் தம்முடைய ஆவியை நமக்கு தந்தருளினதினாலே நாம் அவரிலும், அவர் நம்மிலும் நிலைந்திருக்கிறதை அறிந்திருக்கிறோம். (1யோ.4:13)

78. வாருங்கள் முடிவாக தேவன் ஒரு ஆவி. அவரை உண்மையாய் தொழுதுக்கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும். (யோ.4:24) நான்கு சுவற்றுக்குள் உட்காந்துக்கொண்டு அல்லேலூயா ஸ்தோத்திரம் சொன்னால் அது போதாது. ஆதலால் பயத்தோடும், பக்தியோடும் பரிசுத்த அலங்காரத்துடனே தேவனுக்கு பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையை பற்றிக் கொள்ள வேண்டும். மேலும் ஒரே ஆவி உண்டு. (ஏபே.4:4) அந்த ஆவியே தேவன். (யோ.4:24) இவரே பிதா. (ஏசா.63:16) அந்த தேவனே கர்த்தர். (ஆதி.2:4) இவரே பிதா. (ஏசா.63:16, 64:8) இந்த கர்த்தரே இயேசு. (2கொரி.4:5) இவரே குமாரன் (மத்.1:25) இந்த இயேசுவே கிறிஸ்து (அப்.5:42, 18:28) இந்த இயேசுவே கர்த்தராகிய கிறிஸ்து (லூக்.2:11) இந்த கிறிஸ்துவே பரிசுத்த ஆவி (ரோ. 8:26,34)

ஆக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார். (1யோ.5:20) இவரில் / கிறிஸ்துவில் தேவத்துவம் சரீரபிரகாரமாக பூரணமாய் வாசமாயுள்ளது. (கொலோ.2:9) பரிசுத்த ஆவி மூவரில் ஒருவரல்ல. இவரும் ஒரு தேவன் அல்ல, மாறாக இவரே தேவன். சபைக்காலத்தில் பரிசுத்த ஆவி சபையைக் குறித்தும், நீதியை குறித்தும், நியாயத்தீர்ப்பை குறித்தும் உலகத்தை கடிந்து உணர்த்துகிறார். உலகமானது இயேசுவை : பிதா என்று விசுவாசியாததினால், (யோ.8:24,27,28) உங்கள் பாவங்களினாலே சாவீர்கள் என்றார். உலகம் இனி இவரை காணாதபடிக்கு இவர் பிதாவினிடத்திற்கு போகிற படியினால் நீதியை குறித்தும் (யோ.14:16-20 16:4-8) இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே (யோ.12:31, 14:30, வெளி.2:10) நியாயத்தீர்ப்பைக்குறித்தும் கண்டித்து உணர்த்துகிறார். (யோ.16:5-11) ஆதலால் ஆவியானவர் சபைகளுக்கு அதன் தூதர்கள் மூலமாக சொல்லுகிறதை இடறுகிறவர்கள் கேட்க மாட்டார்கள். (வெளி.2:7, 11,17,29, வெளி.3:6,13,22) அப்படியானால் நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள் கேட்டார்கள், விசுவாசித்தார்கள் (அப்.13:48) அவிசுவாசிகள் இடறினார்கள், திரித்துவ ஸ்தாபன சபை மக்கள் இடறினார்கள். (1பேது.2:8) அவர்கள் அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களுமாயிருக்கிறார்கள்.

79. இந்த நிருபத்தை வாசிக்கிறவன் சிந்திக்கக்ககடவன். இதை தொடக்கம் முதல் முடிவு வரை தியானித்தப் பின்பும் நீங்கள் உங்கள் அதனாசியஸ் திரித்துவ கோட்பாட்டில் அசைவாடிக் கொண்டிருப்பீர்களானால், பரிசுத்த ஆவிக்கு ஆள்தத்துவம் கிடையாது என்ற இருமாப்பில் இருப்பீர்களானால், ஒரு வேளை நீங்கள் ஒரு சபையின் பிஷப்பாக இருக்கலாம். தலைமை போதகனாக இருக்கலாம். இண்டர் நேஷ்னல் பிரசங்கியாக இருக்கலாம். நீங்கள் M.A.,M.Ed., பட்டதாரியாக இருக்கலாம், ஆனால் பரிசுத்த ஆவி அபிஷேகத்தை இன்னுமாக நீங்கள் பெறவில்லை. நீங்கள் ஒரு பாரம்பரிய கிறிஸ்தவ விசுவாசியேயன்றி பரிசுத்த ஆவியினால் மறுபிறப்பு அடையவில்லை. பரிசுத்த ஆவியை பெறுவதற்கு தேவனால் நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமில்லை. ஏனென்றால் தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும், விசுவாசமும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கே உண்டாகும். (தீத்.1:3) பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்பம் உங்களை மோசம் போக்கி மரணத்தைக் கொண்டு வரும் அதனாசியஸ் திரித்துவ விசுவாச பிரமாணத்தைக் கொண்டு, சாத்தான் தந்திரமாக ஏவாளை வஞ்சித்ததுபோல கிறிஸ்துவை பற்றிய / பரிசுத்த ஆவியை பற்றிய உண்மையிலிருந்து உங்களை விலகும்படி செய்துவிட்டான். நீங்களோ சத்தியத்தை அறிந்திருந்தால், அந்த சத்தியம், நிச்சயம் உங்களை அவிசுவாசத்திலிருந்து விடுதலையாக்கும். மற்றபடி நீங்கள் உங்கள் பாவங்களிலே சாவீர்கள். நான் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய வார்த்தையிலுள்ள மகத்துவங்களை என் பலவீனத்திலே பலன் கொண்டு இங்கு எழுதியுள்ளேன். தேவன் ஒருவர் (God is one) (கலா.3:30) அவர் அநாதி தேவன் (Eternal God) (உபா.33:27). தேவன் ஆவியாயிருக்கிறார் (God is a Spirit) (யோ.4:24) அந்த ஆவி நித்திய ஆவி - (Eternal Spirit) (எபி.9:14). தேவத்துவத்தின் பூரணமெல்லாம் சரீர பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது. (கொலோ.2:9) இயேசுவே கிறிஸ்து (அப்.5:42) ஆக தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் (பிதாவின் தன்மை, குமாரன் தன்மை, பரிசுத்த ஆவியின் தன்மை) சரீரப்பிரகாரமாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கிறது. இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார் (1யோ.5:20). இந்த மகத்துவத்தை அற்பமாய் எண்ணுகிறவர்களுக்கு ஐயோ! தேவனுடைய ஆக்கினைத் தீர்ப்புக்கேதுவாக நீங்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ள தேவனுடைய வாக்கியங்களை விசுவாசியாமல் போனால் உங்களுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்காது. அப்படியாக்க மாட்டாது. இந்த 2020 ஆம் ஆண்டில் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் கூட இருந்து, அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருந்து, பரிசுத்த ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை வழிநடத்துவாராக ஆமென். (வெளி.22:21)

பிப்ரவரி 2020.

கிறிஸ்துவின் அன்பில்
சகோ. காலேப் யோசுவா

Publication Information to the Department of Posts

**PRINTED BOOK**
Subject to **Clause No. 128 P.O. GuideRules.**
Postal Licence, Registration, Permission not required to mail it. **It is an Ordinery Post.**
**Current Postal Rate. Rs. One per every 100 gms**
**To:Dr.Rev,Pr,Bro,Sis.,**

**If Undelivered**
**Please Return to**

**Caleb Joshua**
**32, Jemi Ethiraj Nagar**
**Erayamangalam Road**
**Mappedu, Perambakkam (Via)**
**Thiruvallur District – 631402.**
**Mobile No. 9444701953**

**This Printed Book, Yesuvae Vaarum Edited, Owned and Published by Caleb Joshua from his above address and Printed by V.R. Sermakani, Sakthi Process, 2/1F Kummalamman Kovil St, Tondiarpet, Chennai. 600 081.Ph: 044- 25956006.**